# ஸ்ரீ பால்முனீஸ்வரர்

சின்ன ஓபுளாபுரம்



## மஞ்சுளா தங்கராஜ்

# எங்கள் முன்னோர்கள்




**C.தங்கவேல் செட்டியார்** B.A.,Lit.,
பணி நிறைவு தலைமை ஆசிரியர்,
முத்தையாலுபேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை – 600 001.



**C.ராஜகோபால் செட்டியார் - C.R.ரங்கநாயகி அம்மாள்**
சின்ன ஓபுளாபுரம்

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டி எல்லாம் வல்ல இறைவன் திருவருளால்
**ஸ்ரீபால் முனீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக மலராக**
பக்தர்களுக்கு இந்த நூலை ஆலயம் சார்பில் அன்பளிப்பாக வழங்குகிறோம்.



**C.P.சரோஜினி - C.பிரகாசம் செட்டியார்**
சின்ன ஓபுளாபுரம்



**C.M.சந்தானலட்சுமி - C.R.மோகன்**
சின்ன ஓபுளாபுரம்

















ஆலய திருப்பணியில் எங்கள் குடும்பத்தினர்



மூலவர் பால் முனீஸ்வரர்



வித்யா கணபதி




பாலமுருகன்



பக்த ஆஞ்சநேயர்



சீரடி சாய்பாபா



நாகாத்தம்மன்




● சின்னஓபுளாபுரம் கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்

பஸ் ரூட் : சென்னை மாதவரம் ஆந்திரா பேருந்து நிலையத்திலிருந்து

**90, 90A, 103, 103N, 114, 200**

பஸ் ஸ்டாப் : மைலேஜ் (அ) எளாவூர்

## வாழ்க்கையை பற்றி பகவத் கீதை சொல்லும் பாதை!

வாழ்க்கை ஒரு சவால் அதனை சந்தியுங்கள்.

வாழ்க்கை ஒரு பரிசு அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு சாகசப் பயணம்
அதனை மேற்கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு சோகம் அதனை கடந்து வாருங்கள்.

வாழ்க்கை ஒரு துயரம் அதனை தாங்கிக் கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு கடமை அதனை நிறைவேற்றுகள்.

வாழ்க்கை ஒரு விளையாட்டு அதனை விளையாடுங்கள்.

வாழ்க்கை ஒரு விநோதம் அதனை கண்டறியுங்கள்.

வாழ்க்கை ஒரு பாடல் அதனை பாடுங்கள்.

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதனை
பயன்படுத்தி கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு பயணம் அதனை
புகழுடன் முடித்துவிடுங்கள்.

வாழ்க்கை ஒரு உறுதிமொழி அதனை நிறைவேற்றுங்கள்.

வாழ்க்கை ஒரு காதல் அதனை அனுபவியுங்கள்.

வாழ்க்கை ஒரு அழகு அதனை ஆராதியுங்கள்.

வாழ்க்கை ஒரு உணர்வு அதனை உணர்ந்து கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு போராட்டம் அதனை எதிர்கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு குழப்பம் அதனை விடைகாணுங்கள்.

வாழ்க்கை ஒரு இலக்கு அதனை எட்டிப் பிடியுங்கள்.

# மாணவர்களுக்கான பிரார்த்தனை

அகில அண்டங்களையும் ஆக்கிக் காக்கும் இறைவா! அடியேம் ஆராதித்தும், அர்ச்சித்தும், பாடியும், பரவியும், அடைக்கல மடைந்தோம். அநாதரட்சகா! அறிந்தும் அறியாமலும்' ஆற்றிய பாவங்கள் அனைத்தையும் மன்னித்தருள வேண்டி மஹேஸ்வரா மன்றாடுகின்றோம். எந்நாளும், எப்பாவத்தையும் எண்ணாது செய்யாது. செம்மையோடிருக்க ஏற்ற திறமையும் பிறர்நல சேவைக்கான இயல்பும், ஈந்தருள வேண்டி இறைவனே! இறைஞ்சுகின்றோம்.

உடல் உயிர்க்கும் உறுதுணையாகிய உத்தமா, இகத்திற்கான இடம், பொருள், ஏற்ற வருவாய், பிணியில்லா தீர்க்காயுள், உடை, ஊன், உன்னை மறவா உள்ளமும் உதவி, அல்லல்வழியிலிருந்து தடுத்து ஆட்கொண்டு அருள்புரியமாறு அத்தனே! போற்றுகின்றோம். நானிலத்தில் நாத்திகம், ஆடம்பரம், அநாகரீகம், மயக்க வாழ்வு, வறுமை ஆகியன அகலவும், பருவமழை வேண்டுமளவு பெய்து பயிர்கள் செழிப்படையவும். கஷ்ட நஷ்டமின்றி வாணிகமும், தொழிலும் வளரவம், சர்வேஸ்வரா! மனம், மொழி மெய்களால் வந்திக்கிறோம்.

மாணவர்களாகிய நாங்கள் சுத்தம். ஒழுக்கம், தெய்வபக்தி, ஆசாரம், கடமையுணர்ச்சி ஆகிய நற்பண்புகளை கைக்கொண்டு படிப்பில் மேன்மை பெறவும், வாழ்வில் வளம் பெறவும், பாரதத்தாயின் பண்புள்ள குழந்தைகளாக வாழவும், பகவானே உம்மிடம் யாசிக்கின்றோம். அகில உலகத்திலும் அன்பு நிலவி, ஆனந்தமாய் அனைவரும் வாழவும், பரப்பிரம்மமே! கிருபை செய்யுமாறு பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத் ஸத்.

# ஸ்ரீ பால் முனீஸ்வரர் ஆலயம்

அன்புடையீர்,

தமிழகத்தின் பல கிராமங்களில் ஸ்ரீபால் முனீஸ்வரரை குல தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். தமிழகம் தாண்டி இந்தியாவின் பல மாநிலங்களிலும், பல்வேறு நாடுகளிலும் கண் கண்ட தெய்வமாக கொண்டாடி வணங்குகின்றனர். அத்தகைய பெருமையும் மகிமையும் மிக்க ஸ்ரீபால்முனீஸ்வரரை குல தெய்வமாக எங்கள் முன்னோர்கள் வழிபட்டனர், இன்றுவரை எங்கள் குடும்பத்தினரும் அவரருளால் வழிபட்டு வணங்கி வருகிறோம்.

ஐந்து தலைமுறைக்கு முன் எங்கள் முன்னோர்கள், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம் சின்னஓபுளாபுரம் கிராமத்தில் கிராம தேவதை ஏகவள்ளி அம்மனுக்கு எங்கள் முன்னோர் திரு.ஆறுமுகம் செட்டியார் முன்னிலையில் கோவில் கட்டினார்கள். அப்போது எங்கள் வீட்டின் அருகில் குலதெய்வ மான ஸ்ரீபால்முனீஸ்வரருக்கும் கோவில் கட்ட வேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்கு வந்தது. அதன்படி பால்முனீஸ்வரருக்கு சிறிதாக ஒரு கோவில் எழுப்பினார்கள். இப்படி 1874ஆம் ஆண்டு இத்திருக்கோவில் திறந்த வெளியில் சிறிதாக அமைக்கப்பட்டது.

அன்று முதல் காலம் காலமாக எங்கள் குடும்பத்தினரும், கிராமத்து மக்களும் ஸ்ரீபால் முனீஸ்வரரை வழிபட்டு அனுக் கிரகம் பெற்று வந்தனர். இவரே எங்கள் குலதெய்வம், இவரை அனைவரும் முனுசாமி தாத்தா என்று அன்புடனும், உரிமையுடனும் அழைப்பார்கள், அப்படி எங்கள் வாழ்வோடு ஒன்றிய தெய்வமாக, எங்கள் குடும்பத்தில் ஒருவராக வாழும் தெய்வமாக, எங்கள் அனைவருக்கும் காவல் தெய்வமாக இருந்து எங்களை வழி நடத்திச் செல்கிறார். இக்கோவிலில் பல அற்புதங்களை நடத்தி வரும் சக்தி வாய்ந்த தெய்வமாக இருக்கிறார் பால் முனீஸ்வரர். தன்னை நாடி வரும் பக்தர் களுக்கு வேண்டிய வரங்களை தரும் சக்தி வாய்ந்த தெய்வமாக திகழ்ந்து வருகிறார். கடந்த 25 ஆண்டுகளுக்கு முன் கர்ப்பிணிப் பெண் ஒருவர் தவறுதலாக கோவில் அருகில் உள்ள கிணற்றில் விழுந்து விட்டார். அப்போது ஆள் நடமாட்டம் இல்லாத சமயம், காலையில் விழுந்த அவளை மாலை வரை காவல் தெய்வமாக இருந்து அவர் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்கிறார் இந்த பால் முனீஸ்வரர்.

சுமார் 148 ஆண்டுகள் பழமையானது ஸ்ரீபால்முனீஸ்வரர் கோவில். அவன் இன்றி இவ்வுலகில் அணுவும் அசையாது என்பதற்கு ஏற்ப, என் கனவில் வந்து இக்கோவிலை கட்டும்மாறு உத்தரவிட்டார். அதன்படி 2020 கார்த்திகை மாதம் இக்கோயிலை கட்டும் பணியை நானும் என் கணவரும், எங்கள் உறவினர்களுடன் சேர்ந்து இக்கோவிலை கட்டும் பணியை அவரருளால் மேற்கொண்டோம்.

உருவம் இல்லாமல் இருந்த அவருக்கு, சிற்ப சாஸ்திர முறைப்படி சிலையாக உருவம் வடிவமைக்கப்பட்டது. அத்துடன், சிறந்த முறையில் கலைநயத்துடன் வர்ணங்களுடன் கோபுரமும் அவரருளால் எழுப்பினோம். இந்த ஆலயத்தில் வித்யா கணபதி, பாலமுருகன், நாகாத்தம்மன், சீரடி சாய்பாபா, பக்த ஆஞ்சநேயர் ஆகியோருக்கும் தனிச் சன்னதிகள் அமைத்து, திருப்பணிகள் மிகவும் சிறந்த முறையில் இறையருளால் மஹாகும்பாபிஷேகம் நடந்தேறியது. 2022–ஆம் ஆண்டு ஏப்ரல் 15ம் நாள் மஹா கும்பாபிஷேகம் செய்து அவருடைய உத்தரவை நிறைவேற்றி உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆலயத்தில் வந்து வழிபடுவோர்கள் எல்லா வளமும், நலமும் பெற வேண்டும் எனும் நோக்கில், முனீஸ்வரர் திருவரு ளால் சன்னதிகள் அமைத்தோம். அதற்குரிய வழிபாடுகளை மேற் கொண்டுள்ளோம், பக்தர்கள் அனைவரையும் இத்திருக் கோவிலுக்கு வணங்கி வரவேற்கிறோம். இக்கோயிலை சிறப்பான முறையில் வடிவமைத்து கட்டுமான பணிகளை எந்தவித குறைவும் இன்றி அமைத்துக் கொடுத்த திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த ஸ்தபதிகள் கலைச்செம்மல் S.கீர்த்திவர்மன் மற்றும் K.ஆதித்ய வர்மன் அவர்களுக்கும், சிலைகள் வடிவமைத்துக் கொடுத்த மாமல்ல புரத்தைச் சேர்ந்த திரு.பாஸ்கர் அவர்களுக்கும், கட்டுமான பணிக்கு உதவிய ஏனைய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தன்னை நாடிவரும் பக்தர்களின் வேதனைகளை போக்கி, நலமுடன் வாழவைப்பவர் பால்முனீஸ்வரர். அவரின் ஆலயம் வரும் பக்தர்களுக்கு வழிகாட்டும் சிறு முயற்சியாக இந்நூலை ஆக்கி வெளியிட்டுள்ளோம். முனீஸ்வரர் நம்மை வழிநடத்தி செல்லுமாறு பிரார்த்திக்கிறோம்.

அன்புடன்

**மஞ்சுளா தங்கராஜ்.**

# எங்கள் முன்னோர்கள் வரலாறு

அன்புடையீர்,

எங்கள் குடும்பத்தை பற்றி கூற வேண்டுமானால், ஏழு தலைமுறையாக எங்கள் முன்னோர்கள் பற்றிய குடும்ப வரலாற்றை நாங்கள் அறிந்துள்ளோம். பிறர் கூற கேட்டுள்ளோம். அத்தகைய தொன்மையும் பாரம்பரியமும் கொண்டது எங்கள் குடும்பம். எங்கள் முன்னோர்கள் சுமார் 160 ஆண்டுகளுக்கு முன் கிழானூலிருந்து, சின்ன ஒபுளாபுரத்தில் குடியேறினார்கள். இங்கு சின்ன ஒபுளாபுரம், பெரிய ஒபுளாபுரம் மற்றும் நாகராஜ கண்டிகை போன்ற கிராமங்களில் கணக்கிலடங்கா நிலங்களை வாங்கி சின்ன ஒபுளாபுரம் ஜமீன் என்ற பெயரை பெற்றவர்கள். எங்கள் முன்னோர்களை பற்றிய விவரங்களை எங்கள் அத்தை சி.ஆர்.கலாவதி (தங்கவேல் செட்டியாரின் ஒரே மகள்) மூலம் விவரங்களை அறிந்து இப்பதிவினை வெளியிடுகிறோம்.

## தங்கவேல் செட்டியார்:

எங்களது பாட்டனார் இவர். முனுசாமி செட்டியார் மற்றும் வஞ்சியம்மாள் மகனாவார். இவர் சாமியார் நல்லாச்சாரியாரின் வழிகாட்டுதலில் வளர்ந்தவர். மேற்படி நல்லாச்சாரியர் எங்கள் எஸ்டேட் மேனேஜராக இருந்து இவர்களின் சொத்துக்களை பராமரித்தவர். தங்கவேல் செட்டியார் அவர்கள் பி.ஏ.லிட்., பட்டம் பெற்றவர். அவருக்கு Fundamental என்ற பட்ட பெயரும் உண்டு. இவர் சென்னை முத்தையால்பேட்டை உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றினார். அவர் கணிதம், அறிவியல், ஆங்கில ஆசிரியராகவும் பணியாற்றியவர். அவர் பாடம் கற்பிப்பதில் வல்லுனராக திகழ்ந்தவர். அவர் இடத்தில் படித்த மாணவர்கள் பலர் பின்னாளில் நல்ல துறையில் பணியாற்றி அவருக்கு பெருமை சேர்த்தார்கள்.

சொல்வளம் மிக்கவர். பாடம் கற்று கொடுப்பதிலும் வல்லுனர். அந்நாளில் அவரை பற்றி அறியாதவர் இல்லை. சின்ன ஒபுளா புரத்தில் அவருக்கு என்று தனி பெருமையுடன் வாழ்ந்தவர். 1942ல் ஆயிர வைசிய பேரி செட்டியார் சங்கத்தின் பொருளாளராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர். இவர் T.U.C.S –ல் உறுப்பினராக இருந்து சேவை புரிந்தவர்.

**புஷ்பம்மாள்:**

இவர் எங்களுடைய பாட்டி (சென்னை பெரியமேடு கோவிந்த ராஜ செட்டியார் மற்றும் சொர்ணாம்மாளின் மகள், தங்கவேல் செட்டியாரின் மனைவி) இவர் கம்பீரமான தோற்றத்தை உடையவர். இவர் தைரியமும், துணிச்சலும் மிக்க பெண் சிங்கமாக வாழ்ந்தவர். அந்நாளில் வீட்டில் வந்தவருக்கு உணவு பரிமாறி உபசரிப்பதில் அன்னலட்சுமியாக திகழ்ந்தவர். வீட்டில் வந்தவருக்கு உணவு, வரப் போகிறவர்களுக்கு அடுப்பில் உலை கொதித்து கொண்டிருக்கும் என்ற பெயர் பெற்ற அன்னலஷ்மி. புஷ்பம்மாள் தனது பெயரை மலர்முகத்தம்மாள் என்று தமிழாக்கம் செய்து கொண்டார்.

மலர்முகத்தம்மாள் நீதிக்கட்சியிலும், திராவிட கழகத்திலும் சிறந்த மேடை பேச்சாளராக திகழ்ந்தார். தைரியம், தன்னம்பிக்கை உடையவர். மலர்முகத்தம்மாள் என்ற பெயரில் கட்சியில் பணியாற்றி னார். சென்னை பெரியமேட்டில் வசித்து வந்தபொழுது மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களிடம் உடன் பிறந்த சகோதரி போல் உரிமையோடு பேசும் பழக்கம் உடையவர். திமுகவில் நியமித்த 5 மகளிர் அணி குழுவில் இவரும் ஒருவர். 1955ல் கலைஞர் கருணாநிதி அவர்களுடன் மேடையில் பேசியவர். இவர் மேடை ஏறி பேசினால் (சும்மா அதுருதுல என்ற ரஜியின் வசனத்திற்கு ஏற்றாற் போல) இவருடைய பேச்சு கம்பீரமாக இருக்கும். எதிரிகள் இவரை கண்டால் அஞ்சுவர். தர்மத்திற்கு, நியாயத்திற்கும் கட்டுப்பட்டவர் எங்கள் பாட்டி.

என்விஎன்.நடராஜன், என்விஎன்.சோமு, Dr.H.V.ஹண்டே A.V.ஆசைத்தம்பி, நீலநாராயணன், சத்தியவானிமுத்து, நாஞ்சில் மனோகர், நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், சாவித்திரி சபாபதி, சாதிக் பாட்சா போன்ற அரசியல் ஆளுமை களுடன் இணைந்து கட்சி பணியாற்றியவர்.

எங்கள் பாசத்திற்கு உரிய அன்பு அண்ணன் முன்னாள் எம்எல்ஏ கி.வேணு (திமுக) அவர்கள் புஷ்பம்மாளை பற்றிய நினைவு கூறுகையில், காங்கிரஸ் கோட்டையாக இருந்த கும்மிடிபூண்டி வட்டத்தில் திராவிட கழத்தை கால் ஊன்ற வைத்த வீராங்கனை எங்கள் பாட்டி என்று புகழாரம் சூட்டினார். அந்த காலத்தில் சென்னையில் சாரட் வண்டி வைத்து மிகவும் வசதியாக வாழ்ந்தவர்.

## பிரகாசம் செட்டியார்:

இவர் எங்களுடைய தகப்பனார். (துங்கவேல் செட்டியார், புஷ்பம்மாள் மகன்) பி.ஏ பட்டம் பெற்றவர். இவரும் தந்தையை போல் படிப்பதில் திறமை வாய்ந்தவர். ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். இவருடைய ஆங்கில புலமையை கண்டு அமெரிக்க தூதரக அதிகாரி வியந்தார். இவரும் அவர் தந்தையைப் போல் நிறைய மாணவர்களுக்கு ஆங்கிலம் டியூஷன் எடுத்தவர். இன்று அவர் பேரப்பிள்ளைகள் (பிரசாந்த் மற்றும் மோனிஷ் பாலாஜி S/o.தங்கராஜ், கீதாலட்சுமி, ஹரிணிD/o.அருளாளன்)அவரைப் போலவே படிப்பில் சிறந்து விளங்கி அவருக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

இவர் மிகவும் இரக்க குணம் மிகுந்தவர். இவர் சென்னையில் TTK Hospital–லில் கவுன்சிலராக இருந்தார். இவர் குடிபோதைக்கு அடிமையாகி உள்ளவர்களை திருத்தும் பணியை தனது வாழ்நாள் சாதனையாக கொண்டிருந்தார். இவரால் பல குடும்பங்களில் உள்ள ஆண்கள் திருந்தி வாழ்ந்ததாக கூறியதை, இவர் இறப்பின் போது கேட்டு வியந்தோம். இவரை சின்னி என்று செல்லமாக அவருடைய நண்பர்கள் அழைப்பார்கள். இவர் ஒரு சிறந்த முருகன் பக்தர். மாதந்தோறும் வள்ளி மலைக்கு கால்நடையாக சென்று முருகனை தரிசிப்பதில் ஆர்வமுடையவர். அவருடைய பிரார்த்தனையால் இன்றுவரை அவருடைய வம்சத்தினர்களை அந்த வள்ளி மலை முருகன் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

## சரோஜினி அம்மாள்:

எங்களுடைய தாயார் சரோஜினி அம்மாள். (இவர் பட்டம்மாளின் ஒரே மகள், பிரகாசம் செட்டியாரின் மனைவி) அவர்கள் பூமாதேவியின் மறு உருவம். இவர் செல்வந்தர் பெண்ணாக இருந்தாலும் எளிமையாக வாழ்ந்தவர். வஞ்சம், கோபம், பொறாமை, சூது, இவைகளுக்கு அப்பாற்பட்டவர்.எல்லோரிடத்திலும் அன்பானவர்.இவரது மகள்களான மஞ்சுளா (எ) அருண்மொழி, மங்கையற்கரசி (எ) காஞ்சனா மற்றும் மருமகள்களான A.கல்யாணி, C.T.மஞ்சுளா ஆகியோரிடம் சமமான அன்பு கொண்டவர். மகள்களைப் போல் மருமகள்களிடத்திலும் அன்பு கொண்டவர். தனது மாமியார் மலர்முகத்தம்மாள் போலவே வீட்டிற்கு வருபவரை உபசரிப்பதில் வல்லவர்.

## இராஜகோபால் செட்டியார்:

இவர் தங்கவேல் செட்டியார் உடன் பிறந்தவர். இவர் பிறந்த 40 நாட்களில் தாயார் வஞ்சி அம்மாளை இழந்தவர். தாய் இல்லா பிள்ளையாக வளர்ந்தவர். இவரும் படிப்பில் சிறந்து விளங்கினார். இவர் ஓவிய ஆசிரியராக சென்னை அரசு கவின் கலை கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருடைய மாணவராக நடிகர் சிவகுமார் ஓவியக் கல்லூரியில் படித்தவர். இவருடைய மனைவி ரங்கநாயகி அம்மாள். இவருடைய மகன் C.R.மோகன் செட்டியார். இவர் பர்மாஷேல் கம்பெனியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவர் மிகவும் நேர்மையானவர். இவருடைய மனைவி சுண்ணாம்பு குளம் சந்தானலஷ்மி ஆவார். இவர் கடவுள் பக்தியுடையவர்.

எங்கள் குலதெய்வமான ஸ்ரீபால்முனீஸ்வரர் ஆலயம் கட்டும் வாய்ப்பு எங்கள் தலைமுறையில் எங்களுக்கு கிடைத்ததை இப்பிறவி பயனாக கருதுகிறோம். இவ்வாலயம் எழுப்ப சிறப்பான முறையில் வடிவமைத்து கொடுத்து துணையாக நின்ற நண்பர் ஸ்தபதி கலைச் செம்மல் S.கீர்த்தி வர்மன் மற்றும் K.ஆதித்யவர்மன் அவர்களுக்கும், சிலைகள் வடிவமைத்து கொடுத்த பாஸ்கர் (மாமல்லபுரம்) அவர்களுக் கும், கட்டுமான பணிக்கு மற்றும் மஹாகும்பாபிஷேக விழாவிற்கு உதவிய ஏனைய நண்பர்களுக்கு, உறவினர்களுக்கும், ஆலய திருப்பணியில் கட்டிடத்தை சிறப்பாக உருவாக்க பணியாற்றிய தொழிலாளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூலை சிறப்பாக உருவாக்க உறுதுணையாக இருந்த நண்பர் தமிழ்ச்சுவடி அ.பாலாஜி அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

இங்ஙனம்

**C.P.அருளாளன்**, S/o.பிரகாசம் செட்டியார்,

**C.P.தங்கராஜ்**, S/o.பிரகாசம் செட்டியார்,

**M.விவேகானந்தன்**, S/o.மோகன் செட்டியார்.

# ஆலய திருப்பணி

ஸ்ரீ பால் முனீஸ்வர் ஆலயம் சி.பி.அருளாளன், சி.பி.தங்கராஜ் அவர்களின் குடும்பக் கோவில் ஆகும். அவர்கள் எனக்கு 40 வருட நண்பர்கள். அவர்கள் இந்தக் கோவிலை கட்டுவதற்காக என்னை அணுகிய போது, அவர்கள் கூறிய வார்த்தை அரசர்கள் காலத்தில் எவ்வாறு முழுக்க முழுக்க சிற்ப ஆகம முறைப்படி கட்டினார்களோ அவ்வாறு கட்ட வேண்டும், இதில் எந்த விதமான சமரசமும் வேண்டாம், ஏனென்றால் இப்போது உள்ள காலத்தில் கோவில் கட்டுபவர்கள் அவர்கள் வசதிக்காக அவர்களுக்கு வேண்டியவாறு ஆகம சிற்ப சாஸ்திரங்களை மீறி கட்டுகிறார்கள், ஆகவே நாம் அவ்வாறு இருக்க கூடாது, எனவே முழுக்கமுழுக்க ஆகம சிற்ப சாஸ்திர முறைப்படி எப்படி கட்ட வேண்டுமோ அவ்வாறு செய்யுங்கள் என்றார்கள்.

நான் இதுவரை மருதமலை முருகன் கோவில், பண்ணாரி மாரியம்மன் கோவில் உட்பட சுமார் 350 மேற்பட்ட கோவில்களுக்கு மேல் கட்டி கும்பாபிஷேகம் செய்துள்ளேன், எல்லா இடங்களிலும் எதாவது ஒரு அழுத்தம் இருக்கும், ஆனால் இங்கு ஆகம சிற்ப சாஸ்திரங்களில் என்ன விதிக்கப்பட்டுள்ளதோ அவ்வாறு செய்வதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

சிற்ப ஆகம சாத்திரங்களில் கூறியபடி ஒரு நல்ல நாளை தேர்ந்தெடுத்து அந்த நாளில் மூர்த்தியாகிய பால் முனீஸ்வரருக்கும், வஸ்துவாகிய சின்ன ஓபுளாபுரத்திற்கும் கர்த்தாக்களுக்கும் நட்சத்திர பொருத்தம் பார்த்து ஆயாதி கணித்து அதற்கேற்ற அளவை தேர்ந்தெடுத்து, கோவில் நிர்மாணத்திற்கு ஏற்ற அளவு நிர்ணயம் செய்து, அதிலிருந்து மூலவராகிய பால் முனீஸ்வரரின் அளவும், பரிவார தெய்வங்களின் அளவும் நிர்ணயிக்கப்பட்டது.

அதன் பிறகு முதலில் திசையறிதல், (சரியான கிழக்கு திசை தேர்ந்தெடுக்கப்பட்டு), குறிப்பிட்ட நல்ல நாளில் வாஸ்தை பரீட்சித்து , சங்கு ஸ்தாபனம் செய்து, முறைப்படி ஆலய திருப்பணிகளை தொடங்கினோம். ஆலய கட்டுமானதிற்கு தேவையான தரமான

பொருட்களை தரமான இடங்களில் இருந்து கொண்டுவந்து அஸ்திவாரம் அமைத்து, அஸ்திவாரத்தில் நிரப்பப்பட வேண்டிய மணலை கழுவி சுத்தம் செய்து அதில் எலும்பு சிப்பி போன்ற எந்த விதமான அசுத்தப் பொருட்களும் இல்லாமல் கர்ப்பபேழை பிரதிஷ்டித்து கர்ப்பந்நியாஸம் செய்து அஸ்திவாரம் அமைத்து அதன் மீது இந்த ஆலயம் அமைக்கப்பட்டது. கருவறை அமைக்கும் போது, ஒவ்வொரு நிலையிலும் சிற்ப ஆகம சாஸ்திரப்படியே பணிகளை செய்தோம்.

ஒரு நல்ல நாளில் கருங்கல்லால் வாசல் நிலை அமைத்து அதில் பஞ்சலோகம் நவரத்தினங்கள் பாதரசம் ஆகியவற்றை நியாசம் செய்து சுமங்கலிகளால் பூஜை செய்து நிலை நிறுத்தப்பட்டது. நாங்கள் கேட்டதை எல்லாம் கேட்ட நேரத்தில் உடனுக்குடன் திரு சி.பி.அருளாளன், திரு சி.பி.தங்கராஜ் குடும்பத்தினர் செய்து தந்தார்கள். ஆலயத்திற்கு தேவையான சிலைகளை வடிக்க பல நூறு ஆண்டுகாலமாக எங்கு சிற்பிகள் முறையாக கருங்கல்லை தேர்வு செய்தார்களோ, அங்கேயே தேர்வு செய்தோம்.

வாலாஜாபாத் சங்கராபுரம் பட்டுமலை குப்பத்தில் இருந்து தரமான கற்களை கொண்டு வந்து மாமல்லபுரம் சிற்பி திரு.த.பாஸ்கரன் அவர்கள் மூலம் சிலை வடிவமைக்கப்பட்டு முறைப்படி ஜலாதி வாசம், தான்யாதி வாசம், தனாதி வாசம், ரத்னாதிவாசம், வஸ்திராதி வாசம் ஆகியவை செய்யப்பட்டு சாமிகளுக்கு நயனோன்மீலனம் எனப்படும் கண்திறக்கப்பட்டு, பதவின்யாச முறைப்படி பிரதிஷ்ட்டை செய்து, தசதரிசனம் செய்யப்பட்டது.

அதே போன்று கலசங்கள் கும்பகோணத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு அதில் வரகு நிரப்பி யாகசாலையில் அதற்குரிய பூஜைகள் செய்து கர்த்தாக்கள் அதை சுமந்து ஆலயத்தை வலம் வந்து விமானத்தில் பொருத்தினர்.

மிகச்சிறந்த வர்ணங்களை கைதேர்ந்த கலைஞர்கள் மூலம் ஆலய கோபுரத்திற்கும், பரிவார மூர்த்திகளுக்கும் சிற்ப ஆகம முறைப்படி அதற்குரிய வர்ணங்கள் தீட்டப் பட்டது.

இந்த கோவிலில் பரிவாரமாக நாகாத்தம்மன், வித்யா விநாயகர், பாலமுருகன், சீரடி சாய்பாபா, பக்த ஆஞ்சநேயர் நந்தி பலிபீடம் ஆகியவை உரிய முறையில் பிரதிஷ்ட்டை செய்யப்பட்டுள்ளது. சீரடி சாய்பாபா இராஜஸ்தானில் இருந்து பளிங்குக் கல்லால் நேர்த்தி யாக வடிவமைக்கப்பட்டு தருவிக்கப்பட்டது.

தென்னிந்தியாவில் சிறப்பாக அமைக்கப்பட்ட பாபா சன்னதி களில் இதுவும் ஒன்று. இதற்குரிய மண்டபமும் ராஜஸ்தானில் இருந்தே தருவிக்கப்பட்டது. கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப இந்தியாவில் எல்லா பகுதிகளிலும் அனைத்து விதமான மக்களும் வாழ ஆரம்பித்து விட்டனர். அவர்களுக்கு ஏற்றவாறு வழிபட சன்னதிகள் அமைக்கப் பட்டுள்ளது. ஆலயபணிகளில் திரு.K.ஆதித்தயவர்மன் B.Tech., அவர்கள் உடனிருந்து, ஆயாதி கணித்தல் வரைபடம் தயாரித்தல், ஆலய லட்சணங்களை பரிசோதித்தல் ஆகிய பணிகளில் திறம்பட செயல்பட்டார்.

பரிவார மூர்த்தங்களும் சிற்ப ஆகம சாஸ்த்திரத்தில் கூறிய படி அவர்களுக்குரிய திசைகளில் உரிய ஸ்தானங்களில் அனைவரும் வழிபட ஏற்ற வகையில் பிரதிஷ்ட்டை செய்துள்ளோம். எதிர் காலத்தில் இப்படிப்பட்ட ஆலயங்களை கட்டும் ஸ்தபதிகள் தங்கள் சந்தேகங்களை தீர்க்க இந்த ஆலயத்தில் வந்து பார்த்து அறிந்து கொள்ளலாம். அவ்வாறு தெளிவுற நிர்மாணம் செய்துள்ளோம். இவ்வாலயம் தேசிய நெடுஞ்சாலைக்கு மிக அருகில் அமைந்து இருப்பதால் அனைவரும் எளிதில் வருகைதத்து வணங்கும் படி அமைந்துள்ளது. இவ்வளவு சிறப்பு மிக்க ஒரு ஆலயத்தை அமைப்பதற்கு நல்வாய்ப்பை வழங்கிய சி.பி.அருளாளன், சி.பி.தங்கராஜ் அவர்களின் குடும்பத்திற்கு மிக்க நன்றி.

**சிற்பகலைசுடர்,**

**கோயில் கலைச்செம்மல்,**

**கலைச்செம்மல்**

**செ.கீர்த்தி வர்மன் பெருந்தச்சன்,** B.Sc.,

# முனீஸ்வரர்

பிரம தேவரின் மானச புத்திரர்களான சனகர், சந்தனர், சனாதனர், சந்தனகுமாரர் என்ற நான்கு முனிவர்கள் சிவபெருமானிடம் வேண்ட அவர் தென்திசை நோக்கிக் குருவாக அமர்ந்து அவர்களுக்கு ஞானத்தைப் போதித்தார்.

சிவபெருமானின் ஞான வடிவம் ஸ்ரீதட்சிணாமூர்த்தி. முனிவர் களுக்கெல்லாம் ஈஸ்வரராக இருந்து ஞானத்தைத் போதித்ததால் அவர் முனீஸ்வரர் என்று அழைக்கப்பட்டார்.

அனைத்தையும் தனக்குள் அடக்கிய பாலின் நிறம் வெண்மை, இது ஞானத்தை குறிக்கும் என்பதால் இவரை பால் முனீஸ்வரன் என்று கிராம மக்கள் அழைத்தனர். முனீஸ்வரர் வழிபாடு என்பது காலம் காலமாக கிராம மக்கள் மட்டுமல்லாது நகரத்து மக்களும் பயபக்தியுடன் வணங்கக்கூடிய தெய்வ வழிபாடாகும்.

தவயோகத்தில் சிறந்து சிவநிலை அடைந்த சித்தர்களும், தர்ம நெறியில் வாழ்வாங்கு வாழ்ந்து மக்களைக் காத்து சிவநிலை அடைந்தவர்களும் முனிஸ்வரன் அம்சமாக வழிபடபடுகின்றனர். சிவபெருமானை ஈஸ்வரன் என்று அழைப்பார்கள். சிவனுக்கு பிறகு இரண்டு பேருக்கு மட்டுமே ஈஸ்வரன் பட்டம் கிடைத்திருக்கிறது. அதில் ஒருவர் தர்மத்தை காக்கும் சனீஸ்வரன். மற்றொருவர் முனிஸ்வரன் ஆவர். முனிஸ்வரனின் ஆதி தோற்றம் பால் முனி ஆகும்.

முனி என்ற சொல்லிற்கு ரிக் வேதம் 'தெய்வ ஆவேசம் படைத்தவர்' என்றும், பயமற்றவர் என்றும் பொருள் கூறுகிறது. தமிழகம் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகளிலும் பால் முனீஸ்வரனை வழிபடுகின்றனர்.

## அந்தகாசுரனை வதம் செய்த வரலாறு

முன்னொரு காலத்தில் அந்தகாசுரன் என்னும் அசுரன் தேவர்களையும், மக்களையும் வதைத்து இடையூறு செய்து வந்தான். அந்த அசுரனிடம் இருந்து தங்களைக் காக்கும்படி அன்னை பராசக்தியை அனைவரும் வேண்டினர்.

பார்வதி அம்மன் காத்தாயி என்ற பெயரில் பூமியில் அவதரித்தார். அசுரனை அழிக்க காத்தாயி அம்மன் லாடமுனி,

முத்துமுனி, செம்முனி, கருமுனி, கும்பமுனி, வால் முனி, சட்டை முனி என்று ஏழு முனிகளை உருவாக்கினார். அவர்கள் அனைவரும் சேர்ந்து அந்தகாசுரனை அடக்கி வதம் செய்தார்கள்.

பின்னர் முனிகள் அனைவரும் ஒரே வடிவமாக பால்முனியாக கலியுகத்தில் மக்களை காப்பதற்காக பூமிக்கு வந்தனர்.

இந்த பால் முனியில் இருந்தே அனைத்து வகையான முனீஸ்வரர் வழிபாடுகளும் தோன்றின. மகா பைரவருக்கு எப்படி பலவகையான வழிபாடுகளும் வகைகளும் உள்ளதோ, அதேபோல பால் முனிக்கும் பல உருவங்களில் வகைகளில் வழிபாடுகள் உள்ளன. கிராம மக்கள் தங்கள் மரபுகளுக்கு ஏற்ப வழிபாடுகளை செய்து பலனடைகின்றனர்.

# காக்கும் தெய்வம் பால்முனீஸ்வரர்

சிவபெருமானின் அந்தரங்கக்காவலர்களில் ஒருவரே முனீ ஸ்வரன். கிராமத்தை இரவுநேரங்களில் காப்பவர் முனி என்றும் நம்பப் படுகிறது. துஷ்டசக்திகளை அடியோடு ஒழித்துக்கட்டும் பொறுப்பு இவருடையது. பெரும் வீரமும், ஆற்றலும், ஆவேசமும் நிறையப் பெற்ற, கம்பீரமான ஆண் தெய்வமாக விளங்குபவர் பால் முனீஸ்வரர் ஆவார். அடிப்படையில், ஒரு காவல் தெய்வமாகத் திகழும் இவர், மக்களை , திருடர்கள், கொள்ளையர்கள் போன்றவர்களிடமிருந்தும், பெரு மழை, புயல் போன்ற இயற்கைப் பேரிடர்களிலிருந்தும் காக்கும் பெரும் சக்தியாக விளங்குகின்றார்.

முனீஸ்வரன் கண்கள் நெருப்பு போல பிரகாசிக்கும், கனல் கக்கும் கண்களும், அருள் ஒளிரும் மேனியும், கொண்டவராக முனியப்பன் விளங்குகின்றார். முனீஸ்வரன் அருள் கிடைத்தால் சகல சவுபாக்கியங்களும் கிட்டும் என நம்பப்படுகிறது.

முனீஸ்வரன் நள்ளிரவு 12 மணிக்கு மேல் 5 மணிக்குள் சுமார் 20 அடி உயரத்திற்கு வெண் புகைவடிவில் வலம் வருவார் என சொல்லபடுகிறது. இன்றும் பல கிராமங்களில் கிராம தெய்வமாக

பால் முனி உள்ளார். பலருக்கு முனியப்பன் குல தெய்வமாவார். பல்வேறு பெயர்களில் இவர் கிராமங்களில் அழைக்கபடுகிறார்.

நீண்ட தூர பயணம் புறப்படுபவர்கள் தங்களுடைய வாகனங் களுடன் முனியப்பனை வணங்கிய பிறதேசங்களின் பயணத்தை ஆரம்பிப்பார்கள்.

இந்த வழக்கத்தை இன்றும் கூட கிராமங்கள் மட்டுமல்லாது நகரங்களிலும் காணலாம். இதற்க்கு காரணம் முனியை வணங்கிவிட்டு புறப்பட்டால் அந்த பயணத்தில் நமக்கு எந்த பிரச்சனையும் ஏற்படாமல் நம்மை காப்பார் என நம்பிக்கையேயாகும்.

முனிசெல்லும் பாதையில் இருக்கும் நிறுவனங்கள் விளங்காது. வேலைக்காரர்கள் வரமாட்டார்கள். கட்டப்படும் வீடு பாதியிலேயே நிற்கும். ஒருபோதும் அங்கே யாரும்குடியேற முடியாது. ஒருவேளை குடியேறினாலும் விரைவில் வேறிடம் செல்லும் நிர்ப்பந்தம் உண்டாகும். அல்லது திடீர் மரணம்உண்டாகும் என்று கூறுவார்கள். அதற்கு காரணம் சக்தி ஓட்டத்தை எதிர்த்து நிற்க கூடாது என்பதே ஆகும்.

இயற்கையோடு இயைந்து போனால் தான் விஞ்ஞான கண்டு பிடிப்புகள் வெற்றியைத் தருகிறது. ஒரு விமானம் பறக்க வேண்டுமானால் காற்றுக்கு ஏற்ப இறக்கை இருக்கும். ஆற்று நீர் ஓடும் பாதையில்இருக்கும் தூண் அல்லது மண்டபங்கள் கூம்பு வடிவில் ஆரம்பிக்கும். நீர் மோதினாலும் விலகிச் செல்லும் அடித்துச் செல்லாது. அதே போல சக்தி பிரபாகமாக வெளிப்படும் முனியின் ஓட்டம் அனுசரித்துச் சென்றால் நன்மைகள் உண்டாகும். மகாராஷ்டிர பிராமணர்கள் முனீஸ்வரனின் இந்த சக்தியை அறிந்துள்ளனர்.

## பால்முனி வழிபாடு:

மும்மூர்த்திகளில் ஒருவரும், மக்களால் பெரிதும் போற்றி வணங்கப்படும் ஒப்புயர்வற்ற தெய்வமாகத் திகழ்பவருமான சிவபெருமானின் அம்சம் நிறைந்தவர், பால் முனீஸ்வரர் ஆவார்.

இவர் நாத முனி, வேத முனி, பூத முனி, சக்தி முனி, மாய முனி, மந்திர முனி, பால் முனி, கரு முனி, சுடலை முனி, ஜடா முனீஸ்வரர் போன்ற பல வகைகளிலும், வடிவங்களிலும் காட்சி தருகிறார்.

## பால்முனீஸ்வரர் ஹோமம்:

பால்முனீஸ்வரர் ஹோமம் என்பது இந்த தெய்வத்திற்குச் செய்யப்படும் சிறந்த வழிபாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த அக்னி வழிபாட்டின் மூலம், இந்த சக்தி வாய்ந்த கடவுளை மகிழ்வித்து, அவரது அருளையும், பல நன்மைகளையும் அடையலாம் என்பது நம்பிக்கை.

பால் முனீஸ்வரர் ஹோமம் தவிர, வடை, பால், பாயசம், கொழுக்கட்டை, அவல், பொரி, கடலை, மற்றும் மதுபானம், சுருட்டு போன்றவற்றை பக்தியுடன் இவர் முன் படைத்து, வழிபடுவது அனைத்து வித தோஷங்களையும் நீக்கும் என்றும் கருதப்படுகிறது.

## வழிபாட்டின் பலன்கள்:

பால் முனீஸ்வரர் வழிபாடு என்பது, அனைத்து வித தீய சக்திகளையும், எதிரிகளையும் வீழ்த்த வல்லது. தீர்க்க முடியாத பிரச்சனைகளையும், சங்கடங்களையும் தீர்க்க வல்லது. கடும் தீமை பயக்கும் சக்திகளையும், திருத்தி, நல்வழிப்படுத்த வல்லது.

இவ்வாறு, பால் முனீஸ்வரரை மனம் உருக, நம்பிக்கையுடன் வழிபட்டால், தீமை, வறுமை, பில்லி, சூனியம் போன்ற எதிர்மறை ஆற்றல்கள், பகைவர்களால் ஏற்படும் கெடுதல்கள் போன்றவை நீங்கி, அனைத்து வித நன்மைகளும் பெருகும். வாழ்க்கை வளம் பெறும்.

## பால்முனிஸ்வரன் வகைகள்

பஞ்ச முனி என ஐந்து முனிகள் பச்சையம்மனுக்கு காவலாக உள்ளன. சில இடங்களில் சப்த முனிகளும் உள்ளார்கள்.

வாழ்முனி, செம்முனி, கருமுனி, முத்துமுனி, வேதமுனி, பூமுனி போன்ற ஐந்து முனிகளை பஞ்ச முனி என்கிறார்கள், இவர்கள் பச்சையம்மனுக்கு துணையாக இருந்தவர்கள்.

வாழ்முனி, செம்முனி, முத்துமுனி, ஜடாமுனி, பாலக்காட்டு முனி, வேதமுனி, இலாடமுனி ஆகிய ஏழு முனிகளையும் சப்த முனிகள் என்று கூறுகின்றனர்.

மேலும் மக்கள், முனி, முனிரத்தினம், முனிராஜ். நாகமுனி, வீரமுனி, ஜடாமுனி, ராஜமுனி, முனிராஜா, அருள்முனி, முனிராம், முருகமுனி, முனிக்கருப்பன், முனிதங்கம், முனிவைரம், முனீஸ்வரன்,

முனீஸ்வரி, ஜெயமுனி, பொன்முனி, வெண்முனி, நாகரத்தினமுனி, சிவமுனி, மகாமுனி, சக்திமுனி, சுந்தரமகாமுனிலட்சுமி, முனிலட்சுமி, முனிகாளி, முனியப்பன், முனியப்பு, முனியப்பா, முனிவாணி, கலைமுனி, நிலாமுனி, வான்முனி, சகாமுனி, வேல்முனி, ராஜமுனி, ராம்முனி, முனிபிள்ளையார் பல்வேறு பெயர்களில் முனிஸ்வரனை வழிபட்டும், தங்கள் குழந்தைகளுக்கு அந்த தெய்வத்தின் பெயரை சூட்டியும் வணகுகின்றனர்.

பால் முனீஸ்வரரை வழிபட்டால் எல்லா காரியத்திலும் வெற்றி கிட்டும்.

குடும்பத்தில் லட்சுமி கடாட்சம் பெருகும், செல்வச் செழிப்பு ஏற்படும்.

குடும்பத்திலுள்ள எல்லா தோஷங்களும் விலகி, கருவைக் காத்து தீமைகள் விலகும்.

அனைத்து எதிரிகள் தொல்லைகள் நீங்கும், சங்கடங்கள் விலகி சகல சௌபாக்கியம் ஏற்படும்.

ஏழு என்ற எண்ணிக்கையில் உள்ள சப்த கன்னிகளை வழிபடும் பழக்கம் நம்மிடம் இருக்கிறது. அதே போல முனிகள் சிலரை கொண்டாடும் மரபும், பழங்காலம் தொட்டே இருந்து வருகிறது. இந்த முனிகளுக்கு அபிஷேகங்கள் நடப்பதில்லை. அதே நேரத்தில் மலர்கள் சாத்தி வழிபாடு செய்யப்படுகிறது. இந்த முனிகளுக்கு சில இடங்களில் கல் திருமேனிகளும், சில இடங்களில் உற்சவத் திருமேனிகளும் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த முனிகள் அனைவரும் பச்சையம்மனின் தவத்திற்கு உறுதுணையாக இருந்த வர்கள் என்று சொல்லப்படுகிறது. பால் முனியை வணங்கினால் எல்லா முனியையும் வழிபட்டதற்கு ஒப்பாகும், எல்லா முனியும் பால்முனியில் அடங்கும். இந்த முனிகளைப் பற்றி இங்கே பார்க்கலாம்.

## வாழ்முனீஸ்வரர்:

அனைத்து பச்சையம்மன் ஆலயத்தில் மிகப்பெரிய வடிவத்தில் வடக்கு நோக்கி அமர்ந்திருப்பவர் வாழ்முனீஸ்வரர். திருமாலின் மறுவடிவான இவர், அன்னை பார்வதிக்கு காவலராக விளங்கு கிறார். வான் முட்டிய கோலத்தில் இருப்பதால் இவருக்கு ‘வான்முனி’ என்று பெயர். இதுவே மருவி ‘வாழ்முனி’யாக வழங்கப்படுகிறது.

உக்கிர மாமுனியான இவர், வலது கரத்தில் மேல் நோக்கிய நீண்ட வாளையும், இடதுகரத்தில் கீழ்நோக்கிய குத்து வாளான சலாகையும் ஏந்தியுள்ளார். ஊன்றிய வலது காலடியில் அக்னிவீரன் தலை உள்ளது. இவர் போரிட வரும் வீர ராட்சதனைக் கத்தியால் குத்திய கோலத்தில் அமர்ந்துள்ளார். குழந்தைக்கு உண்டாகும் பாலரிஷ்டங்கள் நீங்க, இவர் மடியில் குழந்தைகளைப் படுக்க வைத்து எடுப்பார்கள். இவருக்குச் சிவப்பு மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்வதன் மூலம் எதிரிகள் தொல்லை விலகும். மேன்மை கிடைக்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

## செம்முனி, கருமுனி:

இவர் சிவபெருமானின் அம்சமாகத் தோன்றி, பச்சையம் மனுக்குக்காவல்தெய்வமாகவிளங்குகிறார்.வாழ்முனிக்கு அடுத்த நிலையில் இருக்கும் முனிகள், செம்முனி கருமுனிகளாகும். கருமுனி, பெயருக்கு ஏற்றபடி கருமை நிறத்திலும், செம்முனி, செந்நிறத்துடனும் காட்சி தருகின்றனர். இவர்கள் நீண்ட வாளையும், சலாகையும் ஏந்தி காட்சி தருகின்றனர் இவர்கள் மந்திர தந்திரங்களில் சிறந்தவர்களாகவும், பக்தர்கள் வாழ்வில் வளத்தை அளிப்பவர்களாகவும் திகழ்கிறார்கள். மேலைக் கடலோரத்து செம்மலை, கருமலையில் இருந்து இவர்கள் வந்ததாகக் கூறப் படுகிறது. மக்களைக் காக்கவும், பச்சையம்மனுக்கு காவலராக நிற்கவும், சிவபெருமானின் அம்சங்களாக கருமுனி, செம்முனிகள் பூமிக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. இவர்களின் காலடியில் தீயகுணம் கொண்ட மந்திரவாதிகளின் தலைகளைக் காணலாம்.

## வேதமுனி:

இவர் தன் கைகளில் ஏடுகளைத் தாங்கி, வேத நூல்களை பத்மாசனக் கோலத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருக்கும் தோற்றத்தில் காணப்படுவார். வேத நூல்களை கற்பவர் என்பதால், ‘வேதமுனி’ என்று அழைக்கப்படுகிறார். இவர் ஜடாமண்டலத்துடன் பிரமாண்ட மீசையும் கொண்டு காட்சி தருகிறார். இவர் வாழ்வில் நல்வழி காட்டுபவராக புகழப் படுகிறார்.

## கும்பமுனி:

கும்பத்தில் தோன்றிய முனிவர் அகத்தியர். இந்த அகத்தியரின் மறுவடிவமே கும்பமுனி ஆகும். அகத்தியரைப் போலவே, உருவத்தில் குள்ளமானவராக இவர் விளங்குகிறார். இவரை 'முனிரத்தினம்' என்றும் அழைப்பார்கள். செம்முனியும் அகத்தியரின் மறுவடிவம் என்று சொல்பவர்களும் உண்டு.

## ஜடாமுனி:

ரோம ரிஷியே ஜடாமுனியாக உள்ளார் என கூறப்படுகிறது. யோகப் பட்டை தரித்து, யோகாசனத்தில் பெரிய கூடைமுடிகளோடு இவர் காட்சி தருகிறார். அதிகமான ஜடைகளுடன் இருப்பதால், இவர் 'ஜடாமுனி' என வழங்கப்படுகிறார். குழந்தைகளுக்கு ஜடை விழுந்து முடி சிக்கலாகி விடும் போது இவருக்கு வேண்டிக் கொண்டு பயன்பெறுகின்றனர்.

## நாதமுனி:

இசையில் சிறந்து விளங்கும் நாரதரே 'நாதமுனி'யாகக் கருதப்படுகிறார். முதுகில் நீண்ட சடை, எடுத்துக் கட்டிய ஜடாமகுடத்துடன், கையில் மகர யாழை இசைக்கும் தோற்றத்தில் இவர் காணப்படுகிறார். இவருக்கு விலங்கு போட்டு வைத்திருப்பார்கள். 'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்றாலும், பூமியிலும் அவர் ஏதும் கலகம் செய்யாமல் தடுக்கும் நோக்கில், இந்த முனிக்கு விலங்கு பூட்டியிருப்பதாக கூறப்படுகிறது.

இவர் துடிப்பாகவும், அச்ச மூட்டுபவராகவும் இருப்பதால் இவரை விலங்கு பூட்டி வைத்துள்ளதாகவும் மற்றொரு காரணம் கூறப்படுகிறது. இவரிடம் வேண்டி குழந்தைப்பேறு பெற்றவர்கள் பிறந்த குழந்தைக்கு நாதமுனி என பெயர் சூட்டி மகிழ்கின்றனர். இவருக்கு 'பூவிலங்கு முனி' என்ற பெயரும் உண்டு.

## முத்துமுனி:

முத்து மாலைகள், முத்து மகுடம், வெண்ணிற ஆடைகளைத் தரித்து வெண்மையான தோற்றத்தில் காட்சியளிப்பவர் முத்துமுனி ஆவார். பிரம்ம தேவரே 'முத்துமுனி'யாக விளங்குகின்றார் என கூறப்படுகிறது. திருமாலின் அவதாரங்களில் ஒன்றான

பரசுராமர்தான் ‘முத்துமுனி’ என்று சொல்பவர்களும் உண்டு. இவருக்கு ‘செட்டி முனி’ என்ற பெயரும் உண்டு. ஒரு சிலர் முருகப்பெருமானே முத்துமுனியாக இருப்பதாகவும் நம்புகின்றனர். இதனால் இவரை ‘முத்தையன்’ எனவும் அழைக்கிறார்கள்.

## சிங்கமுனி:

விஷ்ணுவின் நான்காவது அவதாரமான நரசிம்ம அவதாரத்தின் அம்சமே ‘சிங்கமுனி’ என கூறுகின்றனர். இவர் தனது கையில் வாளும், கேடயமும் கொண்டு விளங்குகிறார். முகம் சிலிர்த்த கோலத்தில் காட்சி தருகிறது. பிடரிகளுடன் கூடிய சிங்கமுகம் இவருக்கு அமைந்துள்ளது. இவரை வழிபாடு செய்தால், பில்லி, சூனியம், ஏவல் உள்ளிட்ட துஷ்ட சக்திகள் அகலும். பெரும்பகை நீங்கும் என்பது நம்பிக்கை.

## லாட முனி:

பழங்காலத்தில் லாட தேசம் ஒன்று இருந்ததாகவும், அந்த தேசத்தைச் சார்ந்த முனியே ‘லாடமுனி’ என்றும் சொல்லப்படுகிறது. சில ஆலயங்களில் முனிகளின் வரிசையில், இந்த லாட முனியும் இடம்பெற்று இருப்பதைக் காணலாம். சில ஆலயங்களில் லாட சன்னியாசி என்ற பெயரில் இவர் வீற்றிருப்பார்.

## சன்னியாசி முனி:

முனிகள் கூட்டத்தில் உயரம் குறைந்த தனி மேடையில் இவரை தரிசனம் செய்யலாம். இவரை ‘சந்நாசி அப்பன்’ என்றும், ‘சன்னியாசி முனி’ என்றும் அழைப்பார்கள். இவர் கவுபீனம் (கோவணம்) தரித்து யோக தண்டத்துடன், புலித்தோலில் அமர்ந்து காட்சி தருவார். இவரோடு நாய் ஒன்றும் இருக்கும்.

மதுரை மொட்டைக்கோபுரம் முனீஸ்வரன் வழிபாடு என்பது மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் வடக்கு வாசலில் அமைந்துள்ள மொட்டைக்கோபுரம் முனீஸ்வரன் வழிபாட்டைக் குறிக்கின்றது. நாட்டார் தெய்வங்களில் முனி என்பது காவல் தெய்வத்தின் பெயராகும். இந்தப் பெயரில் எண்ணற்றவர்கள் உள்ளதாக குறிப்புகள் உள்ளன.

காவல் தெய்வமாக விளங்கும் முனீஸ்வரரை, தென் மாவட்டங்களில் பாண்டி முனீஸ்வரர் என்றும், வடக்கு மேற்கு

மாவட்டங்களிலும் பால்முனீஸ்வரர் என்றும் வழிபடுகின்றனர். சென்னையில் இன்று பால்முனீஸ்வரர் என்பதை, பாடிகாட் முனீஸ்வரர் என்ற பெயரில் வழிபாடுகின்றனர்.

## பாடிகாட் முனீஸ்வராகிய பால்முனி:

சிவபெருமானின் வடிவமாக விளங்குபவர் பால்முனி. வீரமும், ஆவேசமும்நிறைந்த தெய்வமான இவர் அந்தகாசுரனை அழித்தவர். தமிழகத்தின் வட மாவட்டங்களில் உள்ள பல்வேறு கிராமங்களின் எல்லைத் தெய்வமாக பால் முனீஸ்வரர் உள்ளார். சென்னையில் மிகவும் பிரசித்தி பெற்றவராக விளங்குபவர் பாடிகாட் முனீஸ்வரர் ஆவார். 1860ம் ஆண்டு தமிழகத்தில் சென்னையில் தற்போதைய தலைமை செயலக இடத்தில், கோட்டை சாமியாக அருட்பாலித்து வந்தார். பாடிகாட் முனீஸ்வரர். வடஆற்காடு மாவட்டத்திலிருந்து சென்னைக்கு பிழைக்க வந்தவர்கள், தங்கள் குல தெய்வமான பால் முனீஸ்வரர் சிலையை தங்களுடன் கொண்டுவந்து இங்கு பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்துள்ளனர். அதுவே தற்காலத்தில் பாடிகாட் முனீஸ்வரர் ஆகியுள்ளார். அதன்பின் சில காரணங்களால் 85 ஆண்டுகளுக்கு முன்பு, பல்லவன் பணிமனையின் முன்பக்கம் சென்ட்ரல் ரயில்நிலையத்தின் எதிரில் உள்ள பாலத்தின் கீழே பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

அந்த காலகட்டத்தில், பல்லவன் இல்லத்தில் பேருந்துகளுக்கு ‘பாடி கட்டும்’ வேலைகள் நடந்தன. அதே போல், ரயில் பெட்டிகளுக்கு மேற்கூரை அமைக்கும் பணியும் நடந்து வந்தது. இரண்டு இயந்திர வாகனங்களுக்கும், பாடி கட்டும் இடத்தில் இருந்ததால் இந்த பால் முனீஸ்வரன், பாடிகாட் முனீஸ்வரன் என்ற பெயருடன் வணங்கப்பட்டு வருகிறார்.

வாகனங்களில் செல்லும்போது வாகனங்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் பாதுகாப்பாக இருப்பவர் என்பதால் இப்போதைய தலைமுறையினர் இவரை வழிபடும் தெய்வமாக மட்டுமல்ல, தம்மை அனுதினமும் பாதுகாக்கும் பாதுகாவலர் பால்முனி என்பதால் அவரை பாடிகார்டாக கருதி, பாடிகாட் முனீஸ்வரன் என்று பெயர்க்காரணத்தை எடுத்துக் கூறுகின்றனர். சென்னையில், புது வாகனம் வாங்கியோர், ஆர்.டி.ஓ., அலுவலகம் போவதற்கு முன்பாக, சென்னை, பல்லவன் இல்லத்தின் அருகில் உள்ள, பாடிகாட் முனீஸ்வரன் கோயிலுக்குச் செல்கிறார்கள். புது வாகனம் வாங்கிய பின்,

இங்கு பூஜை செய்தால், வாகனம் தம்மிடம் நிலையாக இருக்கும் என்றும், இந்த வாகனத்தில் பயணித்தால் விபத்துகள் ஏற்படாது என்றும் சென்னை வாசிகளின் நம்பிக்கையாக உள்ளது. இந்த பாடிகாட் முனீஸ்வரரை குலதெய்வமாக வழிபடும் நபர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மொட்டை அடித்து காது குத்துவதும், நம்பிக்கை வெற்றி பெற்றதும் முனீஸ்வரருக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு பொங்கல் வைத்து வழிபடுதும் உண்டு. திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளின் முதல் அழைப்பிதழை முனீஸ்வரர் பாதத்தில் வைத்து பூஜித்த பின்னரே மற்றவர்களுக்கு கொடுக்கின்றனர். அந்தளவு நம்புவர்களுக்கு நலனை வழங்குகிறார் பாடிகாட் முனீ ஸ்வரர். பூஜையின் போது வெற்றிலை பாக்கு, எலுமிச்சை, சுருட்டு இவருக்கு உகந்ததாகும். ஒருசிலர் வேண்டுதல்களுக்கு ஏற்ப மதுபானங்களும் படைத்து வணங்குகின்றனர்.

## முனீஸ்வரன் மந்திரம்:

*முனீஸ்வரன் மூல மந்திரம்*
*ஓம் ஹ்ரம் ஜடா மகுடதராய*
*உக்ர ரூபாய துஷ்ட மர்தனாய*
*சத்ரு சம்ஹாரனாய ஜடா முனீஸ்வராய நமஹ*

இந்த துதியை தினமும் காலை 3 முறை துதித்து வெளியே செல்வது நல்லது. செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் அருகிலுள்ள கிராம கோயிலுக்கு சென்று முன்பாக நல்லெண்ணெய் தீபம் ஏற்றி, இத்துதியை 27 முறை அல்லது 108 முறை துதித்தால் உங்களுக்கு எதிரிகளால் செய்யப்பட்ட செய்வினை ஏவல்களின் கடுமையான பாதிப்புகள் நீங்கும். வீட்டில் அண்டியிருக்கும் துஷ்ட சக்திகள் அனைத்தும் வெளியேறும். உடல் நலக்குறைவு, மனகுழப்ப நிலை நீங்கும். நினைத்த காரியங்கள் அனைத்தும் விரைவில் நிறைவேறும். ஊரில் முனீஸ்வரர் கோயில் இல்லாதவர்கள் வீட்டிலேயே முனீஸ்வரை மனதில் நினைத்து இந்த மந்திரத்தை துதித்து வழிபடலாம்.

## முனிஸ்வரன் காயத்திரி:

*ஓம் தத்புருஷாய வித்மஹே*
*மஹாவீராய தீமஹி*
*தந்நோ முனீஸ்வர ப்ரசோதயாத்.*

## முனீஸ்வரர் குலதெய்வ பூஜை மந்திரம்:

*ஓம் பவாய நம:*
*ஓம் சர்வாய நம:*
*ஓம் ருத்ராய நம:*
*ஓம் பசுபதே நம:*
*ஓம் உக்ராய நம:*
*ஓம் மஹாதேவாய நம:*
*ஓம் பீமாய நம:*
*ஓம் ஈசாய நம:*

தினமும் காலையும் மாலையும் கூறி எளிமையாக பூஜை செய்து வந்தால், நாம் எண்ணியதை நம் குலதெய்வம் முனீ ஸ்வரர் தருவார்.

முனி தோத்திர பாடல்

*ஓம் நமச்சிவாய ஓம்! ஓம் நமச்சிவாய!*
*ஓம் நமச்சிவாய ஓம்! ஓம் நமச்சிவாய!*
*அர்த்த ஜாம் வேளையில் அகிலம் தூங்கும் காலையில்*
*உக்கிரமாய் வருகிறார் உலக நாதன் தளபதி!*
*கச்சை கட்டி வருகிறார்! கையில் தண்டம் ஏந்தியே!*
*கர்ச்சனையும் புரிகிறார் கடலைப்போல பொங்கியே!*
*உச்சரிக்கும் மந்திரம் ஓம் கார நாதமாம்!*
*மெச்சுகிற வாத்தியம் மேலைக்கடல் இடிகளாம்!*
*அர்ச்சனைகள் புரிவது ஆடி அடங்கும் தலங்களாம்!*
*இத்தனைக்கும் அதிபதி கால தேவன் தளபதி!*
*சங்கு நாதசே கண்டி தாரை பறை வாத்தியம்*
*மங்கள மாய் முழங்கிட மகிமை யோடு வருகிறார்!*
*தொங்கும் மீசை கத்தியாம்! துடிக்கும் கண்ணில் சக்தியாம்*
*இங்கி தமாய் நெற்றியில் ஒளிரும் நீறு வெண்மையாய்!*
*துட்டமிகு தேவதை துடுக்கு செய்யும் யட்சிகள்*
*அத்தனையும் அடக்கவே ஆவேசம் கொண்டு வருகிறார்!*
*கட்டளைகள் போடுவார்! கடுமையாகச் சாடுவார்!*
*அத்தனைக்கும் அதிபதி! ஆனவர்தான் நம்பதி!*

*காளி ஆடும் வேளையில் கூடத் தாளம் போடுவார்!*
*கால காலன் பூசையில் தாளமோடு ஆடுவார்!*
*சாமமான வேளையில் கோணங்கியாய் மாறுவாய்!*
*சேம் நலம் கூறிடச் சித்தர் கோலம் சூடுவார்!*
*இரவு காலை இடைவெளி இருளும் ஒளியும் சேர்*
*வெளி புரவி மீது ஏறியே புயலைப் போல வருகிறார்!*
*அரியும் அரன் அயனுடன் அன்னை மூவர் போற்றிட*
*புரியும் கடமை விளங்கவே புன்னகையும் புரிகிறார்!*
*அஞ்செழுத்தை ஓதிடும் அனைவருக்கும் அடிமையாம்!*
*நெஞ்ச மதில் ஈசனை நினைத்த வர்க்கும் அடிமையாம்!*
*தஞ்சமென ஈசனைப் பணிபவர்க்கும் அடிமையாம்!*
*வஞ்ச மின்றி அவர்களை ஆதரிக்கும் வள்ளலாம்!*
*தில்லை நாதன் சேவடி தினமும் நாடும்*
*எந்தனின் தொல்லை போக்க வருபவர்!*
*தொடர்ந்து என்னைக் காப்பவர்!*
*பிள்ளை களாம் எங்களைப் பெருமையோடு காக்கவே*
*எல்லைக் காவல் தெய்வமாய் என்றும் வாழ்ந்து அருள்பவர்!*
*என்று வந்த போதிலும் எந்தன் மனம் விழித்திடும்!*
*நன்று ஓதும் மந்திரம் எந்தன் செவி கேட்டிடும்!*
*அந்தப் புரவிக் குளம்பொலி எந்தன் இல்லம் கடக்கையில்*
*சிந்தை யாவும் ஈசனின் சேவடியில் நிலைத்திடும்!*

வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் மனிதர்கள் நிறைந்த உலகம் இது. அதாவது இந்த பூமியில் நாம் வாழும் காலத்தில் நாம் ஏழையாகவோ அல்லது சராசரி பொருளாதார நிலைமை கொண்டிருந்தால் நம்மை மட்டமாக எண்ணுகின்றனர். அதே நேரம் நாம் சுயமாக செல்வம் ஈட்டி அதை நாம் அனுபவித்தால் மிகுந்த பொறாமை கொண்டு நம்மை மனதிற்குள்ளாகவே சபிக்கின்றனர். ஒரு சிலர் நாம் அழிய வேண்டும் என்பதாற்காக தீய மாந்த்ரீக கலைகளை பயன்படுத்தி நமக்கு துன்பம் தருகின்றனர். மேலும் நம்மை அறியாமல் நம்மை துஷ்ட சக்திகள் பிடிக்கின்றன. அத்தகைய பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்கும் முனீஸ்வரரை நாம் வழிபடுவதால் வாழ்வில் துன்பங்கள் நீங்கி அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

காப்பது விரதம். எல்லாவித துன்பங்களையும் போக்கும், கவசமாக இருந்து நம்மை காக்கும், நினைத்ததை நிறைவேற்றும் முக்கிய விரத முறைகளை பார்ப்போம். அவரவர் வணங்கும் தெய்வத்திற்கு ஏற்ப விரத முறைகளை மேற்கொண்டு நல்ல பலன்களை பெறலாம்.

# வித்யா கணபதி

## துன்பங்களை நீக்கும் சங்கடகர சதுர்த்தி:

சங்கடகர சதுர்த்தி என்பது விநாயகரை விரதமிருந்து வழிபாடு செய்யும் முறை ஆகும். மாதந்தோறும் பௌர்ணமியை அடுத்து வரும் நான்காவது நாளான சதுர்த்தியில் (தேய்பிறை சதுர்த்தி) இவ்வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது.

சங்கடகர என்பதற்கு துன்பங்களை நீக்குதல் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. இவ்விரத வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் தங்களுடைய வாழ்வியல் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் அடைவதாக கூறப்படுகிறது.

இவ்வழிபாடானது மிகவும் பழமையானது மற்றும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்யும் முறைகளில் முக்கியமானது ஆகும். இவ்விரதத்தினை தொடர்ந்து மேற்கொள்வதால் காரியத்தடை, திருமணத் தடை, நீண்ட நாள் நோய் ஆகியவை நீங்கும். நீண்ட ஆயுள், புத்தி கூர்மை, நிலையான செல்வம், நன் மக்கட் பேறு, சந்தோசம் ஆகியவை கிடைக்கும் என்று கருதப்படுகிறது.

## சங்கடங்கள் தீர்க்கும் சங்கடஹர சதுர்த்தி விரதம் இருப்பது எப்படி?

'பிடித்து வைத்தால் பிள்ளையார்' என்று சொல்வதற்கேற்ப வடிவமைக்கவும், வணங்கவும் எளிமையாக இருப்பவர் விநாயகப் பெருமான். எளிமையான மூர்த்தி என்றாலும், பெரும் கீர்த்தியைக் கொண்ட முழுமுதற்கடவுள் இவர். இவரை விலக்கிவிட்டு எந்த வழிபாட்டையும் மேற்கொள்ளவே முடியாது என்பதுதான் இவரின் சிறப்பம்சம். 'சங்கஷ்டம்' என்றால், கஷ்டங்கள் சேருதல் என்று

பொருள். வாழ்வில் சேரும் சகல சங்கடங்களையும் நீக்கும் சதுர்த்தி விரதம் இன்று கடைப்பிடிக்கப்படவிருக்கிறது. பௌர்ணமியை அடுத்த நான்காம் நாள், சங்கடஹர சதுர்த்தி தினம். அன்றைக்கு மாலையும் இரவும் சேரும் நேரத்தில் விநாயகருக்கு வழிபாடு செய்யப்படுகிறது.

விநாயகரைப் போலவே, விரதங்களுக்குள் முதன்மையானதும் எளிமையானதும் சதுர்த்தி விரதம்தான். முதன்முதலில் சதுர்த்தி விரதம் கடைப்பிடித்த பிறகுதான், கிருத்திகை, ஏகாதசி, பௌர்ணமி போன்ற மற்ற விரதங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும் பொதுவான நியதி.

அடக்கமின்றி தன்னைப் பார்த்து சிரித்த சந்திரனை, ஒளி யில்லாமல் போகும்படி சபித்தார் விநாயகர். கடும் தவத்துக்குப் பிறகு ஒரு சதுர்த்தி தினத்தில், சந்திரனின் சாபத்தை நீக்கினார் கணநாதர். எனவே, சந்திர பலம் பெற விரும்புவோர் சதுர்த்தி விரதம் மேற்கொள்ள வேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணர், பிரம்மா, புருசுண்டி முனிவர், செவ்வாய் ஆகியோர் இந்தச் சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டு வரம் பெற்றார்கள்' என்கின்றன ஞான நூல்கள்.

ஆவணி மாதத்தில் வருகிற விநாயக சதுர்த்தி தினத்தில்தான், சுக்லபட்ச சதுர்த்தி விரதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து மாதம்தோறும் வருகிற சதுர்த்தி நாள்களில் விரதமிருந்து விநாயகரை வழிபடலாம். 11 சதுர்த்தி தினங்களில் விரதமிருந்து சதுர்த்தி விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

சதுர்த்தி அன்று, காலையில் குளித்துவிட்டு, அருகிலுள்ள ஆலயத்துக்குச் செல்ல வேண்டும். பிள்ளையாரை 11 முறை வலம் வர வேண்டும். அருகம்புல் கொடுத்து, விநாயகருக்கு அர்ச்சனை செய்து, நெற்றிப்பொட்டில் குட்டிக்கொண்டும், தோப்புக்கரணம் போட்டும் விநாயகரை வணங்க வேண்டும்.

கோயிலுக்குச் சென்றுவிட்டு வீட்டுக்கு வந்ததும், ஆழாக்குப் பச்சரிசியை ஊறவைத்து, அத்துடன் சிறிது வெல்லத்தூளும் ஒரு வாழைப்பழமும் சேர்த்துப் பிசைந்து, பசுவுக்குக் கொடுக்க வேண்டும். கணபதியோடு பசு வழிபாடு செய்வது கூடுதல் நன்மை தரும்.

வீட்டிலேயே மோதகம், சித்திரான்னங்கள், பால், தேன், கொய்யா, வாழை, நாவல், கொழுக்கட்டை, சுண்டல் என்று தயாரித்து விநாயகருக்கு நைவேத்தியம் செய்து வழிபடலாம்.

விநாயகருக்குப் பிடித்த இலை வன்னி இலை. வன்னி இலைகளால் விநாயகரைப் பூஜிப்பது சிறப்பான பலன்களைத் தரும். அதிலும் வன்னி மரத்தடியே உறையும் கணபதி ஆனந்தமயமானவர். நினைத்த காரியம் தடையில்லாமல் நடக்க விரும்புபவர்கள், இந்த வன்னி விநாயகரை வலம் வந்து வேண்டினால், வேண்டியது கிடைக்கும் என்பது ஐதீகம்.

மரத்தடி, குளக்கரை, ஆற்றங்கரை ஆகிய இடங்களில் இருக்கும் கணபதி விசேஷமானவர். வெட்டவெளியில் வீற்றிரு க்கும் கணபதியை நீராட்டி வணங்குவது நமது தொன்று தொட்ட வழிபாடாக இருந்து வந்திருக்கிறது. 'நீராட்டி, பூச்சூட்டி, தூப தீபமிட்டு தெருப் பிள்ளையாரை வணங்கினால் தீராத வினையெல்லாம் தீரும்' என்பார்கள்.

ஒருமுறை பிரம்மனால் தொழுநோய் பெற்ற நவகிரகங்கள், கணபதியை பூஜித்து குணம் பெற்றார்கள். மனிதர்கள் மட்டுமன்றி சகல தேவர்களுக்கும் அருளியவர் கணபதிப் பெருமான்.

விநாயகர் வடிவத்துக்குள் பிரபஞ்சமே வியாபித்து நிற்பதைக் காட்டும்விதமாக, அரிசி மாவுக்குள் தேங்காயும் வெல்லமும் கலந்த இனிப்பான பூரணத்தை வைத்து, முதன்முதலில் விநாயகருக்குப் படைத்து அவரின் அருளைப் பெற்றார் ரிஷிபத்தினி அருந்ததி.

அனலாசுரனை விழுங்கியதால், கணபதிக்கு ஏற்பட்ட வயிற்றுத் தீயின் உஷ்ணத்தைக் குறைப்பதற்காக சப்த ரிஷிகளால் விநாயகருக்கு அறுகம்புல் சமர்ப்பிக்கப்பட்டது. அதையே நாம் இன்றும் கடைப்பிடிக்கிறோம்.

தன்னை மதிக்காமல் சென்ற பிரம்ம தேவரின் கர்வத்தை அடக்க நினைத்த விநாயகர், அவருக்குத் தன் சுயரூபத்தைக் காட்டி அனுக்கிரகம் செய்தார். தன் கர்வம் அடங்கிய பிரம்மதேவர், நெற்றிப்பொட்டில் குட்டிக்கொண்டு வணங்கினார். அதுவே இன்றும் தொடர்கிறது.

தோப்புக்கரணம் போடுவதென்பது சிறந்த யோகப் பயிற்சி. ஒருமுறை விஷ்ணுவின் சுதர்சன சக்கரத்தை விழுங்கிவிட்டார்

விநாயகர். விநாயகரைச் சிரிக்க வைத்தால்தான் சுதர்சன சக்கர த்தைத் திரும்பப் பெற முடியும். எனவே, விஷ்ணு தோப்புக்கரணம் போட்டு விநாயகரைச் சிரிக்கவைத்து தன்னுடைய சுதர்சன சக்கரத்தைத் திரும்பப் பெற்றார். இந்த விஷயத்தை காஞ்சி பெரியவர் தம்முடைய அருள்மொழியில் கூறியிருக்கிறார்.

பிறப்பிலேயே சகல ஞானங்களையும் பெற்ற கணபதிக்குக் குரு என்று எவருமே இல்லை. அவரே ஞான உருவானவர். அதனால்தான் கல்வியில் சிறந்து விளங்கவும், தேர்வில் வெற்றி பெறவும் எல்லாக் குழந்தைகளுக்கும் கணபதி அருளுகிறார்.

சங்கடஹர சதுர்த்தி நாளில் விநாயகரை,

*'மூஷிக வாகன மோதக ஹஸ்த*
*சாமர கர்ண விளம்பித சூத்ர*
*வாமன ரூப மஹேஸ்வர புத்ர*
*விக்ன விநாயக பாத நமஸ்தே...'*

என்ற ஸ்லோகத்தைச் சொல்லி வணங்கினால் எல்லாச் சங்கடங்களும் நீங்கி, சகல செளபாக்யங்களையும் பெறலாம்.

## மஹாசங்கடகர சதுர்த்தி:

ஆவணி மாதம் தேய்பிறை சதுர்த்தியில் வரும் சங்கடகர சதுர்த்தி மஹாசங்கடகர சதுர்த்தி என்று அழைக்கப்படுகிறது. இவ்விரத வழிபாட்டு முறையை முதலில் மேற்கொள்வோர் மகாசங்கடகரசதுர்த்தி நாளிலிருந்து ஆரம்பிக்கின்றனர்.

செவ்வாய் கிழமைகளில் வரும் சங்கடகர சதுர்த்தி அங்ககார சங்கடகர சதுர்த்தி என்று அழைக்கப்படுகிறது. நவகிரகங்களில் ஒன்றான செவ்வாய் இவ்விரத முறையினை கடைப்பிடித்தே நவகிரக அந்தஸ்த்தைப் பெற்றதால் இது சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## விரத வழிபாட்டு முறை:

இவ்விரத முறையில் நாள் முழுவதும் உணவு அருந்தாமல் இறை சிந்தனையுடன் வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. சங்கடகர சதுர்த்தி அன்று காலையில் எழுந்து நித்திய கடன்களை முடித்து குளிர்ந்த நீரில் நீராடி பின் வீட்டின் பூஜை அறையிலோ அல்லது அருகில் உள்ள விநாயகர் கோவிலிலோ வழிபாடு நடத்தப்படுகிறது.

பின் பகல் முழுவதும் உணவு அருந்தாமலும், ஒரு சிலர் பால், பழம் மட்டும் ஒரு வேளை உட்கொண்டும், பகலில் உறங்காமல் இறை சிந்தனையோடு இருந்து, மாலை நேரத்தில் அருகில் உள்ள விநாயகர் கோவிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகளில் கலந்து கொள்ளப்படுகிறது. பின் வீடு திரும்பி சந்திர தரிசனம் செய்து பின் உணவருந்தி விரத முறையானது பூர்த்தி செய்யப்படுகிறது.

இவ்விழாவில் விநாயகர் கோவில்களில் விநாயகருக்கு பால், பழம், மஞ்சள், திரவியப்பொடி, சந்தனம், நெய், தயிர், இளநீர் ஆகியவற்றால் அபிசேகம் செய்யப்படுகிறது. பின் விநாயகருக்கு அருகம்புல், வெள்ளெருக்கு மற்றும் மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெறுகிறது. விநாயகர் அகவல் மற்றும் விநாயகர் பற்றிய பாடல்கள் பாடப்படுகின்றன.

இவ்வழிபாட்டின்போது தீபாராதனை முடிந்தவுடன் கோவிலை எட்டு முறை வலம் வரப்பட்டு வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. விநாயக பெருமானின் 32 வடிவங்களில் ஒன்றான சங்கடநாசன கணபதி என்ற வடிவமே சங்கடகர சதுர்த்தி வழிபாட்டில் வணங்கப்படுகிறது.

## விரத மகிமை:

இவ்விரதத்தினை மேற்கொண்டு கிருத்தவீரியன் என்ற அரசன், கார்த்த வீரியன் என்ற வீர மகனைப் பெற்றான் எனவும், சந்திரன் சயரோகம் என்னும் நோய் நீங்கப்பெற்று புதுப்பொலிவு பெற்றான் எனவும், புருசுண்டி முனிவர் தனது பிதுர்களுக்கு சொர்க்கம் கிடைப்பதற்கு வழி செய்தார் எனவும், செவ்வாய் நவக்கிரக அந்தஸ்து பெற்றான் எனவும், அனுமன் சீதையைக் கண்டுபிடித்ததும், தமயந்தி நளனையும், அகலிகை கௌதமரையும் கணவனாக அடைந்தார்கள் எனவும் புராணங்கள் கூறுகின்றன.

மேலும் இவ்வழிபாடானது அனைத்து துன்பங்களையும் போக்கி, சௌபாக்கிய வாழ்வினைத் தரும் எனவும் நம்பப்படுகிறது. வளர்பிறை சதுர்த்தி (நான்காம் பிறை) சந்திரனைப் பார்ப்பதால் ஏற்படும் தொல்லையானது தேய்பிறை சங்கடகரசதுர்த்தி வழிபாட்டினை மேற்கொண்டால் சரியாகும் என்று நம்பப்படுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இவ்விரத வழிபாட்டினை மேற்கொண்டு நாமும் துன்பங்கள் நீங்கி நல்வாழ்வு பெறுவோம்.

நமது ஆலயத்தில் வித்தியா கணபதி என்ற திருநாமத்தோடு விநாயகப் பெருமான் அருள்கிறார். கல்வி, ஞானம் அருளும் மூர்த்தியாக இவர் விளங்குவதால் மாணவச்செல்வங்கள் இவரை வழிபட்டு கல்வியில் மேன்மை அடையலாம்.

## சர்வ வித்யா கணபதி மந்திரம்:

தினமும் காலையில் 108 முறை சொல்ல, கல்வி அறிவு வளர்ச்சி பெறும். அறிவு விருத்தியாகும். தீய எண்ணங்கள் நீங்கி நல்ல எண்ணங்கள் உண்டாகும்.

*ஐம் ப்ளும் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்*
*க்லௌம் கம் கணபதயே வர வரத ஐம் ப்ளும்*
*சர்வ வித்யாம் தேஹி ஸ்வாஹா*

## வன்னிமர பிள்ளையார்:

இவர் வலஞ்சுழியாக இருப்பது விசேஷம். அதிலும், வடக்கு திசை நோக்கி அருள் பாலித்தால் இன்னும் விசேஷம். அவிட்டம் நட்சத்திரம் அன்று இவரை நெல் பொரியால் அர்ச்சித்து, அபிஷேகம் செய்து வழிபடுவதோடு, கன்னிப் பெண்களுக்கு தானம் கொடுத்தால் திருமணம் ஆகாதவர்களுக்கு நல்ல வரன் கிடைத்து விரைவாக திருமணம் நடைபெறும்.

## வில்வமர பிள்ளையார்:

இவர் தெற்கு நோக்கி அமர்ந்திருப்பது சிறப்பு. சித்திரை நட்சத்திரம் அன்று, மளிகை பொருட்களை ஏழைகளுக்கு தானமாக வழங்கி, இந்த விநாயகரை வலம் வந்தால் பிரிந்த கணவன் மனைவியர் விரைவில் ஒன்று சேர்ந்துவிடுவார்கள். இதே விநாயகருக்கு வியாழன், புதன் கிழமைகளில் சந்தனத்தால் அலங்காரம் செய்து வழிபட, படிக்க பிடிக்காத பிள்ளைகளுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

## அரசமர பிள்ளையார்:

இவர் மேற்கு நோக்கி அமர்ந்திருப்பது சிறப்பு. பூசம் நட்சத்திரம் அன்று இவருக்கு அன்னாபிஷேகம் செய்தால் பயிர் விளைச்சல் பெருகும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி உடனே கிட்டும். பணக் கஷ்டம் தீரும்.

**ஆலமர பிள்ளையார்:**

இவர் வடக்கு நோக்கி இருப்பது சிறப்பு. மகம் நட்சத்திரம் அன்று இவருக்கு 5 வகை சித்திரான்னங்கள் (எலுமிச்சை, தயிர், புளி, தேங்காய் போன்றவை) படைத்து, தானம் செய்தால் கடுமையான நோய்கள் விலகிவிடும்.

**வேப்பமர பிள்ளையார்:**

இவர் கிழக்கு நோக்கி இருப்பது விசேஷம். உத்திரட்டாதி நட்சத்திரம் அன்று இவருக்கு தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பை எண்ணெய், விளக்கெண்ணெய், பசு நெய் ஆகிய 5 வித எண்ணெய் தீபமான ‘‘பஞ்சதீபம்‘‘ ஏற்றி வழிபட மனத்திற்கு பிடித்த வரன் அமையும். அலுவலகத்தில் மேலதிகாரியின் அடிமையாக செயல்புரியும் நிலை அகலும்.’’

**நெல்லிமர பிள்ளையார்:**

பரணி நட்சத்திரம் அன்று இவருக்கு தேங்காய் எண்ணெயை கொண்டு 108 விளக்குகள் ஏற்றி ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவ உதவி செய்தால் இரும்பு தொழில் அமோகமாக நடைபெறும். பெண் குழந்தைக்காக ஏங்குபவர்களுக்கு பெண் குழந்தை பிறக்கும். மன சாந்தியும் கிட்டும்.

**மாமர பிள்ளையார்:**

கேட்டை நட்சத்திரம் அன்று இந்த விநாயகருக்கு விபூதி காப்பிட்டு, 3 ஏழை சுமங்கலிப் பெண்களுக்கு உணவு, ஆடை தானம் செய்ய பிறரின் பகைமை, பொறாமையால் பாதிக்கப்பட்ட வியாபாரம் மறுபடியும் சிறக்கும். விரக்தியால் உருவாகும் தற்கொலை மனப்பான்மை தணிந்து, வாழ்வில் உறுதி ஏற்படும்.

**நாவல்மா பிள்ளையார்:**

இவர் வடக்கு நோக்கி இருப்பது விசேஷம். ரோகிணி நட்சத்திரம் அன்று புனித நதிக்கரையில் ஏழைச் சிறுவர்களுக்கு வெண்ணெய் தானம் அளித்து இவரை வழிபட்டுவர. பிரிந்த தம்பதியினர், குடும்பங்கள், உறவுகள் ஒன்று சேருவர்.

**புன்னைமர பிள்ளையார்:**

ஆயில்யம் நட்சத்திரம் அன்று இவருக்கு இளநீர் அபிஷேகம் செய்வதோடு, ஏழை நோயாளிகளுக்கு ஆடை தானம் செய்தால் கணவன் மனைவி உள்ள மனக்கசப்புகள் நீங்கும். தாம்பத்திய வாழ்க்கை வளமாகும்.

### இலுப்பை மர பிள்ளையார்:

ரேவதி நட்சத்திரம் அன்றும், செவ்வாய்க்கிழமைகளிலும் இவருக்கு பசுநெய்யை கொண்டு தீபம் ஏற்றி, மஞ்சள் நிற ஆடைகளை 10 வயதிற்கு உட்பட்ட சிறுமியர்களுக்கு அளித்துவர, தனித்து வாழும் முதியவர்கள், பெண்களுக்கு தற்காப்பு சக்தி கிடைக்கும். மிக உயர்ந்த கட்டிடம் கட்டுபவர்கள் எந்தவித விபத்துகள் இன்றி நஷ்டம் இன்றிஅதை கட்டி முடிக்க முடியும்.

### மகிழமர பிள்ளையார்:

அரிய விநாயகரான இவரை அனுஷம் நட்சத்திரம் அன்று மாதுளம் பழ முத்துகளால் அபிசேகம் செய்துவர வெளிநாடுகளில், ராணுவத்தில் உள்ளவர்கள் பாதுகாப்பான வாழ்வை பெறுவார்கள்.

### சந்தனமர பிள்ளையார்:

மிக மிக அபூர்வ விநாயகரான இவருக்கு, சதூர்த்தி, சதூர்த்தசி திதிகளில் பசும்பால் கொண்டு அபிஷேகம் செய்து வழிபட, அரிய ஆபூர்வ சாதனைகளை நிகழ்த்தும் வலிமை கிடைக்கும். புதியதாக ஆரம்பிக்கும் வியாபாரம் அமோகமாக நடைபெறும்.

## பாலமுருகன்

### வாழ்வை வளமாக்க கந்த சஷ்டி விரதம்:

முருகனுக்கு அழகுதமிழில் ஆயிரம் நாமங்கள் உண்டு. முருகன், கந்தன், குமரன், வேலன், செவ்வேள், செய்யோன் என்று அவன் திருப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஒரு சிறப்பை உடையது. அழகு தமிழில் முருகனின் பெயர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பொருள். இதில் ‘கந்தன்’ என்னும் பெயர் தனிச் சிறப்புடையது.

கந்த புராணம், கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி, கந்த சஷ்டிக் கவசம் எனக் கந்தன் என்னும் பெயரோடே முருகனின் பெருமைகள் பேசப்பட்டுவந்துள்ளன. `கந்து’ என்றால் பற்றுக் கோடு என்று பெயர். இந்த வாழ்க்கைக் கடலைக் கடக்க நாம் பற்றிக் கொள்ள வேண்டியவன் என்பதால் அவன் கந்தன். வடமொழி நிகண்டு ஒன்று கந்தன் என்ற சொல்லுக்கு பகைவர் களின் பராக்கிரமங்களை

ஒடுக்குபவன் என்று பொருள் சொல்கிறது. நமக்குள் இருக்கும் பகை நம் மனம். அதை ஒடுக்கி நல்வழிப்படுத்துபவன் ஆகையால் அவனைக் கந்தன் என்று சொல்வது பொருத்தமே. இத்தகைய பெருமைகளையுடைய கந்தனின் பெயராலே குறிப்பிடப்படும் கந்த சஷ்டி ஆறுநாள் விரதமாக முருக பக்தர்களால் கடைப்பிடிக்கப் படுகிறது.

## சூரசம்ஹாரம் உணர்த்தும் தத்துவம்:

முருகக் கடவுளின் பராக்கிரமங்களைச் சொல்வது சூர சம்ஹாரம். சூரபத்மன் ஆணவத்தில் முருகக் கடவுளோடு போர் புரிந்தான். தன் வலிமையாலும் மாயையாலும் முருகனை வெல்ல நினைத்தான். ஆனால், ஆதிமுதல்வானான ஈசனின் மகனுக்கு முன்பாக அவை தோற்றன. முருகனின் கை வேலுக்கு சக்திவேல் என்றுபெயர். அன்னையே தன் அம்சமாக அந்த வேலை முருகக் கடவுளுக்கு வழங்கினார். அந்த சக்திவேல் சூரர் படையை அழித்தது.

வீரத்தால் முருகனை வெல்ல முடியாது என்றுணர்ந்த சூர பத்மன், இறுதியில் தன் மாயையால் வெல்ல நினைத்து மாமரமாகி நின்றான். வீரத்தை வெல்ல சக்தியாக நின்ற வேல், மாயையை வெல்ல ஞானவேலாக மாறியது. மாயையை இருகூராகக் கிழித்தது. ஞானத்தின் தீண்டுதலால் மாயை அகல அந்த மாமரம், மாயை அற்ற சேவலாகவும் மயிலாகவும் மாறியது.

முருகப் பெருமான் கோயில் கொண்டுள்ள அனைத்து ஆலயங் களிலும் கந்த சஷ்டிப் பெருவிழா உற்சாகமாக கொண்டாடப்படும். முருகபக்தர்கள் ஆறுநாள்கள் விரதமிருந்து முருகனை வழிபடுவர்.

ஆறு நாட்களும் தினமும் அதிகாலையில் எழுந்து குளித்து திருநீறு தரித்து, முருகக் கடவுளை வணங்க வேண்டும். அருகில் இருக்கும் ஆலயங்களுக்குச் சென்று வணங்குவது சிறப்பு. குறிப்பாக, யாகசாலை அமைத்து பூஜைகள் நடைபெறும் ஆலயங்களுக்குச் செல்வது விசேஷம். ஆறுநாள்களும் உண்ணா நோன்பிருக்க வேண்டும். ஒருசிலர் பால் பழம் உட்கொள்வது வழக்கம். ஒருசிலர் ஒரு வேளை மட்டும் உப்பில்லா உணவை உண்பர். எதுவாக இருந்தாலும் ஆறுநாள்களும் ஒரே மாதிரி வழக்கத்தைப் பின்பற்றுவது நன்று.

முருகனின் பெருமைகளைப் பாடும், கந்த சஷ்டிக் கவசம், கந்த குரு கவசம், வேல்மாறல், வேல் வகுப்பு போன்ற துதிகளை நாள் முழுவதும் பாட வேண்டும். இதன்மூலம் மன ஒருமைப்பாடு சாத்தியப்படும்.

ஆறாவது நாள் சூர சம்ஹாரத்தை தரிசித்து நீராடிப் பின் முருகனை வழிபட வேண்டும். ஒருசிலர் சூரசம்ஹாரம் முடிந்ததும் உணவு எடுத்துக் கொள்வார்கள். அது தவறு. ஏழாவது நாள் காலையில் முருகப் பெருமானை தரிசித்த பின்பு உணவு உண்டு விரதம் முடிப்பதே சிறந்தது. விரதத்தில் முக்கியமானது பக்தி. இந்த ஆறுநாள்களும் முருகனை மனதில் நினைத்துத் துதித்த வண்ணம் இருக்க வேண்டும். அவ்வாறு விரதம் இருந்தால் முருகப் பெருமானின் அருள் ஸித்திக்கும் என்பது நம்பிக்கை.

முருகனுக்கு உகந்த சஷ்டி திதி மிகவும் விசேஷமானது. கார்த்திகை மாதத்தில் வரும் வளர்பிறை சஷ்டியில் விரதம் இருப்பவர்களுக்கு சகல வளங்களும் கிடைக்கும் என்பது ஐதீகம். இதில் மாதாமாதம் வரும் சஷ்டி தினமன்று வீட்டிலும், கோவிலிலும் பூஜைகள் மேற்கொள்பவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைப்பார்கள். குறிப்பாக குழந்தை இல்லாதவர்களுக்கு சஷ்டி விரதம் இருந்தால் விரைவில் குழந்தை பிறக்கும் என்கிற நம்பிக்கையும் பக்தர்களிடையே உண்டு.

சஷ்டி விரதம் குழந்தை வரம் மட்டுமல்ல! கேட்கும் வரங்கள் அத்தனையும் அளிக்கும் என்பது நம்பிக்கை. மிகவும் எளிமையாக இருக்கும் முருகப்பெருமான் திருஉருவத்தை பார்க்கும் பொழுதே பக்தி பரவசம் நமக்குள் மேலோங்கும். மாதா மாதம் வரும் சஷ்டி தினமன்று முருகன் கோவிலுக்கு சென்று அவரை தரிசித்தால் கிடைக்கும் பலன்கள் ஏராளம். உணவேதும் அருந்தாமல் அந்த நாளில் விரதம் இருந்து முருகனை நினைத்து, பக்தி பாடல்களை பாடினால் கேட்ட வரம் கிடைக்கும்.

காலண்டரில் திதியில் சஷ்டி என்று போட்டிருக்கும். அல்லது முருகனுடைய படம் நிச்சயமாக இருக்கும். இந்த நாளைக் குறித்துக் கொண்டு காலை முதல் மாலை வரை தண்ணீரைத் தவிர உணவு எதுவும் அருந்தாமல் விரதம் இருக்க வேண்டும். காலை, மாலை இருவேளையும் பூஜை செய்து விரதத்தை முடித்துக்

கொள்வது உத்தமம். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த விரதத்தை மேற்கொள்ளலாம். அதிகாலையிலேயே எழுந்து குளித்து முடித்து விட்டு பூஜையறையில் முருகன் படத்தின் முன்பு நெய் விளக்கு அல்லது நல்லெண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்ற வேண்டும்.

தாம்பூலத்தில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் கட்டாயம் வைக்க வேண்டும். அதில் ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை வையுங்கள். பூஜையில் தேங்காய் உடைத்து இருபுறமும் வைக்க வேண்டும். முருகனுக்கு சந்தனம், குங்குமம் இட்டு, மலர் மாலை சாற்றி அலங்காரம் செய்து கொள்ளுங்கள். அவருக்கு இஷ்ட நைவேத்தியமாக அவல் உணவுகள் வைக்கலாம். முழு நேர விரதம் இருக்க முடியாதவர்கள் பால் மற்றும் வாழைப்பழம் சாப்பிடலாம். அவ்வளவுதாங்க! எளிமையான முறையில் தீப, தூப, ஆராதனை காண்பித்து கந்த சஷ்டி கவசம் படிக்க வேண்டும்.

வேலைக்கு செல்பவர்கள் காலையில் பூஜையை முடித்து விட்டு விளக்கை மலை ஏற்றி விட்டு பின்னர் வேலைக்கு தாராளமாக செல்லலாம். மீண்டும் மாலையில் இதே போல் பூஜை செய்து விரதத்தை முடித்துக் கொள்ளலாம். வீட்டிலேயே இருப்பவர்கள் விரதம் முடியும் வரை முருகனுக்கு விளக்கு ஏற்றி வைப்பது மிகவும் நல்லது. காலையில் அல்லது மாலையில் முருகன் கோவிலுக்கு சென்று முருகனை தரிசனம் செய்து விட்டு வாருங்கள்.

இது போல் ஒவ்வொரு மாதமும் நாம் செய்து வர எண்ணிய எண்ணம் எல்லாம் ஈடேறும். சஷ்டி தினத்தில் வீட்டில் கந்த சஷ்டி கவசம் ஒலிப்பதும், அதனை நாம் வாசிப்பதும் நேர்மறை ஆற்றலை அதிகரிக்க செய்யும். தீய சக்திகளை விரட்டி அடிக்கும். சுப காரியங்கள் கைகூடும். கன்னிப் பெண்கள் சஷ்டி விரதம் இருந்தால் நல்ல ஒரு மண வாழ்க்கை அமையும் என்பது ஐதீகம். இதுவரை தெரியாதவர்கள் இனி இந்த விரதம் மேற்கொண்டு பயன்பெற்று முருகன் அருள் பெறலாம்.

நமது ஆலயத்தில் பாலமுருகன் என்ற திருநாமத்துடன் குமரன் வடிவேலன் முருகன் அருள்வதால், இவரை வழிபட புத்திர பாக்கியம் கிடைக்கும், தொழில் மேன்மையடையும்.

# தீபம் ஏற்றும் முறை

வீட்டின் முன்கதவைத் திறந்து, பின்புறக்கதவை சாத்திய பிறகே விளக்கேற்ற வேண்டும். விளக்கை குளிர்விக்கும் போது, கைகளை உயர்த்தி அணைக்கக் கூடாது. பூவால் குளிர்விக்கலாம். தூண்டும் குச்சியால் லேசாக அழுத்தலாம். இதற்கென பித்தளை குச்சிகள் கடைகளில் கிடைக்கின்றன.

சூரியோதயத்திற்கு முன்னதான பிரம்ம முகூர்த்த வேளையில் (காலை 4.30 – 6 மணி) விளக்கேற்றினால் பெரும் புண்ணியம் உண்டாகும். முன்வினைப் பாவம் விலகும். மாலை 4.30 – 6 மணிக்கு இடையே உள்ள பிரதோஷ வேளை சிவபெருமானுக்கும், நரசிம்ம மூர்த்திக்கும் மிகவும் உகந்தவை. இவ்வேளையில் தீபமேற்றினால் திருமணத்தடை, கல்வித் தடை நீங்கும் என்பது ஐதீகம். ஒரு வீட்டில் எந்த நேரத்தில் விளக்கேற்றினாலும், கருக்கல் நேரமான மாலை 6.30 மணிக்கு அவசியம் விளக்கேற்ற வேண்டும். இது அனைவருக்கும்பொதுவான நேரம்.

## விளக்கேற்றும் பலன்:

| | |
|---|---|
| ஒரு முகம் ஏற்றினால் | நினைத்த செயல்கள் நடக்கும் |
| இரு முகம் ஏற்றினால் | குடும்பம் சிறக்கும் |
| மூன்று முகம் ஏற்றினால் | புத்திரதோஷம் நீங்கும் |
| நான்கு முகம் ஏற்றினால் | செல்வம் பெருகும் |
| ஐந்து முகம் ஏற்றினால் | சகலநன்மையும் உண்டாகும் |

## விளக்கேற்றும் போது பாட வேண்டிய பாடல்:

திருவிளக்கினை இலட்சுமியின் அம்சமாகக் கருதுவது நமது இயல்பாகும். “அருளது சக்தியாகும் அரன் தனக்கு” இறைவருடைய அருளே சக்தி எனப் போற்றப்படுகிறது. அத்தகைய இறையருளை, இறைவியை தீபத்தில் அமரச்செய்து நலம் பெறுதல் பொருட்டே வீடுகளில் காலையும் மாலையும் விளக்கேற்றப்படுகிறது. “ஆவாஹனம்” எனும் சொல்லுக்கே “அழைத்தல்” என்றுதான் பொருள். எங்கும் நிறைந்திருக்கும் இறையருளை, சக்தியை நாம் ஏற்றும் தீபத்தில் அமர்ந்து அருள் புரியும்படி செய்ய வேண்டும்.

கீழே காணும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடலை பாடியவாறே தீபத்தை ஏற்ற வேண்டும். இப்பாடலை அருளியவர் குமரகுருபர சுவாமிகள் ஆவர். இவர் மதுரையில் அரங்கேற்றம் செ#யும் போது. மீனாட்சியம்மையே இப்பாடலுக்கு மகிழ்ந்து, குழந்தையாக வந்து, முத்து மாலையை அருளி மறைந்தாள் என்பது உண்மை வரலாறு ஆகும். தமிழகம் செய்த புண்ணியம் நமக்கு இப்பாடல்கள் கிடைத்துள்ளன. இப்பாடல் இன்றி தீபம் ஏற்றுவது மணம் இல்லா மலர் போல என உணர்க.

**பாடல் :**

*பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல்*
*பிடியே வருக முழுஞானப்*
*பெருக்கே வருக பிறைமௌலிப்*
*பெம்மான் முக்கண் சுடர்க்குஇடுநல்*

*விருந்தே வருக மும்முதற்கும்*
*வித்தே வருக வித்துஇன்றி*
*விளைக்கும் பரம ஆனந்தத்தின்*
*விளைவே வருக பழமறையின்*

*குருந்தே வருக அருள்பழுத்த*
*கொம்பே வருக திருக்கடைக்கண்*
*கொழித்த கருணைப் பெருவெள்ளம்*
*குடைவார் பிறவிப் பெரும்பிணிக்குஓர்*

*மருந்தே வருக பசுங்குதலை*
*மழலைக் கிளியே வருகவே*
*மலயத் துவசன் பெற்றபெரு*
*வாழ்வே வருக வருகவே*

இப்பாடலைப் பாடிய வண்ணம் விளக்கை ஏற்றினால் இறையருள் ஒளியில் விளங்கியிருப்பாள். விருந்தினரை அழைத்த பிறகு உபசாரம் செய்ய வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். பின்வரும் திருவாசகப் பாடலைப் பாட வேண்டும்.

**விளக்கு ஏற்றிய பிறகு பாட வேண்டிய திருவாசகப் பாடல் :**

*சோதியே சுடரே சூழொளி விளக்கே*
*சுரிகுழற் பணைமுலை மடந்தை*
*பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்*
*பங்கயத்து அயனும் மாலறியா*
*நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்*
*நிறைமலர்க் குருந்த மேவியசீர்*
*ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்*
*அதெந்துவே என்று அருளாயே.*

திருச்சிற்றம்பலம்.

*மண்ணில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்*
*உண்மையா மெனில் உலகர் முன் வருகென உரைப்பார்*
*வையநீடுக : மாமழை மன்னுக:*
*மெய் விரும்பிய அன்பர் விளங்குக:*
*சைவ நன்னெறிதாம் தழைத்து ஓங்குக*
*தெய்வ வெண்திருநீறு சிறக்கவே*

திருச்சிற்றம்பலம்.

*சிவம் பவது கல்யாணம் ஆயுராரோக்ய*
*வர்த்தனம் மம: துக்க வினாசாய ஸந்த்யா தீபம் நமோ நம:*

பொது பொருள்: மாலை நேரத்தில் நான் வழிபடும்திருவிளக்கே, உந்தன் மகிமையால் எங்கள் வீட்டில் சுப காரியங்கள் அரங்கேறட்டும், நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் நிலை ஆரோக்கியமும் நிலைக்கட்டும், இந்த வீட்டில் வசிப்பவர்களை துக்கமும் துன்பமும் அண்டாமல் காத்திட உன்னை வேண்டுகிறேன்.

இப்படிச் செய்வதால், வீடுகளில் செல்வம் நிறைந்து இன்பமாக வாழலாம். மங்களமே நடக்கும் வீடுகளில் செல்வம் நிறைந்திருக்கும்.

திருவிளக்கு என்பது பொதுவாக செல்வகடவுளான லட்சுமி தேவியின் அம்சமாக பார்க்கப்படுகிறது. ஆனாலும் அதில் சரஸ்வதி மற்றும் பார்வதி தேவிகளின் அம்சமும் இருக்கிறது. திருவிளக்குகளை நன்றாக சுத்தம் செய்து, அதற்குரிய பீடத்தில் வைத்து, பஞ்சதீப எண்ணெய் ஊற்றி, இரண்டு திரிகளை போட்டு தீபமேற்றிய பின்பு இந்த 108 போற்றி மந்திரங்களை உச்சரித்து வணங்க வேண்டும். இந்த திருவிளக்கு பூஜையை கோவிலில் செய்வதால் அந்த ஊருக்கு நன்மைகளையும், உலகிற்கு அமைதியையும் கொடுக்கும்.

# பிரதோஷ வழிபாடு

பிரதோஷ விரதம் மேற்கொண்டால் திருமணம் கைகூடும், பிள்ளை பாக்கியம் கிடைக்கும், வறுமைவிலகும், நோய்கள் நீங்கும், சகல காரியங்களில் வெற்றிகிடைக்கும், சகல சௌபாக்கியங்களையும் தரக்கூடியது பிரதோஷ விரதம்.

சிவபெருமான் அபிஷேகப் பிரியர். அவருக்கு பிரதோஷத்தன்று கறந்த பசும்பால் கொண்டு அபிஷேகம் செய்து வழிபட்டால் சிறப்பான பலனைப் பெறலாம். இல்லையென்றால் இளநீர் அபிஷேகம் செய்வது நல்லது. இறைவன் இயற்கையை விரும்பக் கூடியவன். எனவே இயற்கையான வில்வ இலை அர்ச்சனையும் சிவபெருமானை மகிழ்ச்சிப்படுத்தும். இது தவிர தும்பைப் பூ மாலை அணிவித்து பிரதோஷம் அன்று, சிவனை வழிபட்டால் சகல தோஷங்களும் விலகும்.

பிரதோஷ தினத்தில் அதிகாலையில் நீராடி திரு நீறணிந்து சிவ நாமம் ஆன நமசிவாய ஓதி உபவாசம் இருக்க வேண்டும். அன்று காலை முதல் பிரதோஷம் முடியும் வரை உணவு தவிர்த்து பிரதோஷ தரிசனம் முடித்து பிரசாதம் உண்டு விரதம் முடிக்க வேண்டும். பின்னர் இரவு உணவு சாப்பிடலாம். இப்படி பதினோறு பிரதோஷங்கள் விரதம் இருந்து சிவனை வழிபட்டால் சிவனருள் கிடைக்கும்.

பிரதோஷ காலம் என்பது சூரியன் அஸ்தமனத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும் சூரியன் அஸ்தமனத்திற்கு பின்

மூன்றே முக்கால் நாழிகையும் ஆகும். ஒருநாழிகை என்பது 24 நிமிடங்கள். ஒரு மணிக்கு இரண்டரை நாழிகைகள். ஆக சராசரியாக மாலை 4 மணியில் இருந்து இரவு 7.30 வரை பிரதோஷ காலம் உண்டு. சௌகரியத்திற்காக மாலை 4.30 முதல் 6.00வரை என சொல்லப்படுகிறது. நமது ஆலயத்தில் சிவரூபமாக அருள்பாலிக்கும் பால்முனீஸ்வரர் முன்பாக நந்திஎம்பெருமான் இருப்பதால், அவருக்கு பிரதோஷ வழிபாடு நடைபெறும். எனவே பக்தர்கள் இந்த வழிபாட்டில் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

## பிரதோஷங்கள் ஐந்து:

பிரதோஷத்தில் ஐந்து வகை உண்டு: நித்தியப் பிரதோஷம், பக்ஷப் பிரதோஷம், மாதப் பிரதோஷம், மகா பிரதோஷம், பிரளயப் பிரதோஷம் என்பவை அவை.

நித்தியப் பிரதோஷம்: ஒவ்வொரு நாளும் சூரியன் மறைவதற்கு முன்னால் இருக்கும் ஒன்றரை மணி நேரத்தில் இருந்து (சுமாராக மாலை 4.30 மணியில் இருந்து), நட்சத்திரங்கள் தோன்றக் கூடிய காலம் வரை உள்ள மாலை நேரம், நித்தியப் பிரதோஷம் எனப்படும்.

**பக்ஷப் பிரதோஷம்:** வளர்பிறை திரயோதசி திதியில் வரும் பிரதோஷம் ‘பக்ஷப் பிரதோஷம்’ எனப்படும்.

**மாதப் பிரதோஷம்:** தேய்பிறை திரயோதசி திதியில் வரும் பிரதோஷம் ‘மாதப் பிரதோஷம்’ எனப்படும்.

**மகா பிரதோஷம்:** சிவ பெருமான் விஷம் அருந்தி, துயர் தீர்த்த (பிரதோஷம்) காலம் ஒரு சனிக்கிழமையன்று என்பதால், சனிக்கிழமையில் வரும் பிரதோஷம் ‘மகா பிரதோஷம்’ எனப்படும்.

**பிரளய பிரதோஷம்:** பிரளய காலத்தில் எல்லா ஜீவராசிகளும் சிவபெருமானிடம் ஐக்கியம் ஆகும். உலக முடிவில் உண்டாகும் அந்தக் காலமே பிரளய பிரதோஷம் என அழைக்கப்படுகிறது.

## பிரதோஷத்தின்போது வலம் வரும் முறை:

மற்ற நாட்களில் சிவன் கோயிலில் வலம் வருவதற்கும் பிரதோஷத்தின்போது வலம் வருவதற்கும் வித்தியாசம் உண்டு. பிரதோஷத்தன்று வலம் வரும் முறையை, ‘சோமசூக்தப் பிரதட் சிணம்’ அல்லது சோமசூத்ரப் பிரதட்சிணம் என்று சொல்வார்கள்.

சோமசூக்தப் பிரதட்சிணம் செய்யும் முறை: முதலில் நந்தியை வணங்கி, பிறகு அதன் பிரணவ வடிவமான கொம்புகளின் நடுவே சிவபெருமானை தரிசனம் செய்ய வேண்டும்.

அதன் பிறகு வழக்கமாக வலம் வருவதற்கு மாறாக, அப்பிரதட்சிணமாக (எதிர் வலமாக) சண்டிகேஸ்வரர் சந்நிதி வரை போய்த் திரும்ப வேண்டும். அபிஷேகத் தீர்த்தம் வரும் வழியைத் தாண்டக் கூடாது!

இதன்பின் போன வழியே திரும்ப வேண்டும். நந்தியை தரிசித்து, தினந்தோறும் செய்யும் வழக்கப்படி வலம் வர வேண்டும். அப்போதும், அபிஷேகத் தீர்த்தம் வரும் வழியைத் தாண்டாமல் அப்படியே திரும்பி, நந்தி வரை வர வேண்டும். இந்த முறைப்படி மூன்று தடவை செய்ய வேண்டும். இதுவே 'சோமசூக்தப் பிரதட்சிணம்'.

ஆலகால விஷம் வெளிப்பட்டபோது, பயத்துடன் அனைவரும் கயிலையை நோக்கி ஓடினர். அப்போது விஷம் அப்பிரதட்சிணமாக அவர்களுக்கு எதிராக வந்து விரட்டியது. எனவே, அவர்கள் வந்த வழியே திரும்பி ஓடினர். அங்கும் அவர்களுக்கு எதிராக விஷம் வந்து துன்புறுத்தியது. இப்படி இடவலமாக அவர்கள் வலம் வந்த முறைதான் 'சோமசூக்தப் பிரதட்சிணம்' என்று கடைப்பிடிக்கப்படுகிறது.

பிரதோஷ காலத்தில் மேற்குறிப்பிட்ட முறைப்படி தரிசனம் செய்து வழிபட்டால் கடன், வியாதி, அகால மரணம், வறுமை, பாவம், மனத் துயரம் முதலானவை நீங்கும். முக்தி கிடைக்கும்.

பிரதோஷத்தின்போது கோயில்களில் கூட்டம் அதிகமாக இருக்கும். 'சோமசூக்தப் பிரதட்சிணம் செய்கிறேன் பேர்வழி' என்று நாம் நிலையாக நந்திக்கு முன்னால் நின்று கொள்ளக் கூடாது. கோபமே இல்லாமல், பொறுமையாக, அமைதியாக வலம் வர வேண்டும்.

## சிவனின் சப்தவிடங்கத் தலங்கள்:

சப்தவிடங்கத் தலங்கள் என்பவை சிவபெருமான் சுயம்பு விடங்க மூர்த்தியாக அருள்பாலிக்கும் ஏழு சிவாலயங்கள் ஆகும். சப்தம் என்றால் 'ஏழு'; விடங்கம் என்றால் 'உளியால்

செதுக்கப்படாத' என்று பொருள்; தலங்கள் என்றால் 'கோவில்கள்' ஆகும். அதாவது உளியால் செதுக்கப்படாமல் சுயம்பு மூர்த்தியாக சிவபெருமான் விடங்க மூர்த்தியாக அருள் புரியும் கோவில்கள் என்பதாகும். இவ்விடங்களில் மூலவரோடு சிறிய லிங்க வடிவ விடங்க மூர்த்தியும் சிறப்பித்து வழிபடப்படுகின்றனர்.

திருவாரூர், திருகாரவாசல், நாகபட்டிணம், திருநள்ளாறு, திருகோளிலி, திருமறைக்காடு, திருவாய்மூர் ஆகியவையே சப்தவிடங்க தலங்களாகும். இவ்வேழு தலங்களிலும் இறைவன் முறையே வீதிவிடங்கர், ஆதிவிடங்கர், சுந்தரவிடங்கர், நகவிடங்கர், அவனி விடங்கர், புவனிவிடங்கர், நீலவிடங்கர் என்ற நாமங்களில் அழைக்கப்படுகின்றனர்.

இவ்விடங்க மூர்த்திகள் தியாகராஜன் என்றே பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றனர். தியாகராஜன் என்பதற்கு 'கடவுள்களுக்கு எல்லாம் அரசன்' என்பது பொருளாகும். ஏழு தலங்களிலும் உள்ள விடங்க மூர்த்திகள் தங்களுக்கென்ற தனிசிறப்பினையும், நடன அசைவுகளையும், சிறப்பு பெயர்களையும் கொண்டிருக்கின்றனர்.

சப்தவிடங்கத் தலங்களில் விடங்க மூர்த்தியானவர் பொதுவாக கருவறைக்கு தென்கிழக்கில் தனிச்சந்நிதி கொண்டு சிம்மாசன மேடையில் வீரகட்கங்களுடன் அமர்ந்திருப்பார். விடங்கருக்கு எதிரில் உலோகத்தாலான நந்தியெம்பெருமானும், பரவை நாச்சி யாருடன் வணங்கிய நிலையில் சுந்தர மூர்த்தி நாயனாரும் காணப்படுகின்றனர். இத்தலங்களில் நவக்கிரகங்கள் ஒரே திசையில் நேர்கோட்டில் காணப்படுகின்றன.

## ஈசனின் அட்ட வீரட்டான தலங்கள்:

தமிழ்நாட்டில் உள்ள எட்டு திருத்தலங்களில் சிவபெருமானின் எட்டு வீரச் செயல்கள் நடந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அந்த எட்டு வீரச் செயல்களையும் அட்ட வீரட்டகாசம் என்றும், எட்டு தலங்களையும் அட்ட வீரட்டான தலங்கள் என்றும் கூறுவது வழக்கம். எட்டு வீரட்டான தலங்களிலும் ஈசனின் பெயர் வீரட்டா னேசுவரர் என்பதாகும்.

## திருக்கண்டியூர்

தஞ்சாவூர் திருவையாறு மார்க்கத்தில், திருவையாற்றுக்கு இரண்டு கி.மீ. முன்பாக இத்தலம் அமைந்துள்ளது. இறைவியின்

பெயர் மங்களநாயகி. இத்தலத்தில் பிரம்மனின் சிரசை ஈசன் தன் சூலத்தால் கண்டனம் செய்தார். அதனால் கண்டனபுரம் என அழைக்கப்பட்டு, மேலும் மருவி கண்டியூர் ஆயிற்று.

## திருக்குறுக்கை:

மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு செல்லும் வழியில், நீடூர் தாண்டி கொண்டால் என்ற இடத்திலிருந்து மூன்று கி.மீ தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. இறைவியின் பெயர் ஞானாம்பிகை. இத்தலத்தில், தன் மீது காமபாணம் தொடுத்து நின்ற மன்மதனை ஈசன் சாம்பலாக்கினார். காமனைத் தகனம் செய்த இடம் 'விபூதிக்குட்டை' என்ற பெயரில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது;

## திருப்பறியலூர்:

மயிலாடுதுறையிலிருந்து திருகடவூர் செல்லும் வழியில் செம்பனார் கோயிலிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இறைவியின் பெயர் இளங்கொடி அம்மை. பிரம்மனின் மூத்த குமாரனுமான, அன்னை பார்வதியின் தந்தையுமான தக்ஷனை, சிவபெருமான் வீரபத்திரர் சொரூபமாக) இங்கேதான் தலையைக் கொய்து அழித்தார். இத்தலம் தக்ஷபுரம் என்றும் அழைக்கப்படுகிறது.

## திருவழுவூர்:

மயிலாடுதுறையிலிருந்து ஏழு கி.மீ. தூரத்தில் இத்தலம் அமைந்துள்ளது. இறைவியின் பெயர் பால குஜாம்பாள். கஜாசுரன் என்ற அரக்கனை, ஈசன் ஆயிரம் கோடி சூரியன் திரண்டாற் போன்ற பேரொளி பொங்கும் தோற்றம் கொண்டு தோலை உரித்து மார்பைப் பிளந்து கொன்றார். மாசி மாத மகத்தன்று கஜ சம்ஹார நடனம் விசேஷமாக நடைபெறும்.

## திருவிற்குடி:

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் மார்க்கத்தில், நன்னிலத்திற்கு அடுத்தரயில்நிலையம் அருகில்இத்தலம் அமைந்துள்ளது. இறைவியின் பெயர் ஏலவார்குழலி (பரிமளாம்பிகை). ஜலந்தரன் என்ற அரக்கனை அழித்த தலம். ஈசன் தன் திருவடியால், நிலத்தில் ஒரு வட்டம் கீறினார். சக்கரமாக மாறிய அந்த வட்டத்தைப் பிளந்து

எடுக்குமாறு ஜலந்தரனை சவால் செய்தார். சக்கரத்தைப் பிளந்து எடுத்து தலையில் ஆணவத்தோடு வைத்தவுடன் ஜலந்தரன் தலைவெடித்து இரு கூறானது.

## திருவதிகை:

கடலூர் மாவட்டத்திலுள்ள பண்ருட்டியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இறைவியின் பெயர் பெரியநாயகி (திரிபுரசுந்தரி). தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி எனும் மூன்று அரக்கர்கள் பொன், வெள்ளி, இரும்பு எனும் மூன்று கோட்டைகளை அமைத்து முனிவர்களைத் துன்புறுத்தி வந்தனர். ஈசன் பிரம்மாண்டமான தேரில் அமர்ந்து போருக்குச் சென்று அரக்கர்களை அழித்து முப்புரங்களையும் சாம்பலாக்கினார்.

## திருக்கோவிலூர்:

விழுப்புரம் திருவண்ணாமலை மார்க்கத்தில் தென்பெண்ணை யாற்றின் கரையில் அமைந்துள்ளது. இறைவியின் பெயர் சிவானந்தவல்லி. ஈசனிடமிருந்தே அருள்பெற்று ஆணவத்தில் தேவர்களையும், முனிவர்களையும் துன்புறுத்தி வந்த அந்த காசுரனை அழித்த இடம் அது. அந்தகாசுரனைக் கீழே தள்ளி மிதித்துக்கொண்டு அவன் மேல் சூலத்தை பாய்ச்சும் நிலையில் அந்தகாசுர சம்ஹார மூர்த்தி தோற்றமளிக்கிறார்.

## திருக்கடவூர் (அ) திருக்கடையூர்:

தஞ்சாவூர் மாவட்டத்தில், மயிலாடுதுறை தரங்கம்பாடி மார்க்கத்தில் இத்தலம் அமைந்துள்ளது. இறைவியின் பெயர் அபிராமி. எமதர்மனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் முயற்சியில் மார்க்கண்டேயன் தன்னை சிவலிங்கத்தோடு சேர்த்து கட்டிக்கொண்டான். எமதர்மன் பாசக்கயிற்றை வீச அது லிங்கத்தையும் சுற்றிவிட்டது.

இறைவன் லிங்கத்திலிருந்து வெடித்து எழுந்து எமனைக் காலால் உதைத்து மாய்த்த தலம் இது. கார்த்திக்கை மாதம் சோமவார அபிஷேகம் நடக்கையில் இறைவன் திருமேனியில், எமதர்மன் பாசக்கயிற்றால் இழுத்த போது ஏற்பட்ட தழும்பைக் காணலாம் இக்கோயிலில் தினமும் திருமணங்கள், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற சடங்குகள் நடக்கும்.

## சிவனின் சிறப்பு தலங்கள்

**நவகைலாசம் :**

1. பாபநாசம், 2. சேரன்மகாதேவி, 3. கோடக நல்லூர் (நடுக்கல்லூர்), 4. குன்னத்தூர், 5. முறப்பநாடு, 6. ஸ்ரீ வைகுண்டம், 7. தென்திருப்பேரை, 8. ராஜபதி (குரும்பூர்) 9. சேர்ந்தபூமங்கலம் (ஆத்தூர்)

**நடராஜர் பஞ்ச ஸ்தலங்கள்:**

1. சிதம்பரம், 2. செப்பரை, 3. கரிசூழ்ந்தமங்கலம் (பத்தமடை) 4. கட்டாரி மங்கலம் (பேய்குளம்) 5. கருவேலங்குளம் (களக்காடு)

**ஐம்பூதங்கள் :**

1. திருவாரூர், காஞ்சிபுரம் நிலம் (மண்) 2. திருவானைக்கா நீர் (அப்பு) 3. திருவண்ணாமலை தி (தேயு) 4. திருக்காளத்தி வாயு (வளி), 5. சிதம்பரம் ஆகாயம் (விசும்பு)

**ஐந்து சபை :**

1. சிதம்பரம் பொன்மன்றம் (கனகசபை),
2. திருவாலங்காடு மணிமன்றம் (இரத்தினசபை),
3. மதுரை வெள்ளிமன்றம் (இரஜதசபை),
4. திருநெல்வேலி செப்புமன்றம் (தாமிரசபை),
5. திருக்குற்றாலம் ஓவியமன்றம் (சித்திரசபை)

## தட்சிணாமூர்த்தி தத்துவம்:

ஞானாசாரியனாக ஞான திருவடிவாக வழிபடப்படும் சிவ பெருமானின் திருக்கோலமே ஸ்ரீதட்சிணாமூர்த்தி திருவடிவம்.

‘தட்சிணம்’ என்பதற்கும் ‘தென்னன்’ என்ற தமிழ்ச் சொல்லுக்கும் தெற்கு, ஞானம், சாமர்த்தியம், ஆற்றல், ஆளுமை, யோகம் மற்றும் வீரம் என்று பல பொருள்கள் உண்டு. இவை யாவற்றையும் உடையவர் ஆதலால் ஸ்ரீதட்சிணாமூர்த்தி எனப்படுகிறார். இவர் தெற்கு நோக்கி அமர்ந்திருப்பவர்.

தெற்கு அழிவைக் குறிப்பது; வடக்கு அழியாத அமுத வாழ்வைக் குறிப்பது. ஆன்மாக்கள் அமுத வாழ்வை வேண்டி வழிபட ஏதுவாக, இறைவன் தெற்கு நோக்கி அமர்ந்து அமரத் தன்மையை அருளுகிறார். ஆனந்த வடிவினான ஆடல்வல்லானும்,

சாந்த வடிவினரான ஸ்ரீதட்சிணாமூர்த்தியும் தெற்கு நோக்கியே விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. அஞ்ஞானமாகிய அறியாமையைப் போக்கி ஞானத்தை போதிக்கும் திருவடிவே ஸ்ரீதட்சிணாமூர்த்தி.

## சிவனிடத்தில் சக்தி அடங்கிய வடிவம்!

ஆலமர்ச் செல்வனாக ஆலமரத்தின் அடியில்... சனகர், சனந் தனர், சனாதனர், சனத்குமாரர் ஆகிய சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் மௌனமாக சொல்லாமல் சொல்லி உபதேசிக்கும் ஞான வடிவம் இது.

சிவனிடத்தில் சக்தி அடங்கிய வடிவமும் இதுவே. ஆம், வெளித் தோற்றத்தில் சலனம் அற்ற சிவ வடிவமாகத் திகழ்ந்தாலும் உள்ளே ஞானமே வடிவான அருட்சக்தி நிறைந்து விளங்கும் சச்சிதானந்த வடிவம் இது.

## லிங்க வழிபாட்டின் தத்துவம்:

சிவபெருமானை உருவ வழிபாடு செய்வதைவிட லிங்க வழிபாடு செய்வதே சிறந்தது ‘என்று’ மகாபாரதத்தில் வியாசர் குறிப்பிடுகிறார். அதனால்தான் அனைத்து சிவாலயங்களிலும் லிங்க உருவில் சிவனை வழிபடுகிறோம்.

கண்ணால் காண இயலாத பேரொளி தன் ஆற்றலைச் சுருக்கிக் கொண்டு அன்பரின் ஓர் அடையாளச் சின்னமாய்க் காட்சியளிப்பதே லிங்க தத்துவம். அருவத்திற்கும் உருவத்திற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் மனதைச் சிவத்திடம் ஒருமுகப்படுத்துவது விங்கத்தின் அமைப்புமுறை. இடுப்பில் ஊன்றி. துறவு கோலத்தில், பொட்டைத் தலையோடு ருத்திராட்சமணி வடம் தாங்கி, கோவணம் அணிந்த நிலையில் நின்ற திருக்கோலத்துடன் இருக்கும்.

## 12 ஜோதிர்லிங்க தலங்கள்:

சிவபெருமான் ஜோதி வடிவமானவர். அடி முடி அறிய முடியாத அண்ணாமலையார் தன்னை ஜோதி வடிவமாக பிரம்மா மகாவி ஷ்ணுவிற்கு வெளிப்படுத்தினார்.

இந்தியாவில் மொத்தம் 12 ஜோதிர்லிங்க ஸ்தலங்கள் உள்ளன. அவற்றில் மத்திய பிரதேசம், உத்தரகண்ட் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் தலா 2 கோயில்கள் அமைந்துள்ளன. எஞ்சியுள்ள

6 ஜோதிர்லிங்க கோயில்கள் தமிழ்நாடு, ஜார்கண்ட், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், ஆந்திர பிரதேசம், குஜராத் மாநிலங்களில் அமைந்துள்ளன.

சிவபெருமான் ஜோதி வடிவத்தில் அருளும் ஜோதிர்லிங்க தலங்களை ஒரு ஸ்லோகத்தின் மூலம் எளிதில் புரிந்து கொள்ளலாம். குஜராத் சோமநாதம், ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனம், உஜ்ஜையினி மகாகாலேஸ்வரர், மத்திய பிரதேசம் ஓங்காரேஸ்வரர், உத்தரகண்ட் கேதாரேஸ்வரர், மகாராஷ்டிரம் பீம சங்கரர், திரியம்பகேஸ்வரர், ஜார்கண்ட் வைத்தியநாதர், குஜராத் நாகேஸ்வரர், தமிழ்நாடு ராமேஸ்வரம், உத்தரபிரதேசம் காசி விஸ்வநாதர், மகாராஷ்டிரம் குஸ்மேஸ்வரர் ஆலயம் ஆகியவை 12 ஜோதிர்லிங்க தலங்களாக போற்றப்படுகிறது.

# பக்த ஆஞ்சநேயர்

கம்பராமாயணத்தில் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் 6 காண்டங்கள் இருக்க, இதில் சுந்தர காண்டத்திற்க்கு மட்டும் எதற்காக இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது? ஏனென்றால், சுந்தரகாண்டத்தில் முழுக்க முழுக்க ஹனுமனின் லீலைகளைப் பற்றித் தான் சொல்லப் பட்டிருக்கிறது. ராமாயணத்தில் பெரிய திருப்பம் வருவதற்கு காரணமாக இருந்தவர் ஹனுமன் தான். ஹனுமனின் வீர தீர செயல்களை பற்றி கூறுவது தான் சுந்தரகாண்டம். இந்த சுந்தர காண்டத்தை பாராயணம் செய்பவர்களுக்கு நினைத்தது நடக்கும். நோய் நொடிகள் தீரும். திருமண தடை விலகும். நவகிரக தோஷம், ஏழரை சனி, அஷ்டமசனியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல விடிவு காலம் பிறக்கும்.

இதோடு மட்டுமல்லாமல் தினம்தோறும் சுந்தரகாண்டத்தை பாராயணம் செய்யும் போது மன தைரியம் அதிகரிக்கும். மன வலிமை உண்டாகும். நம்முடைய கவலையெல்லாம் மறந்து போகும். அறிவு, ஆற்றல், புகழ், துணிச்சல், ஆரோக்கியம், விழிப்புணர்வு, வாக்கு சாதுரியம் இவைகள் அனைத்தும் மேலோங்கி நிற்கும்.

குறிக்கோளை விரைவாக அடையலாம். நாம் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கும். கடவுளை விரைவாக நெருங்கும் சூழலையை நமக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே சுந்தரகாண்டம்.

ஆத்ம திருப்தியோடு, மனதார எவரொருவர் சுந்தரகாண்டத்தை தினம்தோறும் பாராயணம் செய்கிறாரோ, அவர் நல்ல மனிதனாக வாழும் தகுதியைப் பெற முடியும். சுந்தரகாண்டத்தை பாராயணம் செய்பவர்களுக்கு கட்டாயம் தோல்வியே இருக்காது. ஏனென்றால் அஞ்சனை மைந்தன் ஆஞ்சநேயன் இதுவரை தோல்வியை சந்தித்தது இல்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த சுந்தரகாண்டத்தை ராமநவமி தினத்திலிருந்து நீங்கள் படிக்க தொடங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா!

காலை வேளையில் எழுந்து, குளித்து, சுத்தமான பின்பு பூஜை அறையில் ஒரு தீபம் ஏற்றி வைத்து அமைதியான சூழ்நிலையில், சுந்தரகாண்டத்தை படிக்கத் தொடங்கலாம். ராமநவமி அன்று ராமருக்கு துளசி மாலை சாத்தி, அனுமனுக்கு வெண்ணெயை நைவேத்தியமாக படைத்து, முடிந்தால் வடைமாலை சாத்தி சுந்தர காண்டத்தை பாராயணம் செய்வது மிக அற்புதமான பலன்களைத் தரும். பெண்கள் மாதவிடாய் நாட்களில் சுந்தரகாண்டம் படிக்கக் கூடாது.

தினம்தோறும் சுந்தரகாண்டத்தை பாராயணம் செய்யும்போது நெய்வேத்தியம் செய்து வைக்க முடியாதவர்கள் ஒரு சொம்பில் தண்ணீர் வைத்து, அதில் இரண்டு கற்கண்டுகளைப் போட்டு நெய்வேதியமாக வைத்துக் கொள்ளலாம். கர்ப்பிணி பெண்கள் சுந்தரகாண்டத்தை தினந்தோறும் பாராயணம் செய்து வந்தால் அவர்களுக்கு பிறக்கப்போகும் குழந்தை தெய்வ கலாட்சம் நிறைந்த குழந்தையாக பிறக்கும் என்பது நம்பிக்கை. சுந்தரகாண்டத்தை உச்சரித்து விட்டு அசைவ சாப்பாட்டை சாப்பிடக்கூடாது. நீங்கள் சுந்தர காண்டத்தை பாராயணம் செய்யும் போது உங்கள் அருகில் ஒரு சிறிய பாயையோ அல்லது மர பலகையையோ போட்டு வைத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் நீங்கள் பாராயணம் செய்வதை கேட்பதற்கு உங்கள் வீட்டிற்கு ஹனுமன் கட்டாயம் வருகை தருவார் என்பது ஐதீகம். ஏனென்றால் ராமநாமம் உச்சரிக்கும் இடத்திலெல்லாம் அனுமன் வராமல் இருக்க மாட்டார். சுந்தரகாண்டத்தை முழுமையாக படித்து

பலன் பெற முடியாதவர்கள், இந்தப் பாடலை உச்சரிப்பதன் மூலம் சுந்தரகாண்டத்தை முழுமையாக படித்த பலனைப் பெறமுடியும். உங்களுக்காக சுந்தரகாண்ட பாடல்

**சுந்தர காண்டம்.**

*ஸ்ரீ ராம ஜெயம்*
*சுந்தரகாண்டம் என்றும் பெயர் சொல்லுவார்*
*இதை சுகம் தரும் சொர்க்கம் என்று மனதில் கொள்வார்*
*கண்டேன் சீதையை என்று காகுஸ்தனிடம் சொன்ன*
*கருணைமிகு ஸ்ரீராம பக்த ஆஞ்சநேயர் பெருமையிது*
*அஞ்சனை தனயன் அலைகடல் தாண்டவே*
*ஆயத்தமாகி நின்றான்*
*இராமபாணம் போல் இராட்சசர் மனை நோக்கி*
*இராஜகம்பீரத்தோடு இரமாதூதன் சென்றான்.*
*அங்கதனும், ஜாம்பவானும் அனைத்து வானரங்களும்*
*அன்புடன் விடை கொடுத்து வழியனுப்பினரே!*
*வானவர்கள் தானவர்கள் இந்திராதி தேவர்கள்*
*வழியெல்லாம் சூழ நின்று பூமாரி பொழிந்தனரே!*
*மைநாக பர்வதம் மாருதியை உபசரிக்க*
*மகிழ்வுடன் மாருதியும் மைநாகனைத் திருப்தி செய்து*
*சரசையை வெற்றிகண்டு சிம்ஹியை வதம் செய்து*
*சாகசமாய் சமுத்திரத்தை தாண்டியே*
*இலங்கை சென்றான்.*
*இடக்காக பேசிய இலங்கையின் தேவதையை*
*இடக்கையால் தண்டித்தவன் இதயத்தை கலக்கினான்*
*அழகான இலங்கையில் அன்னை*
*ஜானகியை அங்குமிங்கும்*
*தேடியே அசோகவனத்தில் கண்டான்.*
*சிம்சுபா மரத்தடியில் ஸ்ரீ ராமனை தியானம் செய்யும்*
*சீதாபிராட்டியைக் கண்டு சித்தம் கலங்கினான்*
*ராவணன் வெகுண்டிட ராட்சசியர் அரண்டிட*
*வைதேகி கலங்கிட வந்தான் துயர் துடைக்க !*
*கணையாழி கொடுத்து ஜெயராமன் சரிதம் சொல்லி*
*சூடாமணி பெற்றுக் கொண்ட சுந்தர ஆஞ்சநேயர்*
*அன்னையின் கண்ணீர் கண்டு*

*அரக்கர் மேல் கோபம் கொண்டு*
*அசோகவனம் அழித்து அனைவரையும் ஒழித்தான்.*
*பிரம்மாஸ்திரத்தினால் பிணைந்திட்ட ஆஞ்சநேயர்*
*பட்டாபிராமன் தன் பெருமையை எடுத்துரைக்க*
*வெகுண்ட இலங்கைவேந்தன் வையுங்கள்*
*தீ வாலுக் கென்றான்*
*வைத்த நெருப்பினால் வெந்ததே இலங்கை நகர்.*
*அரக்கனின் அகந்தையை அழித்திட்ட அனுமானும்*
*அன்னை ஜானகியிடம் அனுமதி பெற்றுக் கொண்டான்.*
*ஆகாய மார்க்கத்தில் ஆஞ்சநேயன் தாவி வந்தான்*
*அன்னையைக் கண்டுவிட்ட ஆனந்தத்தில் மெய் மறந்தான்.*
*ஆறாத சோகத்தில் ஆழ்ந்திருந்த ராமனிடம்*
*ஆஞ்சநேயர் கைகூப்பி வணங்கிகண்டேன்*
*சீதையை என்றான்.*
*வைதேகி வாய்மொழியை அடையாளமாகக் கூறி*
*சொல்லின் செல்வன் சுந்தர ஆஞ்சநேயர்*
*சூடாமணியை அளித்தான்.*
*மனம் மகிழ மாருதியை மார்போடணைத்து ராமர்*
*மைதிலியை சிறை மீட்க மறுகணம் சித்தமானான்.*
*ஆழ்கடலில் அற்புதமாய் அணைகட்டி படைகள் சூழ*
*அனுமானும் இலக்குவனும் உடன்வர புறப்பட்டான்.*
*அழித்திட்டான் இராவணனை ஒழித்திட்டான் அதர்மத்தை*
*அன்னை சீதாபிராட்டியை சிறை மீட்டு அடைந்திட்டான்.*
*அயோத்தி சென்று ராமர் அகிலம் புகழ ஆட்சி செய்தார்*
*அவனை சரணடைந்தோர்க்கு அவனருள்*
*என்றென்றும் உண்டு.*
*எங்கெங்கு ரகுநாத கீர்த்தனமோ அங்கங்கு*
*சிரம் மேல் கரம் குவித்து மனம் உருகி நீர் சொரிந்து*
*ஆனந்தத்தில் மூழ்கிக் கேட்கும் பரிபூரண பக்தனே!*
*ஸ்ரீ ஆஞ்சநேயனே, உன்னை பணிகின்றோம் பல முறை.*
*உன்னை பணிகின்றோம் பல முறை,*
*உன்னை பணிகின்றோம் பல முறை,*
*ஸ்ரீ ராமஜெயம்.*

# நாகாத்தம்மன்

நாகங்கள் இறை வழிபாட்டில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. ஜோதிட சாஸ்திரபடி சாயா கிரகங்கள், நிழல் கிரகங்கள் என்ற அமைப்பில் ராகுகேதுவாக நாகங்கள் கிரக பரிபாலனம் செய்கின்றன.

நாகங்களை பற்றி பல புராணவரலாறுகள், கர்ண பரம்பரை கதைகள், அனுபவ உண்மைகள் என ஏராளம் உள்ளது. நாகம் ஆலய வழிபாடுகளில் முக்கிய இடத்தை பெறுகிறது.

பகவான், அனந்தன் என்னும் நாகமாக இருந்து பூமியைக் காத்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு உதவியாக தட்சகன், வாசுகி, கார்க்கோடகன் முதலான நாகங்களும் பாதாள லோகத்தில் வசிக்கின்றனர். கஸ்யபருக்கு கத்ரு என்பவளிடம் தோன்றியவர் நாகர்.

அம்மன் கோயில்களில் அரச மரம், வேப்ப மரம் இணைந்து இருக்க அங்கே பாம்பு புற்று வழிபாடு பிரசித்தமாகும். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பாம்பு புற்றுக்கு சந்தனம், மஞ்சள் பூசி குங்குமப் பொட்டு வைத்து, அனந்தன், வாசுகி, கிஷ்காலன், அப்ஜன், மகரி, கங்குபாலன், கார்கோடன், குளிகன், பத்மன் ஆகிய நாக தேவர்களின் பெயர்களை உச்சரித்து புற்றுக்கு பால், முட்டை ஊற்றி வழிபடுவர். பல கோயில்களில் அம்மன்கள் நாக அம்சமாகவே அருள்பாலிக்கின்றனர்.

நாகாத்தம்மன், முப்பாத்தம்மன், காளியம்மன், மாரியம்மன் என ஒவ்வொரு ஊரிலும் பல விசேஷ பெயர்களில் வீற்றிருக்கிறாள் சக்தி. திருவேற்காட்டில் தேவி கருமாரி அம்மன், நாக சக்தியாக அமர்ந்து அருளாட்சி செய்து வருகிறாள். இத்தலத்தில் மிகப் பெரிய புற்றுக் கோயில் உள்ளது.

ஜோதிட சாஸ்திரப்படி நாகங்கள் ராகு, கேது என்ற பெயரில் கிரகங்களாக பரிபாலனம் செய்கின்றன. ராகு, யோக போகங்களுக்கும் கேது மோட்சம், ஞானத்திற்கும் அதிபதியாக ஆதிக்கம் செலுத்துகின்றனர். மனித வாழ்வில் மிக முக்கிய அம்சமான திருமண விஷயத்திலும், குழந்தை பாக்யம் அருள்வதிலும் தோஷத்தை ஏற்படுத்துவது இந்த ராகு கேதுதான்.

நாக தோஷம், சர்ப்ப தோஷம் என பல வகைகளில் தோஷங்களை ஏற்படுத்துவதில் ராகுகேதுவுக்கு நிகர் யாரும் இல்லை எனலாம். குழந்தை பிறக்கும்போது கழுத்தில் மாலை போட்டுக்கொண்டு பிறப்பது, கொடி சுற்றிக்கொண்டு பிறப்பது எல்லாம் ராகுகேதுவின் வேலையாகும்.

இத்தகைய சர்வ வல்லமை படைத்த நாக தேவதைகளுக்கு ஆடி மாதம் வளர்பிறை சதுர்த்தியன்று நாக சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. சதுர்த்தி என்றால் நான்கு. இந்த நான்கு என்ற எண் அலைவரிசை எண் கணித சாஸ்திரப்படி ராகுவை குறிப்பதாகும். எனவே நான்காவது திதியான சதுர்த்தி அன்று வழிபடுவது மிகவும் விசேஷமாகும்.

இத்தகைய கடுமையான தோஷங்களை ஏற்படுத்தும் நாகங்களின் அம்சமான ராகுகேதுவை நாக சதுர்த்தி தினத்தில் மனமுருகி வழிபட்டால் சகல தோஷ நிவர்த்தி ஏற்படும்.

ஆவணி மாதம் வளர்பிறை நான்காம் நாளாகிய சதுர்த்தியிலும், ஐந்தாம் நாளாகிய பஞ்சமியிலும் நாக சதுர்த்தி வருகின்றன. நாகதோஷம் உள்ளவர்களும் ராகு, கேது தோஷங்களால் பாதிப்பு உள்ளவர்களும் ஆடிமாதம் வளர்பிறை பஞ்சமி திதியில் ஆரம்பித்து நாகதேவதையை வழிபட்டு அனுசரிப்பதே நாகபஞ்சமி விரதம்.

ஆடி பஞ்சமி முதல் ஒவ்வொரு மாதமும் பஞ்சமி திதியன்று இந்த விரதத்தை மேற்கொண்டு 12ம் மாதமான ஆனிமாத வளர்பிறை பஞ்சமி அன்று இவ்விரதத்தை முடிப்பர்.

நமது ஸ்ரீ பால்முனீஸ்வரர் ஆலயத்தில் ஞாயிற்று கிழமை மாலை 4.30 முதல் 6 மணிவரை ராகு காலத்தில் நாகாத்தம்மனை வழிபடலாம். இந்த நேரத்தில் வழிபாடு செய்வது மிகவும் சிறப்பான பலன்களை தரவல்லது. ஏனெனில் ராகு காலம், ஞாயிற்றுக்கிழமை சூரிய ஓரை, பிரதோஷம் மூன்று சேர்ந்த காலம் என்பதால் அந்த சமயம் நாகாத்தம்மனை வழிபடுவது மிகவும் சிறப்பு.

ராகு கேது, சர்ப்ப தோஷங்கள் என்று அனைத்து விதமான தோஷங்களும் விலகி திருமணம் கைகூடும். பிரிந்திருக்கும் கணவன் மனைவி ஒன்று சேருவார்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். தொழில், வேலைவாய்ப்பு சிறக்கும்.

# வீட்டில் கவனிக்க

நம் வீட்டிலிருக்கும் எந்த செடிகளாக இருந்தாலும், அந்த செடிகளுக்கு சூரிய அஸ்தமனத்திற்கு (மாலை 6 மணிக்குப் பிறகு) பின்பு தண்ணீர் ஊற்றக்கூடாது.

குறிப்பாக துளசி செடிக்கு மாலை நேரத்தில் தண்ணீர் ஊற்றுவதை தவிர்த்துவிட வேண்டும். முடிந்தவரை 4 மணிக்கே துளசிச் செடிக்கு தண்ணீர் ஊற்றி விடுங்கள். மாலை நேரத்தில் துளசிச் செடிக்கு தண்ணீர் ஊற்றினால் வறுமை ஏற்படும் என்று முன்னோர்களால் சொல்லப்பட்டுள்ளது.

மாலை நேரத்தில் கோவில்களுக்கு செல்லும் சமயத்தில், அதுவும் தலவிருட்சம் இருக்கும் கோவிலுக்கு சென்றால், சூரிய அஸ்தமனத்திற்கு பின்பு, மாலை 6 மணிக்குப் பின்பு, கட்டாயம் அந்த விருட்சத்தை வலம் வரக்கூடாது. கோவில் மரமாக இருந்தாலும், மாலை 6 மணிக்கு மேல் அந்த மரத்தை வலம் வந்தால் நம் வீட்டில் வறுமை ஏற்படும் என்று சொல்கிறது சாஸ்திரம். இதையும் தவிர்த்து கொள்ளுங்கள்.

உங்களுடைய வீட்டில் செடி கொடிகள் வாடி இருந்தால், அதை முழுமையாக அப்புறப்படுத்திவிட வேண்டும். உங்கள் வீட்டு வாசலில் முன் பக்கத்தில் உள்ள வாடிய செடிகளை நீங்கள் தினந்தோறும் பார்த்து வந்தீர்கள் என்றால், அது உங்களுடைய அதிர்ஷ்டத்தை குறைக்கும். முக வசீகரத்தை குறைக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் அதிர்ஷ்டம் உள்ளவர்களாக இருந்தாலும், வாடிய செடிகளை பார்க்கும் போது உங்களின் அதிர்ஷ்டம் படிப்படியாக குறையக் கூடும் என்பது உண்மை. உங்களுடைய வீட்டின் பின்பக்கத்தில் வாடிய செடிகள் இருந்தால், அதன் மூலம் துர்தேவதைகளின் ஆட்சி உங்கள் வீட்டில் நடக்கும் என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதன்மூலம் வீட்டில் தேவையில்லாத பிரச்சனை, சண்டை, குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக நம் முன்னோர்களால் சொல்லப்பட்டுள்ளது.

உங்களுடைய மொட்டைமாடியில் வாடிய பூச்செடிகளும், கொடிகளும் இருந்தால், கட்டாயம் உங்கள் வீட்டில் இருக்கும் உங்களுடைய குழந்தைகளுக்கு நல்லது நடக்க தாமதம் ஏற்படும். அதாவது பெரிய வயதில் இருக்கும் குழந்தைகளுக்கு

திருமணத்தில் தடை, வேலை கிடைப்பதில் தடை, கல்வி கற்பதில் தடை, அதாவது உங்கள் வீட்டில் சுபகாரியங்கள் நடப்பதற்கும் தாமதம் ஏற்படும் என்று முன்னோர்களால் கூறப்பட்டுள்ளது. ஆக உங்கள் வீட்டில் முன் பக்கத்திலும், வாடிய செடிகள் இருக்கக் கூடாது. பின் பக்கத்திலும் இருக்கக்கூடாது. மொட்டை மாடியிலும் இருக்கக்கூடாது என்பதை மறந்துவிடாதீர்கள். இந்தச் வாடிய செடிகளை எல்லாம் வேரோடு அகற்றி விடுவது மிகவும் நல்லது.

## வாடிய செடிகளை அகற்ற உகந்த தினம்:

செவ்வாய்க்கிழமை அன்று, வாடிய செடிகளை அகற்றுவது நமக்கு நன்மையைத் தரும் என்று சில சித்தர் குறிப்புகளில் சொல்லப்பட்டுள்ளது.

## சமையலறையும், பூஜை அறையும்:

நம்முடைய வீட்டின் சமையலறையும், பூஜை அறையும் சுத்தமாக இருக்க வேண்டும், இந்த இடங்களில் மகாலட்சுமியும், தானிய லட்சுமியும் வாசம் செய்வதால், இந்த இடங்களுக்கு அதிகம் முக்கியத்துவம் உண்டு. ஆனால், இந்த இரண்டு இடங்களை தவிர நம்முடைய வீடு முழுவதும் சுத்தமாக இருக்கவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் தான்.

நம்முடைய வீட்டில் இருக்கும் குளியலறையும், கழிவறையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை. கழிவறையை சனிக்கிழமை அன்று சுத்தம் செய்வது நல்லது என்று ஜோதிட ரீதியாகவும், வாஸ்து ரீதியாகவும் சொல்லப்பட்டுள்ளது.

குளியலறையை தினந்தோறும் சுத்தம் செய்வது கொள்ளலாம். முடியாதவர்கள் குளியலறையும் சனிக்கிழமைகளில் சுத்தம் செய்வதில் தவறு ஒன்றும் இல்லை. குறிப்பாக கழிவறையை நீங்களே சுத்தம் செய்வதாக இருந்தாலும், அல்லது வேலை ஆட்கள் வந்து சுத்தம் செய்வதாக இருந்தாலும் சனிக்கிழமைகளில் சுத்தம் செய்யும் படிபார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அசுத்தமாக இருக்கும் இடங்கள் எல்லாம் சனி கிரகத்தை குறிப்பதாக ஜோதிடம் சொல்கிறது. குறிப்பாக சனிக்கிழமைகளில் கழிவறையை சுத்தம் செய்யும் போது வினிகர் வைத்து சுத்தம் செய்ய வேண்டும்.

உங்கள் வீட்டிற்கு வந்து, உங்களது கழிவறையை சுத்தம் செய்யும் அந்த பணியாளருக்கு மாதந்தோறும் சம்பளம் வழங்கப்பட்டாலும், சனிக்கிழமை அன்று வந்து கழிவறையை சுத்தம் செய்தவுடன் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

அந்த நபர் உங்களிடம் மாதச் சம்பளத்திற்குப் பணி புரிபவராக இருந்தாலும் சரி. மாதச் சம்பளத்தை தவிர்த்து, தனியாக ஒரு தொகையை அவருக்கு நீங்கள் மனதார கொடுப்பது மிகவும் சிறப்பானது. அதாவது உங்களால் முடிந்த தொகையை தரலாம்.

இதோடு மட்டும் நிறுத்திவிடாமல், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வரலாம். அந்த உதவி பொருட்களும், கருப்பு நிறத்தில் இருந்தால் இன்னும் சிறப்பு. காலில் அணிந்து கொள்ள கருப்பு நிறப் புதிய செருப்பு. கருப்பு நிற குடை. கருப்பு நிற போர்வை. இப்படிப்பட்ட உபயோகமுள்ள பொருட்களை அவர்களுக்கு நீங்கள் தானமாக கொடுப்பது மேலும் நல்ல பலனை தரும்.

# சந்திராஷ்டமம்

ராசிக்கு எட்டாமிடத்தில் சந்திரன் இருக்கும் காலம் சந்திராஷ்டமம். இது மொத்தம் 56 மணி நேரம். அதாவது இரண்டே கால் நாட்கள் நீடிக்கும். இதுபற்றி பயப்பட வேண்டாம். மாதத்திற்கு ஒருமுறை தான் இது வரும். இந்த சமயத்தில் மனதில் கோபத்தை உண்டாக்கும் சூழல் உண்டாகும். வீண் சண்டை, சச்சரவு ஏற்படும்.

## செய்ய வேண்டியது:

விநாயகர் வழிபாடு. அன்று உங்கள் கடமைகளைச் செய்யும் முன் பெற்ற தாயிடம் ஆசி பெறுவதும், குலதெய்வத்தை வழிபடு வதும் சிறந்த பரிகாரங்களாகும்.

## செய்யக் கூடாதது:

புதிய முயற்சி, சுபவிஷயம், விருந்து உபசரிப்பு ஆகியன. மவுனத்தைக் கடைபிடித்தால் பிரச்னை குறையும்.

# வளம் தரும் கோலம்

சூரியன் உதிப்பதற்கு முன்பு பசுஞ்சாணம் தெளித்து கோலம்போட வேண்டும். வீட்டு வாசலில் மகாலட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம் எனவே புது தண்ணீரே தெளிக்க வேண்டும். தெற்கு பார்த்தோ, தெற்கில் முடியும்படியோ கோலம்போடக்கூடாது. கோலம் போட்டதும் காவி இடுவது மும்மூர்த்திகளை குறிக்கும். சாணத்தின் பசுமை விஷ்ணுவையும், கோலமாவின் வெண்மை பிரம்மாவையும் காவியோட செம்மை சிவனையும் குறிக்கிறது. கோலத்தின் நடுவில் செம்பருத்தி, பூசணி பூ வைத்தால் செல்வம் சேரும். கோலத்திற்கு அரிசிமாவை பயன்படுத்துவது சிறப்பு.

வியாழக்கிழமை துளசி மாட கோலம், வெள்ளிக்கிழமை எட்டு இதழ் தாமரை கோலம் சனிக்கிழமை பவளமல்லி கோலம் பவுர்ணமி தினத்தன்று தாமரைப்பூ கோலம்

ஞாயிற்றுக்கிழமை செந்தாமரை கோலம், திங்கட்கிழமை அல்லி மலர்க்கோலம் செவ்வாய்க்கிழமை வில்வ இலை கோலம், புதன் மாவிலைக்கோலம் ஞாயிற்றுக்கிழமை சூரிய கோலம் போடுதல் நல்லது. வீட்டுச்சுவரையொட்டி போடும் பார்டர் கோலம் தீய சக்திகளை உள்ளே விடாது. விழா நாட்களில் இழை கோலம் போடுவது சிறப்பு . கோலத்தின் 8 பக்கத்திலும் பூக்கள் வைத்தால் திக்பாலகர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அமாவாசை மற்றும் இறந்தவர்களுக்கு திதி தரும் நாட்களில் வாசலில் கோலம் போடக் கூடாது. அந்த ஆத்மாக்களை வீட்டினுள் அனுமதிக்காமல் கோலங்கள் தடுக்கும். அதனால் நம் முன்னோர்கள் நம்மை தேடி வருகிற திதி தரும் நாளில் வாசலில் கோலங்கள் போடாமல் இருந்து, அவர்களை வீட்டினுள் அனுமதித்து ஆசி பெறுவது நல்லது. .இடது கையால் கோலம் போடக்கூடாது. பெண்கள் குனிந்து நின்றே கோலம் போட வேண்டும்

உட்கார்ந்து போட்டால் செல்வம் குறையும். கணவர் வெளியில் செல்லும் முன்பே கோலம் போட்டுவிடவேண்டும். கோலம் போட்ட பிறகே அடுப்பு பற்றவைக்க வேண்டும். ஆள்காட்டி விரலை நீக்கியே கோலம் போட வேண்டும். கிழமைக்கு ஏற்ப வாசலில் கோலமிட்டால் கெட்ட ஆவிகள் நம் வீட்டை நெருங்காது.

# ருத்திராட்சம்

ருத்திராட்சம்! சிவபக்தர்கள், சிவனடியார்கள் தங்கள் கழுத்தில் பயபக்தியுடன் அணிந்திருக்கும் சிவச்சின்னம். இது, கடவுண்மணி, சிவமணி, தெய்வமணி, நாயகமணி என்றும் அழைக்கப்படுகிறது. ருத்திரன் என்பது சிவபெருமானையும், அட்சம் என்பது கண்களையும் குறிப்பதாகும் சிவனின் முக்கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் சொட்டுகளே 'ருத்திராட்சம்'.

பகவானின் வலக்கண்ணிலிருந்து 12 மஞ்சள் நிற ருத்திராட்சங்களும், இடக்கண்ணிலிருந்து 16 வெண்ணிற ருத்திராட்சங்களும், நெற்றிக் கண்ணிலிருந்து 10 கருமை நிற ருத்திராட்சங்களும் தோன்றின.

## ருத்திராட்சம் உருவான வரலாறு:

தாரகாஷன், வித்யுன்மாலி, கமராஷன் என்னும் மூன்று அசுரர்கள் சிவபெருமானை வேண்டி, கடுமையான தவம் புரிந்தனர். தவத்தில் மனம்குளிர்ந்த இறைவன் தங்கம், வெள்ளி மற்றும் இரும்பால் ஆன மூன்று கோபுரங்களைத் தந்தருளினார். இந்தக் கோபுரங்களின் மூலமாகப் பறந்து செல்லும் சக்தியும், பல்வேறு ஆயுதங்களைப் பயன்படுத்தும் ஆற்றலும் அசுரர்களுக்குக் கிட்டியது. இதனால் அசுரர் மூவருக்கும் ஆணவம் தலைக்கேறியது. மூவுலகத்தையும் வென்று தேவர்களையும் துன்பப்படுத்தினர். அசுரர்களின் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமானும் அசுரர்களை அழித்துக் காப்பாற்றுவதாக உறுதி அளித்தார். தேவர்களுக்குச் செய்துகொடுத்த சத்தியத்தைக் காப்பதற்காக, சிவபெருமான் தன்னால் வரம் அருளப்பட்ட அசுரர் மூவரையும் தன் நெற்றிக்கண்ணால் அழித்தார்.

அந்நேரத்தில் அவர் மனம் இளகி அவரது கண்ணிலிருந்து கண்ணீர் கொட்டியது. அந்தக் கண்ணீரே 'ருத்திராட்சம்' ஆனது.

## யார் யார் ருத்திராட்சம் அணியலாம்?

ஆண், பெண் பேதமின்றி யாரும் அணியலாம். வயது வரம்பும் கிடையாது. ஆனால், ருத்திராட்சம் அணிந்தால் சில நடைமுறைகளை, பழக்கவழக்கங்களை நாம் பின்பற்ற வேண்டும்.

## ருத்திராட்சம் அணியவேண்டிய காலங்கள்:

கடவுளுக்குப் பூஜை செய்யும்போது அணியலாம். பிறருக்கு கல்வி அளிக்கும்போது அணியலாம். புனித நதிகளில் குளிக்கும் போது, பிதுர் தர்ப்பணம் செய்யும்போது, வீட்டில் நடைபெறும் சுப நிகழ்வுகளின்போது அணியலாம். எந்தவொரு செயலையும் ருத்திராட்சம் அணிந்து செய்யும் போது நமக்கு இறைவனின் அனுகூலம் கிடைப்பதால், நிச்சயம் வெற்றி கிட்டும்.

## ருத்திராட்சம் அணியும் முன்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறை:

ஒருவார காலம் பசு நெய் அல்லது நல்லெண்ணெயில் ருத்திராட்சத்தை ஊறவைக்கவேண்டும்.

பின்னர் நீரால் சுத்தப்படுத்தி, ஈரம் காய்ந்த பின்னர் திருநீறில் ஒருநாள் முழுவதும் வைத்திருக்கவேண்டும்.

அடுத்ததாக, பச்சைப் பசும்பாலில் கழுவவேண்டும், பின்பு மீண்டும் நீரால் தூய்மை படுத்தவேண்டும்.

தூய்மையான ருத்திராட்சத்தை பூஜை செய்து, மந்திரம் ஜபித்து அணியவேண்டும்.

## ருத்திராட்சம் அணிவதால், உண்டாகும் பொதுவான நன்மைகள்:

புண்ணிய நதிகளில் நீராடிய நன்மை கிட்டும்.

தீய சக்திகளிலிருந்து நம்மைக் காப்பாற்றும்.

மோட்சத்தை அருளும் சக்தியை வழங்கும்.

லட்சுமி கடாட்சம் கிட்டும்.

புத்திரப் பாக்கியம் உண்டாகும்.

ருத்திராட்சத்தைப் பார்ப்பது மகா புண்ணியம். தொட்டால் கோடி புண்ணியம். அணிந்துகொண்டால் பல கோடி புண்ணியமாகும்.

நம் உடல் பிணிகளைப் போக்கக் கூடியது.

108 ருத்திராட்சம் கொண்ட மாலையை அணிந்தால், ‘அசுவமேத யாகம்‘ செய்த புண்ணியம் உண்டாகும். பாவங்களிலிருந்து விடுதலை கிட்டும்.

ஒன்று முதல் பதினான்கு முகங்கள் கொண்ட ருத்திராட்சம் உண்டு. ருத்திராட்சங்களின் முகங்களைப் பொறுத்து நமக்கு கிடைக்கும் நன்மைகளும் மாறுபடும்.

பெரும்பாலும், இருமுகம், ஐந்துமுகம், 11 முகம், 14 முகமே சிவனடியார்களால் போற்றப்படுகிறது. சிவனடியார்களின் அறிவுரை மற்றும் ஆசீர்வாதத்துடன் ருத்திராட்சம் அணிவது சிறப்பு.

பிறப்பு, இறப்பு போன்ற தீட்டு நாள்களில் ருத்திராட்சம் அணியக் கூடாது.

**ருத்திராட்ச மரம் தல விருட்சமாக உள்ள ஆலயங்கள்:**

திருவலஞ்சுழி

அச்சுதமங்கலம்

தாராசுரம்

எத்தனை பெரிய கோடீஸ்வரர்கள் ஆனாலும், இறுதியில் வருவது ஈஸ்வரனின் திருவடிகளுக்குத்தான். 'ருத்திராட்சம்' எப்போதும் நம்மை இறைவனுக்கு அருகிலிருப்பது போல் உணர வைக்கும்.

# மகிமை மிகு திருநீறு

'நீறில்லா நெற்றி பாழ்' என்பது ஔவை வாக்கு. திருநீற்றின் பெருமை சொல்லவே உருவானது திருஞானசம்பந்தரின் 'திருநீற்றுப் பதிகம்'. மந்திரச் சொற்களுக்கு நிகரானது திருநீறு. தெய்விக ஆற்றல் தரும் புனிதச் சின்னமாகவே திருநீறு போற்றப்படுகிறது.

'நீறு' என்றால் சாம்பல்; 'திருநீறு' என்றால் மகிமை பொருந்திய நீறு என்று பொருள். திருநீறு `விபூதி' என்றும் அழைக்கப்படும். விபூதி என்றால் ஞானம், ஐஸ்வர்யம் என்றெல்லாம் பொருள் தரும். 'பிறப்பு, இறப்பு என்னும் கொடுமையான பிறவிச் சுழலிலிருந்து விடுவித்து, ஈசனின் திருவடிகளில் நம்மைக் கொண்டு சேர்க்கும் மாமருந்து திருநீறு' என்று போற்றுகிறது திருஞானசம்பந்தரின் திருநீற்றுப் பதிகம்.

சைவ சித்தாந்தம் கூறியபடி திருநீறு நான்கு வகைப்படும்.

அவை கல்பம், அணுகல்பம், உபகல்பம், அகல்பம் என்பன. கன்றுடன்கூடிய ஆரோக்கியமான பசுவின் சாணத்தை பிரம்ம மந்திரம் சொல்லி சிவாக்னியில் எரித்து உருவாக்குவது கல்பத் திருநீறு. காடுகளில் மேயும் பசுக்களின் சாணங்களைக் கொண்டு எரித்து செய்வது அணுகல்பத் திருநீறு. தொழுவங்களிலிருந்து எடுத்த சாணத்தைத் தீயில் எரித்து எடுக்கப்படுவது உபகல்பத் திருநீறு. இதுவே நாம் பயன்படுத்தும் திருநீறு. தரையில் விழுந்து கிடக்கும் சாணங்களை எடுத்துத் தயாரிக்கும் திருநீறு அகல்பம். `சாம்பலாகிவரும் திருநீறு மும்மலங்களையும் சாம்பலாக்கும்' என்கிறது தேவாரம்.

மனித உடலில் நெற்றி ஒரு முக்கியமான ஸ்தானம். புருவ மத்தியை வசியப்படுத்தி பல வகை சித்துகளை செய்ய முடியும் என்பது ஞானியர் வாக்கு. நெற்றியின் மையத்தைக் காப்பதற்கே விபூதி அணியப்படுகிறது. ஆக்ஞா, விசுத்தி சக்கரங்களை பாதுகாத்து ஆன்ம ஒளியைப் பெருக்குவது விபூதி. பிட்யூட்டரி சுரப்பியைத் தூண்டச் செய்யும் நெற்றியைச் சீர்படுத்தவும், சூரியக் கதிர்களின் சக்திகளை நெற்றி வழியாக உள்ளே செலுத்தவும் திருநீறு பயன்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. விபூதி சிறந்த கிருமி நாசினி என்றும், அதனால் பல நோய்களை வராமல் தடுக்க முடியும் என்றும் சொல்லப்படுகிறது. விபூதியை, ஜபம், மந்திரித்தல், யந்திரங்கள், மருத்துவம்... எனப் பல்வேறு பணிகளுக்காகப் பயன்படுத்திய விதத்தை அகத்திய மாமுனி `அகத்தியர் பரிபூரணம்' என்ற நூலில் விளக்கியிருக்கிறார். இதைப் படிப்பவர்கள் விபூதியைத் தவிர்க்கவே மாட்டார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம்.

## விபூதியைத் தரித்துக் கொள்ளும் முறைகளும் பெயர்களும்...

அப்படியே அள்ளி நெற்றியிலும் அங்கத்திலும் பூசிக்கொள்ளும் முறை 'உள் தூளனம்.'

ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல் என மூன்று விரலால் இடைவெளி விட்டு மூன்று கோடுகளாக விபூதியைத் தரித்துக்கொள்ளும் முறை திரிபுண்டரீகம். திருநீற்றை மோதிர

விரலால் எடுப்பதுதான் சிறந்தது. நம் உடலில் பவித்ரமான பாகம் என்று அதுதான் கூறப்படுகிறது. வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று, விபூதியை எடுத்து கீழே சிந்தாமல், வலது கையின் ஆட்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகியவற்றால் எடுத்து அண்ணாந்து, நெற்றியில் பூச வேண்டும். `திருச்சிற்றம்பலம்', `சிவாயநம:' அல்லது 'சிவ சிவ' என்று சொல்லி அணிந்துகொள்ள வேண்டும். காலை, மாலை, மற்றும் இரவு படுக்கப் போகும்போதும், வெளியே கிளம்பும்போதும் திருநீறு தரிக்க வேண்டும். நடந்துகொண்டும், படுத்துக்கொண்டும் விபூதி தரிக்கவே கூடாது. ஸ்வாமி முன்பும், குரு முன்பும், சிவனடியார் முன்பும் முகத்தைத் திருப்பி நின்று விபூதி அணிய வேண்டும்.

தலை நடுவில், நெற்றி, மார்பு நடுவில், தொப்புள் மேல், இடது தோள், வலது தோள், இடது கை நடுவில், வலது கை நடுவில், இடது வலது மணிக்கட்டுகள், இடது வலது இடுப்பு, இடது வலது கால் நடுவில், முதுகுக்குக் கீழ், கழுத்து, வலது காதில் ஒரு பொட்டு, இடது காதில் ஒரு பொட்டு என மொத்தம் 18 இடங்களில் திருநீறு அணியலாம் என்று சைவ ஆகமங்கள் கூறுகின்றன. ஒவ்வோர் இடத்தில் பூசும்போதும் ஒவ்வொரு வகையான பலன்களைப் பெறலாம்.

`திருநீற்றைக் கொடுப்பவர் செய்த தவப் பயன் மற்றும் பூஜா பலன்கள் அதை வாங்குவோருக்கும் போய்ச் சேர்ந்துவிடும். எனவே, தியானத்தில் சிறந்த உயர் நலன்கள் உள்ளவர்களிடம் மட்டுமே விபூதியைப் பெற வேண்டும்' என்கிறார் அகத்தியர். `ரூம் றீம் சிம்ரா' என்று சொல்லி பெரியவர்களிடம் திருநீறு வாங்கினால் அவர்களின் பரிபூரண ஆசியைப் பெறலாம் என்றும் கூறுகிறார்.

திருநீறு ஆன்மிக பலத்துக்கு மட்டுமல்ல, ஆரோக்கிய நலத்துக்கும் உகந்தது என்கிறது நவீன அறிவியல். `மகிமை என்ற பொருளைக்கொண்ட விபூதியின் ஆற்றல், சிவனுக்கு நிகரானது' என்கிறது திருஞான சம்பந்தரின் தேவாரம். தேவர்களும் ஞானிகளும் போற்றிய திருநீற்றை அணிந்து நாளும் வளமோடு வாழ்வோம்!

இப்போது கோவில்களில் தரும் திருநீறு தரம் வாய்ந்ததாக இல்லை. ஒரு காலத்தில் திருநீறை எப்படி தயாரித்தார்கள் தெரியுமா?

திருநீறில் மூன்றுவரை இருந்தது. அவை கற்பம், அனுகற்பம், உபகற்பம் என அழைக்கப்பட்டன. நோயில்லாத, கருப்பும் பொன்னிறமும் கலந்த பசுவின் (காராம்பசு) சாணத்தை கீழே விழாமல் தாமரை இலையில் விழும்படி செய்வர். அதில் ஒட்டி இருக்கும் தூசு, துரும்புகளை அகற்றிவிட்டு உருண்டையாகப் பிடிப்பர். கத்தமான இடத்தில் உலர்த்தி, தீயிலிட்டு சாம்பலாக்குவர். சாண உருண்டைகள் எரியும்போது மந்திரம் சொல்வர். இதுவே 'கற்பம்' எனப்பட்டது. இது எப்போதுமே நிலங்களிலும் சாத்தியம் இல்லை என்பதால், ஊருக்கு ஒதுக்குப்புறமாக காடுகளிலும், மேச்சல் மக்கள் காலடி அதிகம்படாத இடங்களில் பசுக்கள் இடும் சாணத்தை சுத்தம் செய்து, மந்திரம் கூறி அக்னியில் இட்டு 'அனுகற்பம்' என்னும் திருநீறை தயாரித்தனர். சாணத்தை எரித்த சாம்பலுடன் கோமியமும் சேர்த்து கலந்து, உருண்டையாக பிடித்து அக்னியில் இட்டு சேகரிப்பதே ''உபகற்பம்' எனப்படும் திருநீறானது.

சுத்தமான முறையில் தயாரிக்கப்பட்ட திருநீற்றை தினமும் சிறிதளவு நீரில் கரைத்து பருகிவந்தால் அனைத்துவித நோய்களும் நீங்கும் என்கிறார்கள். மேலும் உடலில் உள்ள அசுத்தங்கள் நீங்கி நல்ல உடல் பொலிவும் உண்டாகும். இதுதவிர, வாதம், பித்தம், கபம் ஆகியவற்றால் உண்டாகும் நோய்களையும் போக்கக்கூடிய சக்தி கொண்டது திருநீறு. காலை நேரத்தில் குளித்து முடித்ததும் திருநீறு பூசிக்கொள்வதால் பல நன்மைகள் கிடைக்கின்றன. அப்போது நெற்றியில் உள்ள ஈரத்தை திருநீறு உறிஞ்சிக் கொள்கிறது. நெற்றியின் உள்ளே சுரக்கும் 32 விதமான நீரை நன்கு உலர்த்தி 'சைனஸ்' போன்ற பெரும் தொல்லையில் இருந்து நம்மை காக்கிறது. திருநீறு மேலும், நெற்றி நிறைய திருநீறு பூசிக்கொண்டால் மந்தநிலை அகன்று மூளை கறுகறுப்படைகிறது. நமது முகமும் மங்களகரமாகிறது. அப்போது செய்யும் அனைத்து செயல்களும் வெற்றி பெறுகின்றன.

எல்லா விஷயங்களையும் இழுத்துப்போட்டு யோசிப்பதால் மன அமைதி கெட்டுவிடுகிறது. அது போன்ற சூழ்நிலையில் நன்றாக

கை, கால், முகம் கழுவிவிட்டோ அல்லது குளித்து விட்ட பின்னரோ நெற்றி நிறைய திருநீறு அணிந்துகொண்டால் மனம் ஓரளவுக்கு அமைதிபெறும். அப்போது பிடித்த தெய்வத்தை வணங்கினால் நமது மனம் இன்னும் அமைதி பெறும். பிரச்சினைக்கான அழகான தீர்வும் கூடவே கிடைக்கும்.

### திருநீறு அணியும் முறை :

விபூதியை வடக்கு முகமாகவோ, கிழக்கு முகமாகவோ இருந்து அண்ணாந்து பூசிக்கொள்ள வேண்டும். வலது கையில் உள்ள நடுவிரல் மூன்றினாலும் பூசிக்கொள்ள வேண்டும். விபூதி பூசிக் கொள்ளும்போது, 'சிவசிவ' என்று சொல்லிக் கொண்டு பூச வேண்டும். ஒரு விரலால் விபூதி பூசிக்கொள்ளவே கூடாது. தலை நடுங்கக் கூடாது. குனிந்து பூசக்கூடாது.

காலையில் சிவனை தரிசித்தால் நோய்கள் நீங்கும். நாம் தரிசிக்கும் நேரம் நண்பகல் என்றால் செல்வம் பெருகும். மாலை நேரத்தில் தரிசனம் கிடைத்தால் பாவம் விலகும். தரிசிக்கும் நேரம் அர்த்த ஜாமம் என்றால் முக்தி கிடைக்கும்.

## குங்குமம் வைக்கும் முறை

இந்து தர்ம சாஸ்திரத்தின்படி மங்கல பொருட்களைக் குறிப்பிடுவதில் முதலில் வருவது குங்குமம் எனலாம். பெண்களின் முகத்திற்கு குங்குமம் மங்கலத்தைச் சேர்ப்பதோடு, நம் நெற்றியில் இட்டுக் கொள்வதால் அந்த இடமே மங்களகரமாக ஸ்ரீ மகாலட்சுமி தேவியின் நீங்கா அருளைப் பெறலாம் என்பது நம்பிக்கை.

குங்குமத்தை இரு புருவங்களுக்கு மத்தியில் வைத்துக் கொள்ள வேண்டும். குங்குமத்தை பெண்கள் மட்டுமல்லாமல் ஆண்களும் இட்டுக் கொள்ளலாம்.

கோயிலில் குங்குமத்தை வாங்கும் போது வலது உள்ளங்கையில் வாங்கி, நெற்றியில் குங்குமம் வைத்துக்கொள்ளும் போது வலது மோதிர விரலை வளைத்து குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைக்க வேண்டும்.

வலது கை மோதிர விரலால் குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொள்வதால் நமக்கு தெய்வீக சக்தி கிடைக்கும்.

பெண்கள் குங்குமத்தை நெற்றி, மாங்கல்யம், தலை வகிட்டின் ஆரம்பம் ஆகிய மூன்று இடங்களில் வைத்துக் கொள்வத் தான் உத்தமமானது.

சந்தனம் இரு புருவங்களுக்கும் இடையில் இடுகின்ற போது, முளையின் பின்பகுதியில் ஞாபகங்கள் பதிவுசெய்து வைத்திருக்கும் Hippocampus என்னும் இடத்திற்கு ஞாபகங்களை சிறப்பான முறையில் அனுப்புவதற்கு இந்த frontal cortex சிறப்பான முறையில் தொழிற்படும். உடலுக்குக் குளிர்ச்சியூட்டும் சந்தனத்தை நெற்றியிலும் உடலின் பல பாகங்களிலும் இந்து சமயத்தவர் அணிந்திருக்கும் காட்சி நகைச்சுவையாகப் பார்வைக்குத் தோன்றினாலும் அற்புதமான காரணமும் அதில் உண்டு.

நெற்றியின் இரு புருவங்களுக்கும் இடையிலுள்ள நெற்றிப் பொட்டிலே பட்டும்படாமலும் சுண்டுவிரலை நேராகப்பிடித்தால் மனதில் ஒருவகை உணர்வு தோன்றும். அந்த உணர்வை அப்படியே வைத்துத் தியானம் செய்தால் மனஒருமைப்பாடு தோன்றும், சிந்தனை தெளிவுபெறும், எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் நிலை தோன்றும். அந்த நெற்றிப் பொட்டு குளிர்ச்சியுடன் இருக்க வேண்டாமா? இதற்குச் சந்தனம் சரியான மருந்து.

இந்த உண்மைகளைச் சாதாரணமாகக் கூறி விளங்கவைக்க முடியாத மக்களுக்கு நிலையில்லா வாழ்வின் நிலையை உணர்த்தி திருநீற்றை உடலில் அணிய வைத்திருக்கின்றார்கள். மதத்தைக் காட்டி விஞ்ஞான விளக்கத்தை மறைத்துக் கூறிய விளக்கங்களினால் மதம் வென்றது விளக்கம் மறைந்தது.

## விபூதி இட்டுக் கொள்ளும் இடங்களும், பலன்களும்:

1. புருவ மத்தியில் (ஆக்ஞா சக்கரம்) வாழ்வின் ஞானத்தை ஈர்த்துக் கொள்ளலாம்.
2. தொண்டைக்குழி (விசுத்தி சக்கரம்) நமது சக்தியை அதிகரித்துக் கொள்ளலாம்.
3. நெஞ்சுக்கூட்டின் மையப்பகுதி (அநாகதம்) தெய்வீக அன்பைப் பெறலாம். மேலும், விபூதியை எடுக்கும் போது, மோதிரவிரலால் எடுப்பது மிகவும் சிறந்தது. ஏனென்றால்,

நம் உடலிலேயே மிகவும் பவித்ரமான பாகம் என்று அதைச் சொல்லலாம். நம் வாழ்வையேகட்டுப்படுத்தும் சூட்சுமம் அங்கு உள்ளது.

# ஸ்படிக மாலை அற்புதங்கள்

ஸ்படிகம் என்பது ஒரு விதமான பாறை வகையை சார்ந்தது. இது பூமிக்கு அடியில் பல்லாயிரம் ஆண்டுகளாக புதையுண்ட நீர் இறுகி பாறைகளாக உருமாற்றம் அடைந்தவை. இந்த ஸ்படிக பாறையை சுத்தம் செய்து பல்வேறு வடிவங்களில் விற்பனை செய்கின்றனர். 1 முதல் 10 வரை தரம் பிரிக்கப்பட்டு கிடைக்கும். அதில் முதல் தரம் வாய்ந்த ஸ்படிகம் மிகவும் தெய்வீக சக்தி கொண்டவை. ஆன்மீக ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் ஸ்படிகம் சிறப்பு மிக்க பயன்களை அள்ளி தருபவை.

ஸ்படிகம் ஒரு மணி நேரத்திற்கு நாம் ஒரு நாளில் விடும் மூச்சின் எண்ணிக்கையில் அதிர்வலைகளை வெளியிடுவதாக கூறப்படுகிறது. அதனால் அபரிமிதமான சக்திகளை தன்னகத்தே கொண்டு அமைதியாக விளங்குகிறது. ஸ்படிகத்தில் சிவலிங்கம், நந்தி, விநாயகர் போன்ற சிலைகள் சிறியது முதல் பெரியது வரை பல்வேறு அளவுகளில் கிடைக்கிறது. இவற்றை வீட்டில் வைத்து பூஜை செய்பவர்களுக்கு அதன் ஈர்ப்பு சக்தியால் பல நன்மைகள் கிடைக்கும். வெறும் தண்ணீரால் அபிஷேகம் செய்தாலே போதும். இறைவனின் அருள் பரிபூரணமாக உங்களுக்கு கிடைக்கும்.

## ஸ்படிக மாலை:

ஸ்படிக மணிகளை எந்த உலோகத்தினோடும் இணைக்கக் கூடாது. ருத்ராட்சம் கொண்டும் சேர்க்கக் கூடாது. தங்கம் அல்லது வெள்ளியால் கோர்த்து மாலையாக செய்து கொள்ளலாம்.

## ஸ்படிக மாலையை யாரெல்லாம் அணியலாம்?

ஸ்படிக மாலையை குளிர்ப்பிரதேசங்களில் வாழ்பவர்கள், குளிர்ச்சியான உடல் தன்மை பெற்றவர்கள் கண்டிப்பாக அணிவதை தவிர்க்க வேண்டும். இவர்களை தவிர மற்றவர்கள்

யார் வேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம். குழந்தைகள், பெரியவர்கள், வயதானவர்கள் என்ற எந்த பாகுபாடும் இன்றி யார் வேண்டுமானாலும் அணியலாம். அதிகம் கோபப்படும் நபர்கள், பிளட் பிரஷர் இருப்பவர்கள், உஷ்ண உடம்பு கொண்டவர்கள் கட்டாயம் அணியலாம் நல்ல பலன் கிடைக்கும்.

## ஸ்படிக மாலை அணிவதால் என்ன பலன் கிடைக்கும்?

ஸ்படிக மாலையை அணிவதால் தெய்வ அருள் கிடைக்கும், அதன் அதிர்வலைகள் எப்போதும் உங்களை சுற்றி இருப்பதால் நல்ல எண்ணங்களை விதைக்க செய்யும், மனதை அமைதியாக வைத்திருக்க உதவும், தெளிவான சிந்தனையை தரும், தன்னம்பிக்கையை அதிகரிக்கும், உஷ்ணத்தை குறைத்து உங்களை குளிர்ச்சியுடன் வைக்கும், தீய சக்திகளை நெருங்க விடாமல் காக்கும்.

## ஸ்படிக மாலை அணியும்போது விதிமுறைகள் என்ன?

ஸ்படிக மாலை அணிந்து கொள்வதற்கு முன் குறைந்தது 3 மணி நேரம் வரை நல்ல தண்ணீரில் போட்டு விடவேண்டும். அதன் பின்னர் எடுத்து பயன்படுத்தலாம். வேறொருவர் அதை அணிந்தாலும் இதே போல் செய்ய வேண்டும். குளிக்கும் போதும் போட்டு கொண்டே குளிக்க வேண்டும். இரவில் உறங்கும் போது கட்டாயம் அவிழ்த்து தரையில் வைக்க வேண்டும். காலையில் நீங்கள் அணியும் போது மாலை குளிர்ச்சியாக இருக்கும். நாள் முழுவதும் உங்களது உஷ்ணத்தை இந்த ஸ்படிகம் ஈர்த்து கொண்டிருக்கும். இரவில் நீங்கள் கழற்றி வைக்கும் போது மாலை உஷ்ணமாகி விடும். தரையில் வைப்பதால் பூமியின் ஈர்ப்பு சக்தி பெற்று மீண்டும் குளிர்ந்த நிலைக்கு செல்லும்.

## ஸ்படிக ஜப மாலை பயன்கள்:

ஸ்படிக மாலையை ஜப மாலையாக உபயோகிக்கும் போது அதற்கென்று தனியாக வைத்து கொள்வது நல்லது. அல்லது அணியும் மாலையையும் உபயோகிக்கலாம். இறைவனின் நாமத்தை உச்சரித்து ஸ்படிக மாலையை உருட்டும் போது மனதில் இருக்கும் எதிர்மறை எண்ணங்கள் விலகி ஓடி விடும், மன பாரம், மன அழுத்தம் குறைந்து சாந்தமாக வைக்கும்.

**ஸ்படிகம் தரமானது என்று கண்டுபிடிப்பது எப்படி?**

முதல் தரம் வாய்ந்த ஸ்படிகத்தை தொட்டவுடன் குளிர்ச்சியை வெளிபடுத்தும். நீரில் போட்டால் கண்களுக்கு புலப்படாது. நீரோடு ஒன்றி இருக்கும் சக்தி பெற்றது ஸ்படிகம். எனவே தரம் வாய்ந்த ஸ்படிகத்தை வாங்கி பயன்படுத்தி நன்மைகளை அடையுங்கள்.

## சாளக்கிராமம்

சிவபெருமானின் அருவுருவத் தோற்றமாக எப்படி சிவலிங்கம் இருக்கிறதோ, அதே போல் திருமாலின் அருவுருவ திருக்கோலமாக சாளக்கிராமக் கல் பார்க்கப்படுகிறது.

சாளக்கிராமம் என்பது கண்ணனின் நிறம் கொண்ட கல் ஆகும். இது இந்துக்களால் திருமாலின் அருவத் தோற்றமாகக் கண்ணனை வழிபடப்படும் சிறப்புக் கல் இதுவாகும்.

இந்தப் புனிதக் கற்கள் நேபாளத்தின் முக்திநாத் பகுதியில் கண்டகி ஆற்றங்கரைகளில் காணப்படுகின்றன. இக்கற்களில் இயற்கையாகவே திருமாலின் சங்கு, சக்கரம், கதை, தாமரை போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. இவை நெடுங்காலமாக கோவில்கள், மடங்கள், வீடுகளில் வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது.

பலவித வடிவங்களில் உள்ள சாளக்கிராமங்கள் அவற்றில் பதிந்துள்ள உருவம், அமைப்பு இவற்றிற்கேற்ப திருமாலின் பல அவதாரங்களாக பெயரிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவை ஓர் குறிப்பிட்ட அமைப்பில் உள்ள கற்கள் கேசவம் என அழைக்கப்படுகின்றன.இவ்வாறாக கேசவம், மாதவம், நாராயணம், கோவிந்தம், விஷ்ணு, மதுசூதனம், திரிவிக்கிரமம், வாமனம், சிறீதரம், இரிசிகேசம், பத்மநாபம், தமோதரம், சங்கர்சனம், பிரத்யும்னம், நரசிம்மம், சனார்த்தனம், அரி, கிருஷ்ணம்,சந்தான கோபாலன், லட்சுமி நாராயணன், வராகமூர்த்தி, மத்ஸ்யமூர்த்தி, கூர்மம், சுதர்சனம், ஹிரண்ய கர்ப்பம் என்று 68 வகை சாளக்கிராமங்கள் உள்ளதாக பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சாளக்கிராம கல்லை தினமும் வழிபாடு செய்து வருவதனால் ஏற்படும் நன்மைகளையும், பக்தர்கள் அடையும் சிறப்புகளையும் இங்கே பார்க்கலாம். சாளக்கிராமத்திற்கு தினமும் பூஜை செய்து வழிபட்டு வந்தால், அவர்களின் மனம் தெளிவடையும். அப்படி தொடர்ந்து பல வருடங்களாக பூஜித்து வரும் ஒருவன், தானே விஷ்ணுவாகவே மாறிப்போவான் என்கிறது புராணம்.

சாளக்கிராமத்தில் காணப்படும் உருவங்களின் தரிசனம், கொலை பாவத்தைக் கூட போக்கும் சக்தி படைத்தது. சாளக்கிராம கல்லை தரிசித்தால், பூஜை செய்தால்தான் பலன் என்றில்லை. அந்த கல்லைப் பற்றி நினைத்தாலே, நம்முடைய பாவங்கள் அனைத்தும் விலகி ஓடும். இதனை பக்தியே இல்லாமல் ஒருவர் வழிபட்டாலும் சரி, எதிர்பாராத விதமாக திடீரென பூஜை செய்ய நேர்ந்தாலும் சரி, அவருக்கு சாளக்கிராம வழிபாட்டினால் முக்தி உண்டு.

சாளக்கிராம பூஜை செய்பவர்களுக்கு எமபயம் கிடையாது. இதற்கு சந்தனம் பூசி, மலர் சூடி, தீப மற்றும் தூப ஆராதனைகள் செய்வதோடு, நைவேத்தியமும் படைத்து வழிபட்டு வந்தால், அவர்களுக்கு விஷ்ணு லோகத்தில் வாழும் பாக்கியம் கிடைக்கும்.

சாளக்கிராமம் இருக்கும் இடமானது, இறைவன் இருக்கும் இடத்திற்குச் சமமானது. எனவே அங்கிருக்கும் தீவினைகள் எல்லாம் அகன்று விடும்.

சாளக்கிராமத்திற்கு செய்யும் அபிஷேக தீர்த்தத்தை தலையில் தெளித்து, பருகினாலே புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலன் வந்துசேரும். விஷ்ணு சகஸ்ரநாமத்தை படித்தபடியே, சாளக்கிராம பூஜை செய்பவர்கள் விஷ்ணுவின் திருவடியை அடைவார்கள்.

# கோமதி சக்கரம்

## திருமகளின் அருளை எளிதாக பெற்றுத்தரும்:

குஜராத் மாநிலம் துவாரகாவில் உள்ள கோமதி நதியில் அதிகமாக கிடைப்பதால், அந்தப் பெயர் வந்து விட்டது. வட மாநிலங்களில் பிரபலமாக உள்ள ஸ்ரீமகாலட்சுமி அம்சம் பொருந்திய இந்த வகைக் கல், தென் மாநிலங்களில் அதிகம்

அறியப்படாமல் இருப்பதற்கு காரணம், அதனை ரகசியமாக பலரும் பயன்படுத்தி வந்ததுதான். பூஜை அறையில் வைப்பதோடு, மோதிர வடிவத்திலும், கழுத்தில் அணியும் சங்கிலி வடிவிலும் இந்த கோமதி சக்கரத்தைப் பயன்படுத்தலாம். திருமகளின் அருளை எளிதாக பெற்றுத்தரும் பொருட்களில் ஒன்றாக இருக்கும் கோமதி சக்கரம் பற்றிய பல்வேறு தகவல்களை இங்கே காணலாம்.

## ராமர் கணையாழி:

ராமபிரான், ஆஞ்சநேயர் மூலம் சீதாதேவிக்கு தன்னை அடையாளம் காட்ட கொடுத்தது ரகுவம்ச கணையாழி ஆகும். அதில் கோமதி சக்கரம் பதிக்கப்பட்டிருந்ததாக புராணங்கள் கூறுகின்றன. மேலும் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்குவது லக்னோவில் உள்ள நைமிசாரண்யம். இங்கு பெருமாளின் சக்ராயுதம் உருண்டு ஓடி, தவம் செய்ய சிறந்த இடத்தை முனிவர்களுக்கு காட்டியது. அவ்வாறு சக்ராயுதம் உருண்டு ஓடியபோது, அங்கிருந்த ஆற்றில் சக்ராயுதம் பட்டு தெறித்த நீர்த்துளிகள் தான், கோமதி சக்கரமாக மாறியதாக ஐதீகம். கோமதி சக்கர கல்லின் வேறு பெயர்கள் துவாரகா கல், விஷ்ணு சக்கர கல், நாராயண கல், திருவலஞ்சுழி கல் ஆகியனவாகும்.

கோமதி சக்கரத்தை வணங்குவதன் வாயிலாக அயோத்தி, மதுரா, ஹரித்துவார், காசி, காஞ்சீபுரம், அவந்திகா எனும் உஜ்ஜை யினி, துவாரகை ஆகிய முக்தி தரும் 7 தலங்களை வணங்கிய பலன் கிடைக்கும். ஸ்ரீகிருஷ்ணர், கோமதி சக்கரத்தின் மீது அமைந்த தர்ம சபையில் வீற்றிருந்து ஆட்சி செய்து வந்தார் என்கிறது புராணம். சொர்க்க துவாரம், மோட்ச துவாரம் என்ற இடத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இந்த கல்லை விஷ்வகர்மா மூலமாக உருவாக்கி துவாரகை மக்களின் சங்கடங்களை தீர்க்க அருளி யிருக்கிறார்.

## பிள்ளையார் சுழி:

கோமதி ஆறு, சரயு நதி ஆகிய இரு நதிகளும் சேரும் இடத்தை, இரு பாம்புகள் கூடும் இடம் என்று கூறுகிறார்கள்.

லக்னோவில் கோமதி நதியும், அயோத்தியில் சரயு நதியும் உருவாகிறது. இவ்விரு நதிகளிலும் அபூர்வமான கோமதி சக்கரங்கள் கிடைக்கின்றன. ஸ்ரீவிநாயக பெருமானோடும், நாக தேவதையோடும் தொடர்புள்ளதாக கோமதி சக்கரம் கருதப்படுகிறது. அதாவது எந்தச் செயலையும் தொடங்குவதற்கு முன்னர் பிள்ளையார் சுழி போடுவது வழக்கம். பிள்ளையார் சுழியின் இன்னொரு பெயர் ‘கோமதி திருவலஞ்சுழி’ எனப்படும். இதன் உட்பொருள், சுபம் மற்றும் லாபம் என்பதாக உள்ளது. சுதர்சன சக்கரத்திற்கும் முந்தையதாக கோமதி சக்கரம் கருதப்படுகிறது.

## நட்சத்திர பாகங்கள்:

அவரவருக்கு உரிய நட்சத்திரத்திற்குரிய பாகத்தை அறிந்து அந்தப் பகுதியை தொட்டோ அல்லது மனதில் நினைத்தோ தெய்வத்தை வழிபடுவதன் மூலமாக, பூரண அருளை பெற இயலும் என்பது ரகசிய பூஜை வழிமுறையாக இருந்து வருகிறது. மேலும் அவ்வாறு வழிபடும் போது, கோமதி சக்கரமானது நம்முடன் இருக்கும் பட்சத்தில் லட்சுமி கடாட்சம் நன்றாக கிடைக்கும் என்பது நம்பிக்கை. நட்சத்திரங்களுக்குரிய பாகங்களை கீழே காணலாம்.

* அசுவினி, பரணி, கிருத்திகை  நெற்றி.
* ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை  முகப்பகுதி.
* புனர்பூசம், பூசம்  இரு தோள்கள்.
* ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம்  மார்பு பகுதி.
* சித்திரை  வயிற்று பகுதி.
* சுவாதி, விசாகம்  புஜங்கள்.
* அனுசம்  உடலின் மைய பகுதி.
* கேட்டை, மூலம்  இரண்டு கைகள்.
* பூராடம், உத்திராடம்  இரண்டு தொடைகள்.
* திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி  கால் பாதங்கள்.

நாம் எந்த தெய்வத்தை வணங்கினாலும், நமது நட்சத்திரத்திற் குரிய பாகத்தை மனதில் கொண்டு, அந்த பாகம் எதுவோ அப்பகுதியை மனதால் நினைத்தோ அல்லது தொட்டோ வணங்க வேண்டும். அதன் வாயிலாக நமது வேண்டுதல்கள் அதிசயிக்க தக்க விதத்தில் நிறைவேறும் என்பது நம்பிக்கை.

## கோமதி சக்கரம்:

* வலப்புற சுழி அமையப் பெற்ற கோமதி சக்கரத்தை அனை வரும், எவ்வித பாகுபாடும் இல்லாமல் வழிபாடு செய்யலாம்.
* கோமதி சக்கரமானது பூஜையில் வைக்கப்படும்போது. நிமிர்ந்த நிலையில் வைக்கப்படவேண்டும். அதிலுள்ள சுழியானது மேல் நோக்கியவாறு இருக்க வேண்டும். முக்கியமாக சிவப்பு பட்டுத்துணியில் வைத்து அதை ஒரு வெள்ளி அல்லது செம்பு தட்டில் வைக்கவேண்டும்.
* வில்வ இலையானது காய்ந்து விட்டாலும், ஆறு மாதங்கள் வரையில் பலன் தரும். ஆனால் கோமதி சக்கரம் எவ்வளவு நாட்கள் ஆனாலும், தவறாது பலன் அளிக்கக்கூடியது. இன்றைக்கும் வடமாநிலங்களில் உள்ள பெரியவர்கள், ஒருவரை ஆசீர்வதிக்கும்போது அவர்களது தலைப்பகுதியில் கோமதி சக்கரத்தை வைத்து ஆசீர்வதிப்பது வழக்கம்.
* கோமதி சக்கரத்தை விலைக்கு வாங்குவதை காட்டிலும், பெரியோர்களிடமிருந்தோ அல்லது உறவினர்களிடமிருந்தோ அன்பளிப்பாக பெறுவதே சிறப்பானது. விலைக்கு வாங்குவதாக இருந்தாலும் நல்ல நாளாக பார்த்து வாங்குவது சிறப்பைத் தரும்.
* மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் தொடர்புகள் மூலம், அவரவருக்கு தக்கவாறு உயர்வையோ அல்லது தாழ்வையோ அடைகிறார்கள். எழுதிச் செல்லும் விதியின் கைகள், யாரை யாரோடு சந்திக்க வைக்கிறது என்பதை மனிதர்களால் நிர்ணயம் செய்ய முடிவதில்லை. விதியின் தொடர்பு இல்லாமல் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள முடிவதில்லை. ஒருவரோடு கொள்ளும் தொடர்பின் வா யிலாக வாழ்வை சிறப்பாக அமைத்து கொள்ள வலஞ்சுழி அமைப்பு கொண்ட கோமதி சக்கரம் உதவுகிறது.

* ஒரு மனிதருடைய சுழி என்பது, அவருடைய தலை விதியை குறிப்பதற்காக சொல்லப்படுவதாகும். அத்தகைய சுழியானது பல உயிர்களிலும் இறைவனால் அருளப்பட்டதாக அமைந்திருக்கிறது. மனித உடலில் அவை, கைகள், கால்கள், தலை உச்சிப்பகுதி, முன் நெற்றி, ஆகியவற்றில் அமைந்திருக்கும். நம்முடைய காதுகளின் அமைப்பும் வலஞ்சுழியாக அமைந்திருப்பதை காணலாம். எந்த ஒரு தெய்வத்தையும் மூன்றுமுறை சுற்றி வலம் வருவது 'கோமதி சுற்று' எனப்படும். இப்படி உலக இயக்கத்தோடு இணைந்து செயல்படுவதால், கோமதி சக்கரம் மனதின் எண்ணங்களை வலிமை பெறச் செய்கின்றன.
* கோமாதா என்று போற்றப்படும் காமதேனுவின் அம்சம், கோமதி சக்கரத்தில் உள்ளது. எனவே நமது விருப்பங்கள் நிறைவேறக்கூடிய வாய்ப்புகள் தாமாகவே உருவாகும். வலமாக அமைந்த சுழிகள், பசுவின் கண்கள், முதுகு, கால் குளம்புகள், வாலின் மேல் பகுதி, நெற்றி, கழுத்து, அடிவயிறு ஆகிய பகுதிகளில் இருக்கும். காமதேனு என அழைக்கப்படும் பசுவின் சகல சுழிகளும், ஸ்ரீஹரியால் உருவாக்கப்பட்டதால் விசேஷமான அர்த்தம் பெற்றவையாக இருக்கின்றன.
* கோமதி சக்கரத்தை, நாக சக்கர மோதிரமாக செய்து, சர்ப்ப தோஷம் விலக பயன்படுத்துகிறார்கள். அதாவது அதன் சுழியானது பாம்பு தனது உடலை சுற்றி வைத்திருப்பது போன்ற தோற்றத்தில் இருப்பது கவனிக்கத்தக்கது. ராகு தசையால் பாதிக்கப்பட்டவர்கள் கோமதி சக்கரத்துடன் கோமேதக கல்லையும் சேர்த்து வைத்து வீட்டில் வழிபட்டு வரலாம்.
* கேதுவின் தசையானது ஜாதக ரீதியாக பாதிப்பை தரும் அமைப்பில் இருந்தால், அந்த நபர் கோமதி சக்கரத்துடன், வைடூரிய கல்லை வைத்து வீட்டில் வழிபட்டு வரலாம். தங்களது ஜாதகங்களில் கால சர்ப்ப தோஷம் மற்றும் சர்ப்ப தோஷம் இருப்பவர்கள் கோமதி சக்கர வழிபாட்டை செய்து வருவது நல்லது.

# வலம்புரிச் சங்கு

வலம்புரிச் சங்கு பூஜிக்கப்பட்டு வரும் இல்லங்களில், பிரம்ம ஹத்தி முதலான அனைத்துவகை தோஷங்களும் அகன்றுவிடும். 'சங்க மத்யே ஸ்திதம் தோயம் ப்ராமிதம் சங்கரோபரி அங்க லக்ஷ்ணம் மனுஷ்யானாம் ப்ரம்ம ஹத்யாதிகம் தஹேத்' என்பது வேதவாக்கு. வீடு கட்டுபவர்கள் கைப்பிடி அளவுள்ள வலம்புரிச் சங்கை நிலை வாசலில் வைத்து, வாஸ்து விதிப்படி சங்குப் பதிப்பு முறை செய்துவிட்டால், அந்த வீடு மூன்று தலைமுறைக்கு செல்வச் செழிப்போடு குபேர சம்பத்துடன் விளங்கும் என்பது நம்பிக்கை.

ஆலயங்களிலும் கும்பாபிஷேகம் நடைபெறும்போது, யாக சாலைகளில் எண்வகை மங்களப் பொருட்களில் ஒன்றாக வலம்புரிச் சங்கும் ஸ்தாபிக்கப்பட்டு பூஜிக்கப்படுகிறது. அதே போன்று, கார்த்திகை மாத சோமவார (திங்கட்கிழமை) அபிஷேக காலங்களில் 108 சங்குகளுக்கு நடுவில் வலம்புரிச் சங்கு ஒன்றை வைத்து, சிவபெருமானாக வர்ணிக்கப்பட்டு பூஜிக்கப்படும். அபிஷேக ஆராதனைகள் செய்த பிறகு, சங்கு தீர்த்தத்தை நம் மீது தெளிப்பார்கள். சங்கு நீர் உடலில் பட்டாலே அனைத்து துர்சக்திகளும் நம்மை விட்டு விலகும் என்கிறது சாஸ்திரம்.

## புராணங்களில் வலம்புரிச் சங்கு:

அமிர்தம் வேண்டி தேவஅசுரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது வெளிவந்த 16 வகை தெய்விகப் பொருட்களில் வலம்புரிச்சங்கும் ஒன்று. அதை இடக்கையில் ஏந்தியபடி தோன்றிய மகாலட்சுமியை, திருமால் தமது வலக் கையில் பிடித்துக்கொண்டார் என்கின்றன புராணங்கள்.

ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா வைத்திருந்த சங்குக்கு பாஞ்சஜன்யம் என்று பெயர். குருகுல வாசம் முடிந்ததும் குருநாதர் சாந்தீபனி முனிவரிடம், ''குருதட்சணையாக என்ன வேண்டும்?'' எனக் கேட்டார் கிருஷ்ண பரமாத்மா. அவரும் அவர் மனைவியும், தங்கள் ஒரே மகனை பஞ்சஜனன் எனும் அசுரன் கடத்தி கடலுக்குள் வைத்திருப்ப தாகவும், அவனை மீட்டுத் தரும்படியும் வேண்டினார்கள். கிருஷ்ணரும் அந்த அசுரனுடன் போரிட்டு குருவின் மகனை மீட்டு வந்தார். அந்த அசுரன் எரிந்து சாம்பலாகி

ஒன்று திரண்டு சங்கு வடிவமானதால், அதற்கு 'பாஞ்ச ஜன்யம்' என்று பெயர். கண்ணனைப் போன்று பாண்டவர்கள் ஐவருமே ஒவ்வொரு வகையான சங்கை கொண்டிருந்தனர்: தருமர் அனந்த விஜயம்; அர்ஜுனன் தேவதத்தம்; பீமன் மகாசங்கம்; நகுலன் சுகோஷம்; சகாதேவன் மணிபுஷ்பகம்.

கடலில் உருவாகும் சங்குகளில் பல வகை உண்டு. மணி சங்கு, துவரி சங்கு, பாருத சங்கு, வைபவ சங்கு, பார் சங்கு, துயிலா சங்கு, வெண் சங்கு, பூமா சங்கு, திரிசங்கு ஆகியவற்றில் வலம்புரியாகக் கிடைக்கும் சங்குகளுக்கு சக்தி அதிகம் என்கின்றன ஆகம சாஸ்திரங்கள்

திருப்பதி பெருமாள் மணிசங்கு கொண்டிருக்கிறார். இவரைப் போன்றே திருவனந்தபுரம் ஸ்ரீஅனந்தபத்மநாப ஸ்வாமி பாருத சங்கும், திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி பெருமாள் வைபவ சங்கும், திருக்கண்ணபுரம் ஸ்ரீசௌரிராஜ பெருமாள் துயிலா சங்கும் கொண்டு திகழ்கிறார்கள்.

## பூஜிப்பது எப்படி?

வியாழக்கிழமை மாலையில் 5 முதல் 8 மணிவரையிலான குபேர காலம், வெள்ளிக்கிழமை காலை வேளை, பௌர்ணமி, திருவோணம் மற்றும் பூர நட்சத்திர நாட்களில் இந்த பூஜையைத் துவங்கி 32, 48, 54 அல்லது 63 நாட்கள் என்ற எண்ணிக்கையில் செய்து முடிக்கலாம்.

விபூதியால் தேய்த்து சங்கை சுத்தம் செய்ய வேண்டும். அதன் மேற்பாகம் குறைந்தது 8 சந்தனப் பொட்டுகள் வைக்கவேண்டும். பின்னர், வாசனைத் திரவியங்களான ஏலக்காய், ஜாதிக்காய், கிராம்பு, பச்சைக் கற்பூரம், குங்குமப் பூ, துளசி, மஞ்சள் தூள் சிறிதளவு கலந்த நீரை சங்கினுள் இட்டு, மலர்களால் அலங்கரியுங்கள். அடுத்து ஷட்கோண கோலத்தின் மையத்தில் சிவப்புத் துணி விரித்து அதன் மீது சங்கை வைக்கவேண்டும். எதிரில் ஹ்ரீம் கோலம் போட்டு சுபம், லாபம் என்று எழுதிவைக்க வேண்டும். முதலில் சந்தனத்தால் பிள்ளையார் பிடித்துவைத்து, 'ஓம் ஹ்ரீம் கம் கணபதயே நம:' 'ஸ்ரீ குருப்யோ நம:' என்று 3 முறை சொல்லி மலரிட்டு வணங்கியும், 'சங்க பூஜாம் கரிஷ்யே' எனச் சொல்லி வழிபடவும் வேண்டும்.

அடுத்ததாக...

* ‘மம குபேர நிதி தர்சனார்த்தம்’
* ‘ஓம் பாஞ்சஜன்யாய வித்மஹே பவமானாய தீமஹி தந்நோ சங்க ப்ரசோதயாத்’
* ‘குபேர லக்ஷ்மி ரூபாய சங்காய ஸ்வாகதம்... ஸ்வாகதம்... ஸ்வாகதம்...

என்று மூன்றுமுறை சொல்லி நீர்விட வேண்டும்.

அடுத்த நிலை, எல்லோரும் அறிய வேண்டிய ஒன்று. அதாவது வலம்புரிச் சங்கை ஆகம முறைப்படி வர்ணித்து அதில் அமரச் செய்வதற்கு ஏதுவாக, 16 கலைகளையும் ஆவாஹனம் செய்து வழிபட வேண்டும். அதற்குப் பிறகு சங்கை பூஜிக்கவேண்டும்.

*ஓம் அம்ருதா கலாய நம:*

*ஓம் சந்த்ரிகா கலாய நம:*

*ஓம் மானதா கலாய நம:*

*ஓம் காந்தி கலாய நம:*

*ஓம் பூஷா கலாய நம :*

*ஓம் ஜயோத்ஸ்னா கலாய நம:*

*ஓம் துஷ்டி கலாய நம:*

*ஓம் ஸ்ரீகலாய நம:*

*ஓம் புஷ்டி கலாய நம:*

*ஓம் ப்ரீதி ரங்கதா கலாய நம:*

*ஓம் ரதி கலாய நம:*

*ஓம் பூர்ணா கலாய நம:*

*ஓம் த்ருதி கலாய நம:*

*ஓம் பூர்ண முகா கலாய நம:*

*ஓம் சசி ஸ்ரீ கலாய நம:*

*ஓம் காமதாயினீ கலாய நம:*

அடுத்ததாக நவநிதிகளை அழைத்து அர்ச்சிக்கவேண்டும். ‘ஓம் பத்ம நிதயே நம:’ எனத்துவங்கி சங்கம், மகரம், சுகச்சபம், முகுந்தம், குந்தாக்யம், நீலம், மகரம், வரம் என்று ஒன்பது நிதிகளையும் (முன்னும் பின்னுமாக ஓம் நம சேர்த்து) போற்றி வழிபட்டு.

ஓம் நவநிதிதேவதாயை நம; சகலாராதனை சுவர்ச்சிதம்,

ஓம் யக்ஷேஸ்வர ரூபாய மகாசங்காய நம; சகல ஆராதனம் பூஜயேத் என்று வணங்கவேண்டும். பிறகு குபேரனை தியானித்து, அவரது முக்கியமான 16 நாமாக்களால் அர்ச்சிக்க வேண்டும்.

*ஓம் க்லீம் குபேராய நம:*
*ஓம் க்லீம் நித்யேஸ்வராய நம:*
*ஓம் க்லீம் ஸ்ரீபதயே நம:*
*ஓம் க்லீம் நித்யானந்தாய நம:*
*ஓம் க்லீம் பூர்ணாய நம:*
*ஓம் க்லீம் தனலக்ஷ்மி வாசாய நம:*
*ஓம் க்லீம் அஸ்வாரூபாய நம:*
*ஓம் க்லீம் சுகாஸ்ரயாய நம;*
*ஓம் க்லீம் நரவாகனாய நம:*
*ஓம் க்லீம் மிகதைஸ்வர்ய ரூபாய நம;*
*ஓம் க்லீம் சதா புஷ்பக வாகனாய நம:*
*ஓம் க்லீம் சர்வக் ஞாய நம;*
*ஓம் க்லீம் சீல பூஜகாய நம:*
*ஓம் க்லீம் யக்ஷாய நம:*
*ஓம் க்லீம் கட்காறதாய நம:*
*ஓம் க்லீம் சீல பூஜ காய நம:*
*ஓம் க்லீம் ராஜயோக வராய நம:*
*ஓம் ஸ்ரீம் க்லீம் பாஞ்ச ஜன்ய ரூபாய நம:*

குபேர அர்ச்சனை முடிந்தபிறகு, அவல் பாயசம், கற்கண்டு பால் வைத்து, தூபதீப நிவேதனம் செய்யவும். தொடர்ந்து வெள்ளை மற்றும் சிவப்பு நிற மலர்களை எடுத்துக்கொண்டு, தரையில் மண்டியிட்டபடி...

*'ஓம் வடதிசை வல்லவா போற்றி',*
*ஓம் நவநிதி தேவனே போற்றி*
*ஓம் செல்வத்தின் உருவமே போற்றி',*
*ஓம் கடலினில் பிறந்தாய் போற்றி',*
*ஓம் பரந்தாமன் கரமே போற்றி',*

*ஓம் வெண்ணிறத்து மேனியே போற்றி,*
*ஓம் திருமகள் நட்பே போற்றி,*
*ஓம் ஐஸ்வர்ய இருப்பிடமே போற்றி,*
*ஓம் ஆனந்த வடிவினனே போற்றி,*
*ஓம் குபேரனின் இல்லமே போற்றி,*
*ஓம் தோஷங்கள் விரட்டுவோய் போற்றி,*
*ஓம் ஈஸ்வரன் விருப்பமே போற்றி,*
*ஓம் ஏற்றம் தருவோய் போற்றி,*
*ஓம் எளிமையின் சொல்லே போற்றி,*
*ஓம் நாதத்தைக் கொண்டவா போற்றி,*
*ஓம் நலமே தருவாய் போற்றி*

என்று மலர்களைச் சமர்ப்பித்து போற்றி கூறி முடித்ததும் கற்பூர ஆரத்தி செய்ய வேண்டும். நிறைவாக,

* ஓம் விஷ்ணுப்ரியாய வித்மஹே வேத நாதாய தீமஹி
  தந்நோ: ஸங்க ப்ரசோதயாத்
* சங்கு ரூப லக்ஷ்மி குபேர நாராயண ஸ்வாமினே நம:
* கற்பூர நீராஜன தீபம் தரிசயாமி என்று ஆர்த்தி செய்து பிரசாதம் எடுத்துக்கொண்டு சங்கு தீர்த்தத்தை வீட்டின் எல்லா பாகங்களிலும் தெளிக்கவேண்டும்.

## சங்கு பூஜையால் ஏற்படும் நன்மைகள்

வலம்புரிச் சங்கு வீட்டில் இருந்தால் தோஷங்கள், துர்சக்திகள் நெருங்காமல் வீடு பாதுகாப்பாக இருக்கும்; மற்றவர்கள் பொறாமை யால் வைக்கும் ஏவல்கள் நம்மை நெருங்காமல் விலகிவிடும் என்பது நம்பிக்கை.

நீண்ட ஆண்டுகளாக செவ்வாய் தோஷம் காரணமாக திருமணம் தடைப்பட்டு வருந்தும் பெண்கள், 8 செவ்வாய்க்கிழமைகள் வலம்புரிச் சங்கில் பால் வைத்து, அங்காரகனுக்கு செவ்வரளி மலர்களால் 108 நாமாவளி அர்ச்சனை செய்தால், கைமேல் பலன் கிடைக்கும். பிறந்த குழந்தைகள் தொடர்ந்து அழுதுகொண்டிருந்தால் சுத்தமான பாலை சங்கில் ஊற்றிவைத்து, விநாயகரை வணங்கி ஒரு மணி நேரம் கழித்துக் கொடுத்தால் பலன் கிடைக்கும்.

கடன் தொல்லையிலிருந்து மீண்டு வர 16 சங்கு வடிவங்களைக் கோலமாகப் போட்டு, பௌர்ணமி இரவில் குங்குமத்தால் அர்ச்சனை செய்து, குளிகை காலத்தில் கடன் கொடுத்தவரை சந்தித்து சிறிதளவு பணத்தைத் திரும்பக் கொடுத்தால், விரைவிலேயே முழுக்கடனும் அடைபடும்.

சொந்தமான பழைய வீடு எவருக்கும் பயன் படாமல், விற்கவும் முடியாமல் பாழடைந்து கிடந்தால்...வாஸ்து பகவான் விழித்திருக்கும் நாளில், நடுவீட்டில் பிரம்ம ஸ்தானத்தில் வலம்புரிச் சங்கை வைத்து, அதில் வாஸ்து பகவானை எழுந்தருளச் செய்து, மஞ்சள், துளசி இட்ட நீரை வைத்து பூஜிக்க வேண்டும். பிறகு சங்கு தீர்த்தத்தை வேப்பிலையின் உதவியோடு வீடு முழுவதும் தெளிக்கலாம். அத்துடன், செப்பு நாணயம் ஒன்றை மஞ்சள் துணியில் முடிந்து, ஈசான்யபாகத்தில்கட்டிவிட்டால்,விரைவில் அந்தவீட்டை விற்கவோ புதுப்பிக்கவோ நீங்கள் எடுக்கும் முயற்சி வெற்றிபெறும். குழந்தைப் பேறு இல்லாத பெண்கள் வலம்புரிச் சங்கில் பால், குங்குமப்பூ இட்டு சந்தான கணபதியை வரித்து, பூஜை செய்து, 48 தினங்களுக்கு கணவருடன் சேர்ந்து அருந்திவந்தால் பலன் கிடைக்கும்.

ஆலயங்களில் நடைபெறும் சங்காபிஷேக வைபவத்தில் கலந்துகொண்டு வழிபட தோஷங்கள் விலகும்; செல்வம் சேரும்.

ஒருவர் தமது நட்சத்திர அதிதேவதையையும், லட்சுமிகுபேரனையும் யோக எண் மற்றும் (சிறிய) பட உருவில் வலம்புரிச் சங்கில் வைத்து, சில காசுகளும் போட்டு வைத்து தினமும் வழிபட, அபரிமிதமான செல்வச் சேர்க்கை உண்டாகும்.

# நவரத்தினங்கள்

நவரத்தினங்கள் எனப்படுபவை ஒன்பது வகையான இரத்தினக் கற்களாகும். இவை ஆபரணத் தயாரிப்பில் பயன்படுகின்றன. இந்து, சமணம், பௌத்தம், சீக்கியம் மற்றும் பிற மதங்களில் இவை முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒளி குறைவாக இருந்தால், மேலும் வெளிச்சத்தை கூட்டி

தெளிவான படங்கள் எடுப்பது போன்று, எமது உடம்பு கிரகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் நல்ல கதிர்கள் குறைவாக காணப்படும் போது அவற்றைப் பெற்றுத்தரக்கூடிய அந்த கதிகளுக்குரிய கிரகத்தின் அதிஷ்டக் கற்களை பாவிக்கின்றோம். நவரத்தினக் கற்கள் சில நிறக் கதிகளை மாத்திரம் உள்வாங்கும் சக்தி கொண்டவை. அதனால்தான் அவை அந்த நிறத்தை பிரதிபலிக்கின்றது.

நவரத்தினங்கள்: முத்து, வைரம், வைடூரியம், மாணிக்கம், நீலம், மரகதம், புஷ்பராகம், பவளம், கோமேதகம் ஆகியவை ஆகும்.

மாணிக்க மணியானது இரத்தசோகை, கண் நோய், உடல் சோர்வு, இருதயக் கோளாறு போன்றவற்றை தீர்க்கும்.

முத்துமணியானது சுவாசக் கோளாறு, மனவளர்ச்சியின்மை, தொண்டை சம்பந்தமான கோளாறுகள், தலைவலி, தூக்கமின்மை, மனநோய் போன்றவற்றை தீர்க்கும்.

பவழமானது வலிப்பு நோய், மகப்பேரின்மை, விரை வீக்கம், குடலிறக்கம், கல்லீரல் கோளாறு போன்றவற்றை தீர்க்கும்.

மரகதமணி சோம்பல், தூக்கமின்மை, பசின்மை, கண் நரம்பு, முதுகு தொடர்பான கோளாறு போன்ற நோய்கள் தீர்க்கும்.

வைரம் பாலுணர்வு தொடர்பான நோய்கள், சரும வியாதிகள் போன்றவற்றை போக்கும்.

புஷ்பராகம் அணிவதால் கல்லீரல் கணையம், தொடர்பான வியாதிகள், கழுத்து வீக்கம், வயிறு கோளாறு, தைராய்டு சுரப்பிக் கோளாறு, அஜீரணம் போன்ற பிரச்சனைகள் நீங்கும்.

நீல ரத்தினம் அணிவதால் வாதநோய், சிறுநீரக கோளாறு, கீல்வாதம் போன்றவற்றை குணப்படுத்தும்.

வைடூரியம் அணிவதால் சளி, கபம் போன்ற பிரச்சனைகள் விலகும். உடல் கழகாகும்.

கோமேதகம் ரத்தினம் அணிவதால் வாயு கோளாறு, பாலியல் நோய் போன்றவை கட்டுப்படும்.

# ஹோரையை அறிந்தவர் ஹீரோ

ஜோதிடத்தில் பலவிதமான சூட்சுமமான முறைகள் இருக்கின்றன. அவற்றில், மிக முக்கியமானது ஹோரைகள். ஹோரை என்பது ஒவ்வொரு கிரகத்துக்கும் உரிய நேரம். நவக்கிரகங்களில் ராகு கேது சாயா கிரகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மீதம் இருக்கக்கூடிய ஏழு கிரகங்களுக்கும் தினமும் நான்கு மணி நேரம் தங்களுடைய கதிர்வீச்சை செலுத்துவதாக ஓர் கணக்கை நமது முன்னோர்கள் சொல்லிவைத்திருக்கிறார்கள்.

அதன்படி, நவகிரகங்களில் சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி ஆகிய ஏழு கிரகங்களுக்கும் ஹோரைகள் உண்டு. ஹோரை என்பது ஒருமணி நேரம். இந்த சொல்லில் இருந்துதான் அதாவது ஹோரை என்பதில் இருந்துதான் ஆங்கிலத்தில் Hour என்ற வார்த்தை வந்ததாகச் சொல்லுவார்கள்.

## கிரக ஓரைகளின் கால அட்டவணை

| கிழமை | காலம் | 6-7 | 7-8 | 8-9 | 9-10 | 10-11 | 11-12 | 12-1 | 1-2 | 2-3 | 3-4 | 4-5 | 5-6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | பகல் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி |
| | இரவு | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத |
| திங்கள் | பகல் | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி |
| | இரவு | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு |
| செவ்வாய் | பகல் | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் |
| | இரவு | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் |
| புதன் | பகல் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் |
| | இரவு | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி |
| வியாழன் | பகல் | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத |
| | இரவு | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி |
| வெள்ளி | பகல் | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு |
| | இரவு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் |
| சனி | பகல் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் |
| | இரவு | புத | சந் | சனி | குரு | அங் | சூரி | சுக் | புத | சந் | சனி | குரு | அங் |

ஒருநாள் என்பதை தினமும் காலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை அதாவது 24 மணி நேரமாக ஜோதிடத்தில் எடுத்துக் கொள்வோம். பொதுவாக காலை 6 மணி என்பதை சராசரி சூரிய உதய நேரமாகக் கொண்டுதான் ஹோரை கள் கணக்கிடப்படுகின்றன. ஹோரைகள் ஆரம்பிக்கும் நேரம் காலை 6 மணி. ஒருநாளுக்கான ஹோரைகள் என்பது காலை 6 மணி முதல்

மறுநாள் காலை 6 மணி வரையாகும். இதில் அந்தந்த கிழமைக்கான அதிபதியின் ஹோரை அந்தநாளில் காலை 6 மணிக்கு தொடங்கும்.

உதாரணமாக ஞாயிற்றுக்கிழமை என்றால் ஞாயிற்றுக்கிழமை யினுடைய சூரியன். அவருடைய ஹோரை காலை 6 மணிக்கு தொடங்கும். செவ்வாய்க்கிழமையை எடுத்துக் கொண்டால் செவ்வாயினுடைய ஹோரை செவ்வாய் அன்று காலை 6 மணிக்கு தொடங்கும். வெள்ளிக்கிழமை அன்று காலை 6 மணிக்கு சுக்கிரனுடைய ஹோரையானது ஆரம்பிக்கும்.

பொதுவாக புதன் குரு சுக்கிரன் ஆகிய ஹோரைகளில் நல்ல காரியங்கள் தொடங்கலாம். அதேபோல் வளர்பிறையில் சந்திர னுடைய ஹோரையும் நல்ல காரியங்களுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

எந்த ஒரு முகூர்த்த நிர்ணயம் என்றாலும் ஹோரைக்கு லக்ன தோஷமோ திதி தோஷமோ கிழமை தோஷமோ நட்சத்திர தோஷமோ ராகு கால தோஷமோ கரிநாள் தோஷமோ கிடையாது.

## எந்தெந்த ஹோரைகளில் என்னென்ன செய்யலாம்?

### சூரிய ஹோரை :

சூரியனை ராஜகிரகம் என்று அழைப்பார்கள். அரசு மற்றும் அரசியல் சார்ந்த விஷயங்களுக்கு அதிபதி சூரியன். சூரியன் ஹோரையில் அரசு சம்பந்தப்பட்டகாரியங்கள்,வழக்குதொடர்பானவிஷயங்கள்முயற்சித்தால் சிறக்கும். மேலதிகாரிகளை சந்தித்தல், அரசு சார்ந்த முயற்சிகள், சமூகத்தில் மிக உயர்ந்த இடத்தில் இருப்பவர்களை காணுதல் போன்ற செயல்களைச் செய்யலாம். இந்த நேரத்தில் உயில் சாசனம் எழுதலாம். இந்த ஹோரையில் புதிதாக எந்த அலுவல்களையோ உடன்பாடுகளையோ செய்வது நல்லதல்ல. சுபகாரியங்கள் செய்யயவும் இந்த ஹோரை ஏற்றதல்ல.

### சுக்கிர ஹோரை:

களத்திரம் அழகு கவர்ச்சி சுத்தம் பொருளாதாரம் ஆகிய விஷயங்களுக்கு சுக்கிரன் அதிபதி. அனைத்து சுப காரியங் களுக்கும் இந்த ஹோரையை பயன்படுத்தலாம். வீடு, நிலம், வண்டி வாகனம், ஆடை ஆபரணம் வாங்க மிகவும் உகந்தது. குறிப்பாக பெண்கள் தொடர்பான அனைத்து காரியங்களிலும் நன்மை ஏற்படும். விவசாயம், பயணம், பண பரிமாற்றம் போன்ற வற்றிக்கும் இது ஏற்றது.

## புதன் ஹோரை:

கல்வி கலைகள் நுண்ணறிவு போன்ற விஷயங்களுக்கு அதிபதி புதன். வித்தைகள் சம்பந்தமான அனைத்து முயற்சிகளும் இந்த ஹோரையில் செய்யலாம். கல்வி மற்றும் எழுத்துத் தொடர்பான வேலை தொடங்குவதற்கும் ஆலோசிப்பதற்கும் ஏற்ற நேரம். சுப காரியங்கள் செய்யலாம். நேர்மையான விஷயங்களைப் பற்றிப் பேசவும் முடிவெடுக்கவும் இந்த நேரம் உகந்தது. பயணங்கள் மேற்கொள்ளலாம். புத்திக்கூர்மை வளர்வதற்கு இந்த ஹோரையில் முயற்சி மேற்கொண்டால் சிறப்பு.

## சந்திர ஹோரை:

நவகிரகங்களில் மாதா காரகன் – மனம் காரகன் என்று சொல்லக் கூடியவர் சந்திரன். வளர்பிறை காலத்தில் சந்திரன் ஹோரையும் நல்ல ஹோரையாகவே கருதப்படுகிறது. இந்த ஹோரைகளில் திருமணம், சீமந்தம், குழந்தைகளுக்கு மொட்டை யடித்து காது குத்துதல், பெண் பார்ப்பது, பதவியேற்பது, வேலைக்கு விண்ணப்பிப்பது, வங்கிக் கணக்கு துவங்குதல் ஆகியவற்றைச் செய்யலாம். இந்த ஹோரை காலத்தில் எல்லா சுபகாரியங்களையும் செய்யலாம். குறிப்பாக பெண்கள் தொடர்பு கொண்ட காரியங்கள் ஜெயமாகும். வியாபார விஷயமாகவோ அல்லது புனித யாத்திரையாகவோ பயணம் செய்ய ஏற்றது. பிறரைச் சந்தித்துப் பேசவும் செய்யலாம்.

## சனி ஹோரை :

நவகிரகங்களிலே ஆயுள் தொழில் கர்மா சம்பந்தமான காரியங்களுக்கு அதிபதி. சனி ஹோரை ஒரு சில காரியங்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கும். கடனை அடைப்பதற்கு ஏற்ற ஹோரையாக சனி ஹோரை கருதப்படுகிறது. உதாரணமாக சனி ஹோரையில் ஒருவர் தனது கடனை அடைத்தால், அவர் மீண்டும் கடன் வாங்குவதற்கான சூழல் ஏற்படாது என ஜோதிட நூல்கள் கூறுகின்றன. இதேபோல் பழைய பாக்கி/கணக்குகளை தீர்ப்பது, ஊழ்வினை (பூர்வ ஜென்மப் பாவம்) தீர்ப்பது, பாத யாத்திரை, நடைபயணம் துவங்குவது, மரக்கன்று நடுதல், விருட்சங்கள் அமைத்தல், அணைக்கட்டு நிர்மாணிக்கும் பணிகளை துவக்குவது போன்றவற்றிற்கு சனி ஹோரை சிறப்பானது. தொழில் சம்பந்தமான அனைத்து விஷயங்களையும் முயற்சி செய்ய ஏற்ற ஹோரை இது.

## குரு ஹோரை:

நவகிரகங்களுள் சுபகாரகன் குருவாகும். தனகாரகன் சந்தான காரகன் என்றெல்லாம் அழைக்கக்கூடியவர். அனைத்து சுப காரியங்களுக்கு மிகவும் ஏற்ற நேரம். வியாபாரம், விவசாயம் செய்ய நல்லது. ஆடை ஆபரணப் பொருள்கள் வாங்கவும், வீடு மனை வாங்கவோ,விற்கவோ ஏற்றது. இந்த ஹோரையில் சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பான காரியங்களை தவிர்த்தல் நலம்.

## செவ்வாய் ஹோரை:

ரத்தம் மருத்துவம் பூமி அதிகாரம் போன்ற விஷயங்களுக்கு செவ்வாய் அதிபதியாக திகழ்கிறார். செவ்வாய் ஹோரையில் நிலம் வாங்குவது, விற்பது, அக்ரிமென்ட் போடுவது, சகோதர/பங்காளி பிரச்சினைகள், சொத்து பிரித்தல், உயில் எழுதுவது, ரத்த தானம், உறுப்பு தானம், மருத்துவ உதவிகள் செய்வது இவற்றையெல்லாம் மேற்கொள்ளலாம். இந்த ஹோரையில் ஆயுதப் பிரயோகத்தை துவங்கினால் சக்தி வாய்ந்ததாக இருக்கும். செவ்வாய் அழிவுக்கு உரிய கிரகம். அதிகாரத்தை பிரயோகம் செய்து ஒன்றை கட்டுக்குள் கொண்டு வரக் கூடியது செவ்வாய். எந்தவித நல்ல காரியங்களும் செய்ய உகந்த நேரமல்ல. இருப்பினும் தெய்வீகத் தொடர்பான விஷயங்களையோ, சண்டை சச்சரவுக்கான விஷயங்களையோ பற்றி பேசலாம்.

## எந்தெந்த ராசிகளுக்கு எந்த ஹோரைகள் அனுகூலத்தைக் கொடுக்கும்?

## மேஷம் ஹோரைகள்:

பொதுவில் சூரியன் செவ்வாய் குரு சுக்கிர ஹோரைகள் இவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுக்கும். செவ்வாய் மற்றும் குரு ஹோரையில் சுபநிகழ்ச்சிகள் சொத்து சார்ந்த இனங்கள் அரசாங்கம் சார்ந்த விஷயங்கள் செய்தால் நல்லது. பணம் சார்ந்த விஷயங்களுக்கு சுக்கிர ஹோரையும், கல்வி சார்ந்த விஷயங்களுக்கு சந்திர ஹோரையும் நன்மை தரும். தொழில் சார்ந்த முடிவுகளுக்கு செவ்வாய் புதன் குரு ஹோரைகள் உத்தமம்.

## ரிஷபம் ஹோரைகள்:

சந்திரன் புதன் குரு சுக்கிரன் ஹோரைகள் இவர்களுக்கு அதிக நன்மைகளைக் கொடுக்கும். குரு மற்றும் சுக்கிர ஹோரைகளில் சுப நிகழ்ச்சிகளை ஆரம்பிப்பது அனுகூலத்தைக் கொடுக்கும். புதிய வீடு மனை வாகனம் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு இவர்கள் சுக்கிர ஹோரையை பயன்படுத்துவது நல்லது. ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சுக்கிர ஹோரையில் இவர்கள் மருந்து மாத்திரை சாப்பிட்டால் சீக்கிரமே நோய் குணமடையும்.

## மிதுனம் ஹோரைகள்:

சந்திரன் புதன் குரு சுக்கிரன் ஹோரைகள் நன்மை தரும். புதிய முயற்சிகள் கல்வி தொழில் உத்தியோகம் வீடு மனை வாங்குவது போன்றவற்றை புதன் ஹோரையில் செய்தால் வேகமாக முடியும். சுபநிகழ்ச்சிகளை குரு மற்றும் சுக்கிர ஹோரையில் ஆரம்பிப்பது அல்லது செய்வதன் மூலம் நல்லபடியாக முடியும்.

## கடகம் ஹோரைகள்:

சந்திரன் குரு சுக்கிரன் ஆகிய ஹோரைகள் மிகுந்த அனுகூலத்தைக் கொடுக்கும். கல்வி வேலை பூமி சம்பந்தமான காரியங்கள் வாகனம் சம்பந்தமான முயற்சிகள் அனைத்திற்கும் சுக்கிர ஹோரையை பயன்படுத்துவதால் நன்மைகள் ஏற்படும். சுபநிகழ்ச்சிகளுக்கு குரு ஹோரை நன்மை தரும்.

## சிம்மம் ஹோரைகள்:

பொதுவில் சூரியன் சந்திரன் குரு ஹோரைகள் இவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுக்கும். செவ்வாய் ஹோரையில் சொத்து சார்ந்த விஷயங்களில் நல்ல முடிவுகளை எடுக்க இயலும். அரசு சார்ந்த விஷயங்களுக்கு சூரிய ஹோரை நன்மை பயக்கும்.

## கன்னி ஹோரைகள்:

பொதுவில் சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிர ஹோரைகள் இவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுக்கும். சுக்கிர ஹோரையில் சொத்து சார்ந்த விஷயங்களில் நல்ல முடிவுகளை எடுக்க இயலும். அரசு சார்ந்த விஷயங்களுக்கு புதன் ஹோரை நன்மை பயக்கும்.

சுபநிகழ்ச்சிகளுக்கு குரு ஹோரையையும் பணம் சார்ந்த விஷயங்களுக்கு சுக்கிர ஹோரையையும் பயன்படுத்துவது நன்மை அளிக்கும்.

## துலாம் ஹோரைகள்:

பொதுவில் செவ்வாய் புதன் குரு சுக்கிர ஹோரைகள் இவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுக்கும். செவ்வாய் ஹோரையில் சுபநிகழ்ச்சிகள் சொத்து சார்ந்த இனங்கள் அரசாங்கம் சார்ந்த விஷயங்கள் செய்தால் நல்லது. பணம் சார்ந்த விஷயங்களுக்கு சந்திர ஹோரையும், கல்வி சார்ந்த விஷயங்களுக்கு சுக்கிர ஹோரையும் நன்மை தரும்.

விருச்சிகம் சந்திரன் குரு சுக்கிரன் ஆகிய ஹோரைகள் மிகுந்த அனுகூலத்தைக் கொடுக்கும். கல்வி வேலை பூமி சம்பந்தமான காரியங்கள் வாகனம் சம்பந்தமான முயற்சிகள் அனைத்திற்கும் சுக்கிர ஹோரையை பயன்படுத்துவதால் நன்மைகள் ஏற்படும். சுபநிகழ்ச்சிகளுக்கு குரு ஹோரை நன்மை தரும்.

## தனுசு ஹோரைகள்:

பொதுவில் சூரியன் செவ்வாய் குரு சுக்கிர ஹோரைகள் இவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுக்கும். குரு ஹோரையில் சுபநிகழ்ச்சிகள் சொத்து சார்ந்த இனங்கள் அரசாங்கம் சார்ந்த விஷயங்கள் செய்தால் நல்லது. பணம் சார்ந்த விஷயங்களுக்கு சுக்கிர ஹோரையும், கல்வி சார்ந்த விஷயங்களுக்கு புதன் ஹோரையும் நன்மை தரும். தொழில் சார்ந்த முடிவுகளுக்கு செவ்வாய் குரு ஹோரைகள் உத்தமம்.

## மகரம் ஹோரைகள்:

பொதுவில் சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிர ஹோரைகள் இவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுக்கும். சுக்கிரன் ஹோரையில் சுபநிகழ்ச்சிகள் சொத்து சார்ந்த இனங்கள் அரசாங்கம் சார்ந்த விஷயங்கள் செய்தால் நல்லது. பணம் சார்ந்த விஷயங்களுக்கும் கல்வி சார்ந்த விஷயங்களுக்கும் புதன் ஹோரையும் நன்மை தரும். தொழில் சார்ந்த முடிவுகளுக்கு செவ்வாய் சுக்கிரன் ஹோரைகள் உத்தமம். குடும்பம் சார்ந்த விஷயங்களில் முடிவு எடுப்பதற்கு புதன் ஹோரை நன்மையைத் தரும்.

### கும்பம் ஹோரைகள்:

பொதுவில் சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிர ஹோரைகள் இவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுக்கும். சுக்கிரன் ஹோரையில் சுபநிகழ்ச்சிகள் சொத்து சார்ந்த இனங்கள் அரசாங்கம் சார்ந்த விஷயங்கள் செய்தால் நல்லது. பணம் சார்ந்த விஷயங்களுக்கும் கல்வி சார்ந்த விஷயங்களுக்கும் புதன் ஹோரையும் நன்மை தரும். தொழில் சார்ந்த முடிவுகளுக்கு செவ்வாய் சுக்கிரன் ஹோரைகள் உத்தமம். குடும்பம் சார்ந்த விஷயங்களில் முடிவு எடுப்பதற்கு புதன் ஹோரை நன்மையைத் தரும்.

### மீனம் ஹோரைகள்:

பொதுவில் சூரியன் செவ்வாய் குரு சுக்கிர ஹோரைகள் இவர்களுக்கு அனுகூலத்தைக் கொடுக்கும். குரு ஹோரையில் சுபநிகழ்ச்சிகள் சொத்து சார்ந்த இனங்கள் அரசாங்கம் சார்ந்த விஷயங்கள் செய்தால் நல்லது. பணம் சார்ந்த விஷயங்களுக்கு சுக்கிர ஹோரையும், கல்வி சார்ந்த விஷயங்களுக்கு புதன் ஹோரையும் நன்மை தரும். தொழில் சார்ந்த முடிவுகளுக்கு செவ்வாய் புதன் குரு ஹோரைகள் உத்தமம்.

## எந்தக் கிழமை, என்ன செய்யலாம்?

பொதுவாகவே எல்லா நாட்களிலும் எல்லோருக்கும் ஏதாவது ஒரு செயலைச் செய்யவேண்டிய அவசியம் நிச்சயம் இருக்கும்.

அதேசமயம் எந்த தினத்தில் எதைச் செய்யலாம் என்பதைத் தெரிந்துகொண்டு செயல்படுத்தினால் வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்கின்றன ஜோதிட சாஸ்திரங்கள்!

அதை பார்ப்போம்.

**ஞாயிற்றுக்கிழமை:** சுபகாரியத் தொடக்கம், ஹோமங்கள், யாத்திரை புறப்படுதல், பதவி ஏற்றல், சிகிச்சை மேற்கொள்ளல், விதை விதைத்தல் கிரகப்ரவேசம், வாகனங்கள் வாங்குதல், சூரியன் அல்லது அனுமன் வழிபாடு செய்து தானமளித்தல் செய்யலாம்.

**திங்கட்கிழமை:**

வர்த்தக ஆரம்பம், திருமணம், புராணங்கள் படித்தல், தானிய சேமிப்பு, யாகங்கள், கிணறு வெட்டுதல், மாங்கல்யத்திற்குப் பொன் உருக்குதல், கோயிலுக்குத் திருப்பணி தொடங்குதல், சிவனை வணங்கி அன்னதானம் செய்தல் ஆகியன செய்யலாம்.

**செவ்வாய்கிழமை:**

போருக்கான ஏற்பாடுகள் செய்தல், நெருப்பு சார்ந்த பணிகளைத் தொடங்கிடல், வாகனங்களுக்கு பூஜையிடல், அஸ்திர வித்தைகள் பழகுதல், முருகப்பெருமானை வணங்கி ஏழைகளின் திருமணத்துக்கு உதவிடல் ஆகியவை செய்யலாம்.

**புதன் கிழமை:**

திருமாங்கல்யம் செய்தல், ஹோமசாந்தி செய்தல் மருந்து உண்ண ஆரம்பித்தல், நீதி, தர்மம் பரிபாலித்தல், கல்வி, கலை கற்கத் தொடங்குதல், புதிய வாகனத்தில் பயணம் செய்தல், பெருமாளை வணங்கி ஆடை தானம் அளித்தல் செய்யலாம்.

**வியாழக்கிழமை:**

கடவுள் படங்கள், சிலைகள் வாங்குதல், பிதிஷ்டை செய்தல், சுபகாரியங்கள் செய்தல், குழந்தைகளுக்கு பெயர் சூட்டல், தியானம் பழகத் தொடங்கல், போர்வெல்கிணறு போடுதல், வேதம் கற்றிடத் தொடங்குதல், தட்சிணாமூர்த்தியை வணங்கி அன்னதானம் வழங்குதல், அறிஞர்கள் உரை கேட்டல், மகான்களை தரிசித்தல் ஆகியன செய்யலாம்.

**வெள்ளிக்கிழமை:**

விவாகம், சுமங்கலி பூஜைகள், கிரகப்பிரவேசம், குழந்தை களுக்கு சோறு ஊட்டல், தர்ம ஸ்தாபனங்கள் ஆரம்பித்தல், குழந்தையைத் தொட்டிலில் இடுதல், வளைகாப்பு நடத்துதல், காதுகுத்துதல், மகாலட்சுமியை வணங்கி மங்களப் பொருடகளை தானமளித்தல் ஆகியன செய்யலாம்.

**சனிக்கிழமை:**

பருத்தி விதைத்தல், இரும்பு சார்ந்த பணிகளைத் தொடங்குதல், தீட்சை வாங்குதல், வளர்ப்புப் பிராணிகள் வாங்குதல், இயந்திரங்கள் தொடர்பான பணிகளைச் செய்தல், சனிபகவானை ஆராதித்து மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுதல் ஆகியவற்றைச் செய்யலாம்.

# சீரடி சாய்பாபா

சீரடி சாய்பாபாவை வேண்டிக் கொண்டு, வியாழக்கிழமை தோறும் 9 வாரங்கள் விரதம் இருந்தால்... நினைத்தது நடக்கும் என்பது நம்பிக்கை. சாய்பாபாவை நினைத்து மேற்கொள்ளும் இந்த விரதம் மிக, மிக எளிதானது. சுலபமாக கடை பிடிக்கலாம்.

"இந்த விரதம் கலியுகத்துக்கு ஏற்ற மிக உன்னதமான அற்புதங்கள் நிகழ்த்தும் விரதம். இந்த விரதத்தை தூய மனதுடன், நம்பிக்கையோடு யார் இருக்கிறார்களோ, அவர்களது அத்தனை ஆசைகளையும் பாபா நிறைவேற்றி வைப்பார். ஆனால் விரதம் இருப்பவர்கள் சாய்பாபா மீது உறுதியான நம்பிக்கையும், பொறுமையும் வைக்க வேண்டியது மிக, மிக அவசியம்"

இந்த விரதம் இருப்பவர்கள் 9 வாரம் வியாழக்கிழமையும் ஒரு வேளை உணவு அருந்தி விரதம் இருக்க வேண்டும். பழவகைகள், குளிர் பானங்கள் சாப்பிடலாம் என்றெல்லாம் விரதத்துக்கு விதிமுறைகளை உருவாக்கியுள்ளனர். இது தவிர மேலும் சில விதிமுறைகள் உள்ளன.

ஒரு தூய ஆசனத்தில் மஞ்சள் துணியை விரித்து, சாய் பாபா படத்தை வைக்க வேண்டும். சந்தனம் பூச வேண்டும். மஞ்சள் நிறப்பூ சாத்த வேண்டும். பிறகு பாபாவுக்கு விளக்கு ஏற்றி, ஊதுபத்தி காட்டி வழிபட வேண்டும். ஆரத்தி எடுக்க வேண்டும். இதையடுத்து பாபாவின் மூல மந்திரத்தை உச்சரித்து வழிபட வேண்டும்.

சீரடி சாய் பாபா மூல மந்திரம்

*"ஓம் ஸாயி ஸ்ரீ ஸாயி ஜெய ஜெய ஸாயி"*

இந்த விரதத்தை ஆண்பெண் இரு பாலரும் கடை பிடிக்கலாம். விரதம் இருக்கும் 9 வியாழக்கிழமைகளில் காலை மாலை இரு நேரமும் ஆலயத்துக்குச் சென்று பாபாவை வழிபடுவது நல்லது. வெளியூர் பயணம் செய்ய நேரிட்டாலும் இந்த விரதத்தை தொடரலாம்.

பெண்களுக்கு விலக்கு தொடர்பான உபாதைகள் ஏற்பட்டால் அந்த வாரம் விட்டு விட்டு, அடுத்த வாரம் விரதத்தை தொடரலாம். பெண்கள் இடையில் ஒரு வாரம் விரதம் இருக்க இயலாமல்

போனாலும் பிரச்சினை இல்லை. இப்படி 9 வார விரதத்துக்கு சில விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளது. 9வது வாரம் விரதம் நிறைவு பெறும் போது, 5 ஏழைகளுக்கு உணவு அளிக்க வேண்டும் என்று ஒரு விதி உள்ளது. ஆனால் நிறைய பேரால் நேரடியாக உணவு அளிக்க முடிவதில்லை.

அத்தகைய நிலையில் இருப்பவர்கள் வியாழக்கிழமை அன்னதானம் வழங்கப்படும் பாபா ஆலயங்களில், அதற்கான பணத்தை வழங்கலாம். இந்த விரத முறைகளின் படி விரதமும், விரத நிறைவும் செய்தால் நிச்சயமாக நினைத்தது நடக்கும் என்பது சாய் பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது. சாயிடம் நெருங்க வேண்டுமானால், அவர் அன்பை பரிபூரணமாக பெற வேண்டுமானால், அவர் மீது நம்பிக்கை வைப்பது ஒன்றே போதுமானது.

விரதம் இருங்கள் என்று பாபா சொன்னதே இல்லை. என்றாலும் பாபாவை வேண்டிக் கொண்டு விரதம் இருப்பவர்களுக்கு அவரருளால் பலன் கிடைக்கும் என்பது பக்தர்களின் அனுபவ உண்மை.

## சாய் சத்யவிரத பூஜை

சாய் சத்யவிரத பூஜை என்று ஒன்று உண்டு. இந்த பூஜையில் சத்யநாராயணர் கதைக்குப் பதில் சாய் சரித்திரம் படிப்பது வழக்கம். பாபாவிற்குப் பிடித்த செண்பகப்பூ சாத்தி நவவித பக்தியாலும் அவரை ஆராதிக்கலாம்.

பாபாவின் வழிபாட்டு முறையில் ஒன்று, சர்க்கரையில் அக்கறை இல்லா லீலை. ஒரு வியாழக்கிழமை சின்ன டப்பாவில் சர்க்கரையை எடுத்து வைக்க வேண்டும். 21 நாட்களுக்கு எந்த இனிப்பையும் எந்த வகையிலும் சாப்பிடக் கூடாது. எந்நேரமும் பாபாவை மனதார துதித்தபடி இருக்க வேண்டும். மிகச் சரியாக 21ம் நாள் நாம் எதிர்பார்க்கிற இனிப்பான செய்தி நம்மைத் தேடி வரும்.

கல்கண்டு நைவேத்யம் செய்து பரீட்சை எழுதும் மாணவ மாணவியருக்கு அதை பிரசாதமாக அளித்தால், அவர்கள் தேர்வுகளில் மிகவும் சிறந்து விளங்குவார்கள். திருமணத் தடை

உள்ளவர்கள் தாமரை மாலையை அவர்கள் பிறந்த நட்சத்திர தினத்தன்று பாபாவிற்கு சாத்தி 108 நெல் பொரி உருண்டைகளை 108 எளியவர்களுக்கு தானமாக அளித்தால் பாபாவின் திருவருளால் அவர்களுக்கு உடனே திருமணம் நிச்சயமாகிறது.

கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 11 மட்டைத் தேங்காய்களை எடுத்துக் கொண்டு பாபா ஆலயத்திற்குச் சென்று, அவற்றில் 10 தேங்காய்களை ‘துனி’ (அணையா நெருப்பு) முன் வைத்துப் பிரார்த்திக்க வேண்டும். மீதி ஒரு தேங்காயை வீட்டிற்கு எடுத்துச் சென்று, அதிலிருந்து தமக்குத் தெரிந்த ஏதேனும் இனிப்பைச் செய்து பாபாவிற்கு நிவேதிக்க வேண்டும். பிறகு அதிலிருந்து சிறிதளவு பிரசாதமாக உண்டு, மீதியை தானம் செய்தால் அந்த நோயின் கடுமை நிச்சயம் குறைந்து விடும். நரம்பு, எலும்பு சம்பந்தமான நோய் உடையவர்கள் ஒரு வியாழக்கிழமையன்று துனி விரத பூஜையை ஆரம்பிக்கலாம்.

# ஆலய விதிகள் 50

வழிபாட்டு முறைகளில், ஆலயத்தில் நாம் செய்ய வேண்டிய வற்றைச் செய்தால்தானே பலன் கிடைக்கும். கோயிலுக்குள் என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாது என்பது பற்றி விவரிவாக பார்ப்போம்.

‘‘நாம் சந்தோஷம் நிறைந்த அமைதியான வாழ்வைப் பெறுவ தற்காக, தினந்தோறும் ஆலயத்திற்கு வந்து தெய்வ தரிசனம் பெறுகிறோம். நம்மில் பலர் இறையருளைப் பெறும் ஆர்வத்தில், நம்மையும் அறியாமல் சாஸ்திரங்களின் விதிகளையே மீற விடுகிறோம். இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறார். அவரை வழிபடும்போது இனியாவது சில விதிகளை நாம் பின்பற்றுவோம்.

## கோயில் வழிபாட்டில் கடைபிடிக்க வேண்டிய 50 விதிகள்:

**கோயிலுக்குச் செல்லும் பொழுது...**

1. பிறப்பு, இறப்பு, தீட்டுக்களுடன் கோயிலுக்குள் செல்லக் கூடாது.

2. வெறும் கையுடன் கோயிலுக்குப் போகக்கூடாது. குறைந்த பட்சம் பூக்களையாவது கொண்டு செல்ல வேண்டும்.
3. குளிக்காமல் கோயிலுக்குள் செல்லக் கூடாது.
4. சோம்பல் முறித்தல், தலை சிக்கெடுத்தல், தலை விரித்துப் போட்டுக்கொண்டு செல்லுதல் நிச்சயம் கூடாது.
5. கோயில் அருகில் சென்றதும், கோபுரத்தின் அருகே நின்று, ஆண்கள் அனைவரும் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட வேண்டும்.
6. பெண்கள் தங்கள் இரண்டு கைகளையும் நெஞ்சோடு வைத்துக் கும்பிட்டாலே போதும்.
7. கைலி, தலையில் தொப்பி, முண்டாசு அணிந்துகொண்டு செல்லக்கூடாது.
8. கவர்ச்சியான ஆடைகள், ஈர துணி, ஒராடை மற்றும் அரைகுறை ஆடைகளுடன் கோயிலுக்குள் செல்லக்கூடாது.
9. பசுமடம் உள்ள கோயிலுக்குச் செல்லும்போது, வாழைப்பழம் அல்லது அகத்திக்கீரை கொண்டு செல்வது சிறப்பு.

**கோயிலுக்குள் இருக்கும்பொழுது...**

10. தீபம் ஏற்றி வழிபடுவது சிறப்பு.
11. நமது வேண்டுதல்களை நினைத்து, 48 நாட்கள் (ஒரு மண்டலம்) தொடர்ந்து விளக்கேற்றி வழிபாடு செய்தால், நினைத்தது நிறைவேறும்.
12. சிவன் கோயில் என்றால் மூன்று, ஐந்து, ஏழு என எண்ணிக்கையில் வலம் வருவது சிறப்பு.
13. சிவன் கோயில் என்றால், நந்தி பகவானை வழிபட்ட பின்னரே, சிவபெருமானை வழிபட வேண்டும்.
14. விநாயகரை இரு கைகளால், தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வணங்கி வழிபட வேண்டும்.
15. இறைவனிடம் நம்மையே முழுமையாக அர்ப்பணிக்கும் வண்ணம், ஆண்கள் தரையில் விழுந்து வணங்க வேண்டும்.
16. பெண்கள் அனைவரும், பஞ்சாங்க நமஸ்காரம் முறையில், தலை மற்றும் இரண்டு முழங்கால்களையும் தரையில் படும்படியாக இறைவனை வணங்கி வழிபட வேண்டும்.

17. கோயிலின் உள்ளே உள்ள மற்ற சன்னதிகளை காட்டிலும், கொடி மரத்தின் அருகில் மட்டுமே விழுந்து கும்பிட வேண்டும்.
18. விக்கிரகங்களைத் தொட்டு வணங்கக் கூடாது.
19. சன்னதியின் முன்போ, மற்ற நபர்களிடமோ கைகளைத் தட்டிக் வணங்கக் கூடாது.
20. ஒவ்வொரு சன்னதிக்கும் ஏற்றத் துதி பாடல்கள் பாடி வழிபடுவது சிறப்பு.
21. மந்திரங்கள் மற்றும் துதி பாடல் தெரியாதவர்கள், அந்தச் சன்னதியில் உள்ள தெய்வத்தின் பெயரைச் சொல்லி ஓம் (கணபதியே) போற்றி என்று கூறலாம்.
22. நமது கரங்களை, நமது இதயத்திற்கு அருகில் மார்பிற்கு நேராக வைத்து, மந்திரங்களைச் சொல்லி மனதிற்குள்ளேயே வேண்டிக்கொள்ள வேண்டும்.
23. நந்தியின் கழுத்தில் எந்த ரகசியமும் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.
24. பிரகாரம் வலம் வரும் பொழுது வேகமாக நடக்கக் கூடாது.
25. பலிபீடம்,நந்தி, கோபுரம் நிழலை மிதிக்கக் கூடாது.
26. நந்தி தேவருக்கும் சிவலிங்கத்திற்கும் இடையில் போகக் கூடாது.
27. கோயிலில் விபூதியோ குங்குமமோ கொடுத்தால், அவற்றை வலது கையால் மட்டுமே வாங்க வேண்டும்.
28. நடந்துகொண்டே நெற்றியில் விபூதி இடக்கூடாது.
29. கோயிலுக்குள் உயர்ந்த ஆசனத்தில் அமரக் கூடாது.
30. பலிபீடத்திற்கு உள்ளே சந்நிதியில் யாரையும் வணங்கக் கூடாது.
31. நம்முடைய பேச்சுக்களோ செயல்களோ அடுத்தவர்களுடைய வழிபாட்டையோ, தியானத்தையோ கெடுக்கக் கூடாது.
32. கோயில் உள்ளே உரக்கப் பேசுதல் கூடாது.
33. வீண் வார்த்தைகளும், தகாத சொற்களும் பேசுதல் கூடாது.

34. வெற்றிலை பாக்கு போடுதல், பொடிபோடுதல் நிச்சயம் கூடாது.
35. கோயிலுக்குள் முக்கியமாக பூஜை நேரத்தில் புகைப்படம் எடுக்கக் கூடாது.
36. கோயில் உள்ளே செல்போன் பேசுதல் கட்டாயம் கூடாது. அணைத்து வைப்பது அனைவருக்கும் சிறப்பு.

## தரிசனத்திற்கு முன்னும்.. பின்னும்...

37. கோவிலை வேகமாக வலம் வருதல் கூடாது.
38. தோளில் துண்டுடன் தரிசனம் செய்யக் கூடாது.
39. தரிசனம் செய்த பின், பின்னால் சிறிது தூரம் நடந்து, பின்னர் திரும்ப வேண்டும்.
40. கோயிலுக்குள் உறங்கக் கூடாது.
41. கோயிலில் இருந்து வீட்டிற்குக் கிளம்புவதற்கு முன்பாக, கோயிலில் ஏதாவது ஒரு இடத்தில் சிறிது நேரம் அமர்ந்துவிட்டு பிறகுதான் செல்ல வேண்டும்.

## கோயிலுக்கு வெளியே...

42. கோயிலில் நுழையும் போதும், திரும்பி வரும் போதும் கோபுர தரிசனம் அவசியம்.
43. கோயிலுக்குள் நுழைந்தது முதல் வெளியே வரும் வரை நிதானமாக அவசரம் இன்றி, கடவுளை நமக்குள் உணர்ந்து மந்திரம் கூறி வழிபடுவது சிறப்பு.
44. கோயிலுக்குச் சென்று வந்தபின் வீட்டில் உடனடியாகக் கால்களைக் கழுவக் கூடாது. சிறிது நேரம் அமர்ந்த பிறகுதான் கழுவ வேண்டும்
45. ஸ்தல விருட்சங்களை இரவில் வழிபடக் கூடாது.
46. அஷ்டமி,நவமி, அமாவாசை, பௌர்ணமி, மாத பிறப்பு, சோமவரம், பிரதோஷம், சதுர்த்தி, இந்த தினங்களில் வில்வம் பறிக்கக் கூடாது. இதற்கு முதல் நாள் மாலை யிலேயே பறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.
47. கோயில் சொத்துக்களை எவ்விதத்திலும் அபகரிக்கவோ அனுபவிக்கவோ கூடாது.

48. கோயிலுக்குச் சென்று வந்ததும், குறைந்த பட்சம் ஒருவருக்காவது தானம் செய்ய வேண்டும்.
49. கோயிலுக்கு வரும்பொழுதும், திரும்பிச் செலும்பொழுதும், நமது மனதில் உள்ள அனைத்து விதமான தீய எண்ணங்களையும் முழுவதுமாக அழித்து விட வேண்டும். எந்த கறை படிந்த எண்ணங்களும் நமது மனதில் இருக்கக்கூடாது.
50. கோயிலில் இருந்து நேராக நாம், வீட்டிற்குத்தான் செல்ல வேண்டும்.

கோயில்களில் விதிகளை மதிப்போம். இறையருளைப் பெற்று இன்புறுவோம்!

# ராகு காலம், எமகண்டம்

நல்ல நேரம் பார்த்து ஒரு செயலைச் செய்யும்போது ஏன், ராகு காலம், எமகண்டம் ஆகியவற்றை கெட்ட நேரங்கள் என ஒதுக்குகின்றோம் என்பதை பார்ப்போம்.

இன்றைய வாழ்க்கையில் மனிதர்களுக்கு புதுப் புதுப்பிரச்னை என ஒன்று மாற்றி ஒன்று வந்துகொண்டுதான் இருக்கும். அதை எப்படிச் சமாளித்து வாழ்வது என்பதை சிந்திப்பதில்தான் அவனது பாதி வாழ்க்கையைப் போக்குகிறான். இதற்கு நடுவில், அவன் செய்யவேண்டிய சில நல்ல காரியங்களும் வரும். அப்படி வரும் காலங்களில் அதைச் செய்யத் தகுந்த நல்ல நேரம் அமைய வேண்டும் என்று நினைப்பான்.

நல்ல நேரத்தில் செய்யும் நல்ல காரியங்கள் நல்ல சந்தோஷத் தையும், நிறைவான வாழ்க்கையையும் கொண்டுவரும் என்று நினைப்பான். இப்படி ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் சில நல்ல காரியங்கள் செய்யவேண்டி வரும். அப்படி வரும்போது அதற்கு நல்ல நேரம் பார்க்கும் வழக்கம் உண்டு. நல்ல நேரம் என்பது ராகு காலம், எமகண்டம் எனும் கெட்ட நேரங்கள் இல்லாமல் பார்த்துச் செய்வது வழக்கம். தினந்தோறும் வரும் சரியில்லாத நேரம் என்பது ராகு காலம் மற்றும் எமகண்ட காலம் ஆகும்.

வாரம் என்பது ஏழு நாட்களாகும். ரிஷிகள் ஏழு கிரகங்களுக்கும் ஏழு நாட்கள் தந்தார்கள். இதில் சாயா கிரகங்கள் எனும் நிழல் கிரகங்களான ராகு கேதுவுக்கு நாட்கள் தரமுடியவில்லை. ஆகவே, ராகு கேதுக்கு ஒரு நாளின் 24 மணி நேரத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, ஏழு நாட்களுக்கும் பகிர்ந்தளித்தார்கள்.

ஜாதகத்தில் ராகு, கேது என்பது சர்ப்பங்களுக்கு சம்பந்தப் பட்டவை என்பதால், அது விஷ காலமாக கருதப்படுகிறது. ஆகவே, அது சுபகாரியங்களுக்கு ஏற்ற காலமாக கருதப்படவில்லை, அந்தக் காலத்தை ஒதுக்கி வைத்தார்கள்.

இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். பஞ்சாங்கம் பார்ப்பவர்களுக்குத் தெரியும். ஞாயிற்றுக்கிழமை முதல் சனிக் கிழமை வரை பகல் 12 மணி நேரத்துக்கும் இரவு 12 மணி நேரத்துக்கும் 1 மணி 30 நிமிடம் என்ற கணக்கில் அந்த நாளில் 8 கோள்கள் எந்த வரிசையில் செல்லும் என்பதைக் கணித்து, அதை கௌரி பஞ்சாங்கம் என்று வைத்தார்கள்.

உதாரணமாக, ஞாயிற்றுக்கிழமை, காலை 6 மணி முதல் 7.30 மணிவரை உள்ள காலம் அந்த நாளின் கோளான சூரியனுக்கும், அதற்கு அடுத்த ஒரு மணி முப்பது நிமிடத்தை அதாவது 7.30 மணிமுதல் 9 மணிவரை சந்திரனுக்கும் அதற்கு அடுத்த ஒரு மணி முப்பது நிமிடத்தை செவ்வாய்க்கும் அதற்கு அடுத்து புதனுக்கும் அதற்கு அடுத்து குருவுக்கும், அதற்கு அடுத்து சுக்கிரனுக்கும் அதற்கு அடுத்து சனிக்கும் அதற்கு அடுத்து ராகு/கேதுவுக்கும் கொடுத்தார்கள்.

பிறகு, திங்கட்கிழமை சந்திரன் ஆரம்பம் ஆகும். செவ்வாய்க் கிழமை செவ்வாய் ஆரம்பமாகும். இதில் ராகு காலம் மட்டும் விஷ காலமாக இருந்து அதற்கு அடுத்து அதே வரிசையில் தொடரும். இதில் சூரியன், சந்திரன், புதன், குரு, சுக்கிரன் காலங்கள் சுபத்தன்மையாகவும், மற்ற செவ்வாய், சனி, ராகு/கேது காலங்கள் அசுபத்தன்மையும் கொண்டிருக்கும். இந்தக் காலங்களில் வரக்கூடிய எமகண்டத்தையும் ஒதுக்குவது நல்லது.

உதாரணமாக ஞாயிற்றுகிழமை மாலை 4 மணி 30 நிமிடம் முதல் ராகு காலம். அது விஷ காலம். அதேபோல் மதியம் 12 மணிமுதல் 1 மணி 30 நிமிடம் வரை எமகண்டம் ஆகும். இதை ஒதுக்க வேண்டும். இதில் சில சமயங்களில் சுபக் கிரகங்களின் காலங்கள் வந்தாலும், அதை ஒதுக்குவது நல்லது.

இந்த ராகு காலம் என்பது ஏன் அசுபமாகக் கருதப்படுகிறது. ஜாதகத்தில் ராகு எல்லாவற்றையும் பிரம்மாண்டமாக காட்டும் போது, அதன் காலம் மட்டும் ஏன் சிறப்பில்லையென்றால், ராகு, கேது என்பது தலையும் உடலும் மாறி நிற்கும் ஒரு கிரகம். அதாவது ‘அரூபி’ என்பார்கள். அதனுடைய அந்தத் தன்மை ஒரு நல்ல செயலைச் செய்ய விடாமல் நமது மதியை மயங்கவைத்து செயல்படுவதில் ஒரு தடங்கலைத் தரும்.

நம் மனம் என்பது சந்திரனைக் குறிப்பதால் ராகு எமகண்ட காலங்களில் அதன் தாக்கம் அவ்வளவு சரியாக இயங்காது. அதாவது கிரகண காலங்கள் என்று சொல்லக்கூடிய ராகு, கேதுவால் ஏற்படக்கூடிய சூரிய, சந்திர கிரகண காலங்களில் அதன் ஒளியானது தடைப்பட்டு, நம் ஆத்மாவுக்கும், மனதுக்கும் சரிவர கிடைகாத காரணத்தால் நம் ஆத்மா என்று சொல்லக்கூடிய இதயமும், மனம் சிந்தனை ஆகியவற்றைச் செயல்படுத்தும் மூளையும் இயல்பான கதியில் இருந்து சற்று மாறுபட்டு இயங்குவதால், அதற்கு உண்டான தினப்படியான காலத்தையும் சுபகாரியங்களுக்கு ஒதுக்கி வைக்கும்படி சொன்னார்கள்.

**ராகு:**

கிரக வரிசையில், ராகுவைக் குறிப்பிடவில்லை; கிழமைகளில் இடம் தரவில்லை. ராசிச் சக்கரத்தில் 12 வீடுகள் இருந்தும், ராகுவுக்கு வீட்டு உரிமை இல்லை; ராசிகளின் உட்பிரிவுகளிலும் ராகு இல்லை. ராகுவை சாயாகிரகம் என்கிறது ஜோதிடம்.

கேமத்ரும யோகத்தில், ராசிக்கு 2லும் 12லும் ராகு இருந்தாலும், கிரகம் இல்லாததாகவே கருதப்படும்; வெற்றிடமாகவே ஏற்பர்; நிழல் கிரகம் என ஒதுக்குவர். எல்லாக் கிரகங்களும் வலமாக வந்தால், இவன் இடமாக வருகிறான்.

ராகுவுக்கு சர்ப்பி எனும் பெயர் உண்டு. சர்ப்பி என்றால் ஊர்ந்து செல்லுதல், பரவுதல், நகருதல் என்று அர்த்தம். பாம்பு ஊர்ந்து செல்லும். ஆகவே, பாம்பின் வடிவமென ராகுவைச் சொல்வார்கள்.

சந்திரர்களைத் துன்புறுத்துகிறான் ராகு என்கிறது புராணம். ராகுவை சனிக்கிரகம் போல் பாவித்துப் பலன் சொல்லலாம் என்கிறது ஜோதிடம். ராகு வழிபாடு என்பது, வேத காலத்தில் இருந்தே தொடர்கிறது. உலகம் தோன்றும் வேளையில், வானசாஸ்திரத்தில், ராகு இடம் பிடித்துவிட்டான்.

போற்றுதலுக்கு உரிய கிரகங்களில் ராகுவையும் சேர்க்கலாம். ராகுவை அழைக்க, கயான: சித்ர: என்கிற மந்திரத்தை ஓதச் சொல்கிறது வேதம். ராம் ராஹவே நம: எனும் பீஜாக்ஷர மந்திரத்தைச் சொல்லலாம்; 16 உபசாரங்களை இந்த மந்திரம் சொல்லி நிறைவேற்றலாம். சதுர் பாஹும் கட்க வரசூலசர்மகரம்ததா காலாதி தைவம் ஸூர்யாஸ்யம் ஸர்பப்ரத்யதி தைவதம் என்ற ஸ்லோகம் சொல்லி, ராகுவுக்கு மலர் சொரிந்து, வணங்கலாம். வாழ்க்கைப் பயணத்தை எளிதாக்குவான் ராகு. கைகளுக்கு வலுவூட்டுபவன் ராகு என்கிறது புராணம்.

ராகு காலத்தில் நம் பால் முனீஸ்வரர் ஆலயத்தில் உள்ள நாகக் கன்னியம்மன் ஆலயத்தில் வழிபட்டு நலன் பெறலாம்.

``யோகக்காரகன் என்று போற்றப்படும் ராகு பகவான் செல்வத்தைக் கண்மூடித்தனமாக அள்ளித்தரும் அற்புத வள்ளல்''

மண்ணுலகில் பிறந்த மனிதர்களனைவரும் செல்வச் செழிப்புடன் வாழவே விரும்புகிறோம். ஆனால், ஒரு சிலருக்கு மட்டுமே அப்படி செல்வத்துடனும் செல்வாக்குடனும் வாழும் வாழ்க்கை கிடைக்கிறது. கடைக்கோடி நிலையில் இருந்தவர்கள் திடீரென வேகமாக முன்னேற்றம் அடைவதைக் காண்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்று ஆய்வுசெய்து பார்த்தால், அவர்களின் ஜாதகத்தில் ஏதேனும் ஒரு கிரகம் வலுப்பெற்று, அவருடைய தசாபுக்தி நடைபெறும்போது முன்னேற்றம் ஏற்படும். ஆனால், ஒரு சிலருக்கு திடீரென அவர்கள் நினைத்துப் பார்த்திடாதபடி ராஜயோகம் அமையப்பெறுவதையும் காணலாம். `

யோகக்காரகன்' என்று போற்றப்படும் ராகு பகவான் செல்வத்தைக் கண்மூடித்தனமாக அள்ளித்தரும் அற்புத வள்ளல்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து, அமுதம் எடுத்து, அதை உண்டபோது, தேவர்களுக்கு மத்தியில், ராகு எவரும் அறியாதவாறு தேவர்போல வேடந்தரித்து, அமுதத்தை அருந்தச் சென்றார். அப்படி அவர் அமுதத்தை அருந்தும் நேரத்தில் சூரியன், சந்திரனால் கண்டுபிடிக்கப்பட்டார். 'அமுதம்' பரிமாறிக் கொண்டிருந்த மகாவிஷ்ணு, மிகவும் சினமுற்று தமது சக்கரத்தினால் அவரது சிரத்தைக் கொய்துவிட்டார். எனவே, அவரது உடல் தலை வேறு, உடல் வேறு என இரண்டு துண்டுகளாக ஆகிப்போனது.

ஆனால், அமுது உண்டதால் இறவா வரம் பெற்ற ராகு, மகாவிஷ்ணுவை நோக்கி கடுந்தவம் புரியலானார். உடனே, மகாவிஷ்ணு அவர் முன் தோன்றி, ராகுவின் தவத்தைப் புகழ்ந்து, நவகோள்களில் ஒருவனாக மனிதனின் சிரசும் (தலை), பாம்பின் உடலுடன் கருமை நிறம் கொண்டவராக இருந்து அருள்புரிய ஆணையிட்டார். மேலும், தென்மேற்கு திசைக்கு அதிபதியாக, கிரகங்களில் பெண் கிரகமாகவும், நிறங்களில் கருமை நிறமாகவும் வடிவத்தில் உயரமானவனாகவும், கிரக அவயங்களில் தொடை, பாதம், கணுக்காலுக்கு உரியவராகவும், உலோகப் பொருளில் கருங்கல்லாகவும் இருக்கும் ராகுதான் அந்நிய பாஷைகளுக்கும் காரகத்துவம் பெறுகிறார்.

ரத்தினங்களில் கோமேதகத்துக்கும், வஸ்திரங்களில் கருமை நிறத்துக்கும், வாகனங்களில் ஆடாகவும், சமித்தில் அருகாகவும், சுவையில் புளிப்பாகவும், உளுந்து அன்னத்தில் விருப்பம் கொண்டவராகவும், பஞ்ச பூதங்களில் ஆகாய கிரகமாகவும், நாடியில் பித்த நாடி உடையவராகவும் திகழ்கிறார்.

இவரின் அதிதேவதைகள் காளி, துர்கை, கருமாரியம்மன். குணங்களில் ‘தாமஸ குணம்‘ கொண்டவராகவும், திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகிய நட்சத்திரங்களுக்கு அதிபதியாகவும் இருக்கிறார்.

ஒவ்வொரு ராசியிலும் சுமார் ஒன்றரை ஆண்டுகள் சஞ்சரிக்கிறார். இவரது தசாபுக்தி 18 ஆண்டுகளாகும். ‘ராகுவைப் போல் கொடுப்பவரும் இல்லை… ராகுவைப் போல் கெடுப்பவரும் இல்லை’ என்று இவ்வுலகம் புகழ்ந்து போற்றும்படியாகச் செயல்படுபவர் ராகு மட்டுமே.

சாயா கிரகமான ராகு அனைத்து ஜீவராசிகளிலும் அருளாட்சி புரிந்துவருகிறார். எனினும், மானிடர்களாகிய நமக்கு அவரவர் லக்னப்படி சில இடங்களில் சாதாரண பலன்களும், சில இடங்களில் மிகப் பிரபலமான ராஜயோகத்தையும் அள்ளித் தருகிறார்.

* லக்னத்தில் ராகு இருந்தால், ஜாதகர் தேகபலன் உடையவராகவும், பிடிவாத குணம் கொண்டவராகவும், வறட்டு வேதாந்தம் பேசுபவராகவும் இருப்பார்.

* 2ம் இடத்தில் இருந்தால், முன்கோபம் கொண்டவர். சுடுசொல் சொல்பவராக இருப்பார். ஆடம்பரச் செலவு செய்வதில் ஆர்வம் இருக்கும். தனக்கு சரியெனப் படுவதை மட்டுமே செய்வார்.
* 3 ம் இடத்தில் இருந்தால், சகோதரி உடல் நலியும். அகால போஜனமும் ஏற்படும். சதா பிரயாணமும் செய்பவராக ஜாதகர் இருப்பார். பொன் நகைகள் சேரும் பாக்கியம் உண்டு.
* 4 ம் இடத்தில் இருந்தால், தாயாருக்கு உடல் நலிவு ஏற்படும். அகால போஜனமும் சதா பிரயாணமும் செய்பவர். பொன் நகைகள் சேரும் பாக்கியம் உண்டு.
* 5 ம் இடத்தில் இருந்தால், புத்திரத் தடைகளும், தோஷமும் உண்டு. பூர்வ புண்ணியத்தில் தடை இருக்கும்.
* 6ம் இடத்தில் இருந்தால், நல்லறமான இல்லறம், செல்வம் செல்வாக்கு, தீர்க்காயுள் உண்டு.
* 7 ம் இடத்தில் இருந்தால், திருமணத்தடை, கலப்பு மணம், வீண் பழிச்சொல் ஏற்படும். திடீர் யோகமும் உண்டு.
* 8 ம் இடத்தில் இருந்தால், கடின மனம் கொண்டவராக இருப்பார். ஆயுள் விருத்தி உண்டு.
* 9 ம் இடத்தில் இருந்தால், தந்தைக்கு நஷ்டம் ஏற்படும். பிதுர் சொத்துக்களில் வில்லங்கம் உண்டாகும். ஆனாலும், ஜாதகருக்கு பூமி, பொருள் சேர்க்கை உண்டு.
* 10 ம் இடத்தில் இருந்தால், கோடீஸ்வரர். பெண்கள் மூலம் பொருள் சேரும். நவரத்தினங்கள் சேரும். யோகமான வாழ்வு ஏற்படும். வெளிநாடு செல்வார்.
* 11 ம் இடத்தில் இருந்தால், பிதுர் தோஷம் உண்டு. ஜாதகருக்கு திடீர் தனவரவு உண்டு. அசையா சொத்துக்களான நிலத்தின் மூலம் யோகம் கிடைக்கும்.
* 12 ம் இடத்தில் இருந்தால் தூக்கம் கெடும். சதா சிந்தித்துக் கொண்டே இருப்பார். அதிகச் செலவுகள் செய்பவர். சர்ப்ப தோஷமும் உண்டு.

இவரது வீடான கன்னியில் ஆட்சியுடனும், விருச்சிகத்தில் உச்சமாகவும் இருப்பார். ராகு பகவான் பலன் தரக்கூடிய இடங்களாவன. கேந்திரஸ்தானங்களான 1, 4, 7, 10 ம் இடங்களிலோ திரிகோண ஸ்தானங்களான 1, 5, 9 ம் இடங்களிலோ சுபக் கிரகங்களுடன் சேர்ந்தோ, சுபக்கிரகங்களால் பார்வையைப் பெற்று இருந்தாலோ, அவரது தசா புக்தி காலங்களில் திடீர் யோகம் ஏற்பட்டு ஜாதகர் பெரும் செல்வந்தராவார். ஜாதகத்தில் லக்னம் மற்றும் ராசி ஆகிய இடங்களிலிருந்து 2,4, 5, 7, 8, 12ம் இடங்களில் இருப்பது நாகதோஷமாகும். நாகதோஷம் இருந்தால் திருமணத்தடை ஏற்படுத்தும்.

**திருமணத்தின் போது எத்தகைய ஜாதகங்களைச் சேர்க்கலாம்?**

* ஜாதகத்தில் ஆண் பெண் இருவருக்கும் நாக தோஷம் இருந்தால், அத்தகைய ஜாதகங்களைச் சேர்க்கலாம்.
* ஒருவருக்கு ஜாதகத்தில் நாகதோஷம் இருந்து, மற்றவருக்கு நாகதோஷம் இல்லாவிட்டால் பொருத்தக்கூடாது.
* ஆண், பெண் இருவர் ஜாதகத்திலும் சுபர் பார்வையினால் நாகதோஷம் நீங்குமானால் அத்தகைய அமைப்புள்ள ஜாதகத்தை சேர்க்கலாம்.
* அசுவினி, மகம், மூலம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு கேது தசை ஜன்ம நட்சத்திர தசையாக வருவதால் இவர்களுக்கு பாதிப்பு கிடையாது.
* திருவாதிரை சுவாதி, சதயம் ஆகிய 3 நட்சத்திரங்களும் ஜன்ம நட்சத்திரமாக இருந்தால், தோஷமாகாது.

ராகு தோஷமுள்ளவர்கள், திருநாகேஸ்வரம், காளஹஸ்தி ஆகிய இடங்களுக்குச் சென்று பரிகார பூஜை செய்து வரலாம். ராகு காயத்ரி மந்திரத்தை காலை மாலை வேளைகளில் சொல்லி வந்தாலும் நல்ல பலன் கிடைக்கும்.

ராகு காயத்ரி மந்திரம்:

*ஓம் நாகத்வஜாய வித்மஹே*
*பத்ம அஸ்தாய தீமஹி*
*தன்னோ ராகு ப்ரசோதயாத்*

# பெண்கள் செய்ய கூடாதவை

ஒரு வீடு கஷ்டம் இல்லாமல் இருக்க வேண்டும் என்றால், அந்த வீட்டில் இருக்கும் பெண்கள் மகாலட்சுமியின் ஸ்வரூபமாக இருந்தாலே போதும். அந்த வீடு சுபிட்சம் அடையும் என்பதில் ஒரு துளி அளவும் சந்தேகம் இருக்காது. கோடி கோடியாக பணத்தை வீட்டில் வைத்திருந்தால் தான் அந்த வீடு சுபிட்சம் அடையும் என்பதும் அர்த்தம் கிடையாது. தேவைக்கு அளவோடு பணமும் நோய்நொடி அற்ற வாழ்க்கையும் மன நிம்மதியோடும் சேர்ந்து ஒரு வீட்டில் இருந்தால் அந்த வீடு செல்வ செழிப்பு நிறைந்த வீடு தான். ஒரு வீட்டை செல்வ செழிப்பாக வைத்துக்கொள்ள பெண்கள் எப்படி தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் இருக்க வேண்டும் எப்படி இருக்கக் கூடாது என்பதை அறிவோம்.

பெண்கள் எப்போதும் நறுமணமாக இருக்க வேண்டும் என்று தான், வாசனை நிறைந்த பூக்களை தினமும் தலையில் சூடிக் கொள்ள வேண்டும் என்று சொல்லுவார்கள். இன்று நிறைய பெண்களுக்கு தலையில் பூ வைக்கும் பழக்கம் குறைந்துவிட்டது. தினமும் பூ வைத்துக் கொள்ள முடியாவிட்டாலும் பரவா யில்லை நம்முடைய உடலில் கொஞ்சமாக ஜவ்வாது பொடியை பூசிக்கொள்ள வேண்டும். இது பெண்களை எப்போதுமே நறுமணத்தோடு, மகாலட்சுமி அம்சத்தோடு வைத்திருக்கும். பெண்களின் உடம்பில் துர்நாற்றம் வீசினால் அந்த வீட்டில் கஷ்டம் வரும் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

அடுத்தபடியாக தினசரி பெண்கள் தங்களுடைய முகத்தில் மஞ்சள் நிறம் தெரியும்படி மஞ்சளை பூசி தான் குளிக்க வேண்டும் என்ற எந்த அவசியமும் கிடையாது. ஒரு சொட்டு மஞ்சளை உள்ளங்கையில் வைத்து நிறம் தெரியாத அளவுக்கு முகத்தில் பூசி தினமும் குளிப்பது வீட்டிற்கு ஐஸ்வர்யத்தை தேடித்தரும். அடுத்தபடியாக மிக மிக முக்கியமான ஒரு விஷயத்தை பற்றி தான் தெரிந்து கொள்ளப் போகின்றோம். பெண்கள் தலை ஸ்நானம் செய்யும்போது, உச்சி பகுதியில் இருக்கக்கூடிய சக்கரமானது விரிவடையும். அந்த சக்கரம் விரிவடையும் போது பிரபஞ்சத்தில் இருக்கக்கூடிய நல்ல சக்தியானது பெண்களின் உடம்புக்குள் செல்லும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

பெண்களின் உச்சிப் பகுதியில் இருக்க கூடிய சக்கரம் முழுமையாக விரிவடைய வேண்டும் என்றால், முதலில் தலைக்கு 3 கப் அளவு தண்ணீரை, அதாவது மூன்று முறை தண்ணீரை எடுத்து, கையை வைக்காமல் நேரடியாக உச்சந்தலையில் ஊற்ற வேண்டும். இப்படி செய்யும்போது தான், மூன்று முறை தண்ணீரானது உச்சந்தலையில், நேரடியாக படும் போது, உச்சந்தலையில் இருக்கக்கூடிய சக்கரம் முழுமையாக விரிவடைந்து பெண்களுக்குள் பிரபஞ்ச சக்தியானது முழுமையாக உள்ளே புகும் என்றும் சில சாஸ்திர குறிப்புகளில் சொல்லப்பட்டுள்ளது. முயற்சி செய்து பாருங்கள். இதன் மூலம் உங்களுடைய வீட்டில் நிறைய நன்மைகள் நடப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. குளிக்கும்போது நிறைய பெண்கள் தங்களுடைய மனதில் பலவகையான சிந்தனையோடு குளிப்பார்கள். அப்படி குளிப்பதும் தவறு. நல்ல சிந்தனையுடன் மன தெளிவோடு ஸ்நானம் செய்வதுதான் குடும்பத்திற்கு நல்லது. இதுதவிர பெண்கள் எப்போதுமே குளிக்கும்போது ஏதாவது ஒரு ஆடையை தங்களுடைய உடலில் அணிந்து கொண்டு தான் குளிக்க வேண்டும். இப்படி ஏதாவது ஒரு ஆடையை அணிந்து கொண்டு பெண்கள் குளிப்பதன் மூலம், அவர்களுடைய உடம்பில் கெட்ட சக்தியும் ஊடுருவதற்கு வாய்ப்பு கிடையாது. ஒரு நேரம் இல்லை என்றாலும், ஏதாவது ஒரு கெட்ட நேரத்தில் தினந்தோறும் நிர்வாண நிலையில் குளிக்கும் பழக்கம் உள்ள பெண்களின் உடம்பில் கெட்ட சக்தி ஊடுருவதற்க்கு நிறையவே வாய்ப்பு உள்ளது என்பதும் ஒரு உண்மையான விஷயம் தான். பெண்களாக இருந்தாலும் சரி, ஆண்களாக இருந்தாலும் சரி குளிக்கும்போது உடை இல்லாமல் குளிக்கக் கூடாது என்று சொல்கிறது சாஸ்திரம்.

# அஷ்டமி, நவமி

கிருஷ்ணன் பிறந்த அஷ்டமியையும், ராமன் பிறந்த நவமியையும் எல்லோரும் கொண்டாடுகிறார்கள். ஆனால், இன்னொரு பக்கத்தில் அதே நாளில் எதையும் தொடங்குவதற்கு பயப்படுகிறார்கள். இதை பற்றி பார்ப்போம்.

சாதாரணமாக அஷ்டமி, நவமியில் தொட்டது துலங்காது என்றொரு பழமொழி உண்டு. ஆனால், நவராத்திரியில் வரக்கூடிய அஷ்டமி, நவமியையும், கிருஷ்ணனுக்குரிய அஷ்டமியையும், ராமனுக்குரிய நவமி ஆகிய நான்கு நாட்களும் அஷ்டமி, நவமிக்கு உகந்த நாட்கள். 8, 17, 26 ஆம் தேதிகளில் பிறந்தவர்கள் அஷ்டமியில் எது வேண்டுமானாலும் செய்யலாம். இவர்களுக்கு அஷ்டமியால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் எதுவும் இருக்காது. ஏனென்றால் அஷ்டமி என்பது 8வது திதி. அதனால், 8ஆம் எண்ணில் 8, 17, 26 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு அது ஒத்துவரும்.

அதேபோல, 8 என்பது சனி பகவான் ஆதிக்கம் உடைய எண். மகர ராசி, கும்ப ராசிக்காரர்களும் அஷ்டமி அன்று எது வேண்டுமானாலும் செய்யலாம். மேலும், சனி பகவானின் ஆதிக்கம் பிறந்தவர்கள். அதாவது, ஜாதகத்தில் சனி உச்சம் அல்லது ஆட்சி பெற்றவர்களும் அஷ்டமி திதியில் எது வேண்டுமானாலும் செய்யலாம். அது அவர்களை பாதிக்காது.

நவமி என்பது 9வது திதி. 9ஆம் எண்ணில் 9, 18, 27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு நவமி மிகவும் விசேஷமானதாக இருக்கும். இது செவ்வாயுடைய ஆதிக்கம் உள்ள திதி. அதனால் செவ்வாயினுடைய மேஷ ராசி, விருச்சிக ராசியில் பிறந்தவர்களும் நவமியில் எது வேண்டுமானாலும் செய்யலாம்.

அஷ்டமி, நவமி திதிகளில் தொட்டது துலங்காது என முன்னோர்கள் கூறுவர். அஷ்டமி, நவமி திதிகளில் மேற்கொள்ளும் காரியங்கள் விரைவில் முடிவுக்கு வராது; தொடர்ந்து கொண்டே போகும் என்பதாலேயே அப்படிக் கூறினர்.

கோகுல அஷ்டமி திதியில் கிருஷ்ணர் அவதரித்தது அனைவருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அந்தத் திதியில் பிறந்த காரணத்தால் அவர் எத்தனை கஷ்டங்களை அனுபவித்தார். அவதார புருஷன் என்பதால் அவற்றை சமாளித்தார்; இறுதியில் வெற்றி பெற்றார்.

இதேபோல் நவமியில் பிறந்த ராமர், அரியணை ஏற்கும் நேரத்தில் மற உடை தரித்து காட்டிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. சீதையை பிரிந்து அவர் பட்ட துயரங்கள் எல்லாம் நவமி திதியில் அவர் பிறந்த காரணத்தால்தான் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவேதான் நவமி, அஷ்டமி திதிகளில் சுப காரியங்கள் (திருமணம், கிரஹப் பிரவேசம், சொத்து வாங்குதல் உள்ளிட்டவை) மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். ஆனால் இந்தத் திதிகள் தெய்வீக காரியங் களுக்கு (தீட்சை பெறுவது, மந்திரங்கள் ஜெபிப்பது, ஹோமங்கள் உள்ளிட்டவை) உகந்தவை என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். செங்கல் சூலைக்கு நெருப்பு மூட்ட, எதிரிகள் மீது வழக்கு தொடுக்க, ஆயுதங்கள் பிரயோகிக்க, எதிரி நாட்டின் மீது போர் தொடுப்பது போன்ற செயல்களுக்கு அஷ்டமி, நவமி திதிகள் ஏற்றவையாகும்.

# வாஸ்து

நான்கு திசைகளும் நான்குவிதமான நன்மைகளை அளித்து மனிதனை வழிநடத்தக் கூடியவை. ஒவ்வொரு திசைக்கும் அதற்கென சிறப்பம்சங்கள் உள்ளன.

திசைகள் குறித்து தெளிவு பெறுவோம்.

**கிழக்கு:** இந்தத் திசைக்கு அதிபதி இந்திரன். கிழக்கு நோக்கியுள்ள வீடுகளில் வசிப்பவர்களுக்கு இந்திரன் சுகபோக சொத்து சுகங்களை அளிக்கிறார்.

**வடக்கு:** இந்தத் திசைக்கு அதிபதி குபேரன். இவர் வெங்கடேச பெருமாளுக்கே கடன் கொடுத்தவர். இத்திசை நோக்கி வாழ்பவர்களுக்கு சிறப்பான பொருளாதார வளர்ச்சி உண்டு.

**மேற்கு:** இத்திசைக்கு அதிபதி வருணன். இவர் மழைக்கான கடவுள். மேற்கு பார்த்த இல்லத்தினால் ஒரு மனிதனுக்கு நல்ல தைரியமும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தும், புகழும், ஸ்திரமான சந்ததிகளும் வாய்க்கும். தொழிலில் நல்ல பணப் புழக்கமும், அரசாங்க ஆதரவும் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு ஏற்ற திசை மேற்கு.

**தெற்கு:** இந்தத் திசைக்கு அதிபதி எமன். இவர் தர்மத்தைக் காப்பவர். தெற்குப் பகுதியைச் சரியாக உபயோகித்தால் நல்ல உடல் ஆரோக்கியமும் தொழிலில் வெற்றியும் கிட்டும். பரம்பரை

பரம்பரையாக வெற்றிகரமாகத் தொழில் செய்பவர்கள் பலர் தெற்கு நோக்கிய வீடுகளிலேயே பாரம்பர்யமாக வசித்து வந்துள்ளனர்.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு. இப்படியான நான்கு திசைகளை பற்றி நமக்கு நன்கு தெரியும். இந்த நான்கு திசைகளும் சேரும் பக்கவாட்டை கொண்டு தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு என்று பிரித்து வைத்துள்ளனர். இவ்வாறாக நம் பூமி எட்டு திசைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முன்னோர்கள் நாம் கட்டும் வீட்டினை கட்டாயம் வாஸ்து சாஸ்திரத்தின் படி தான் கட்ட வேண்டும் என்பதை நமக்கு கூறியுள்ளார்கள்.

அதற்கு என்ன காரணம்? இந்த எட்டு திசைகளுக்கும் சொந்தக்காரர்கள் யார் யார்? இப்படியான பல தகவல்களை சற்று விரிவாகக் காணலாம். கிழக்கு சூரியன் கிழக்கு பக்கம் உதிக்கின்றது. நம் பூமி இந்த கிழக்கு பக்கத்தை நோக்கி தான் சுழல்கின்றது. காலையில் உதிக்கும் சூரியனிலிருந்து நாம் பெறப்படும் ஒளியில் அதிக சக்தி உள்ளது. அதன் சக்தியை உணர்ந்த முன்னோர்கள், கிழக்கு பக்கமாக நின்று "சூரிய நமஸ்காரம்" செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர். சூரியனின் கதிர்வீச்சு ஒளியானது நம் வீட்டு வாசலில் விழ வேண்டும் என்பதற்காகத்தான் கிழக்கு பக்கமாக நம் வாசலை வைக்கின்றனர். கடவுள்கள் கிழக்கு திசையில் இருந்து வந்ததாகவும் சில நூல்கள் கூறுகின்றது. கிழக்கில் இந்திரன் வாசம் செய்கின்றார்.

மேற்கு இது சூரியன் உதிக்கும் திசைக்கு எதிர்ப்பக்கம் உள்ளது. கிழக்கு திசையில் இருந்து வந்த கடவுள் மேற்கு திசையாக சென்று சொர்க்கத்தை அடைந்தார்கள் என்றும் சில நூல்கள் கூறுகின்றது. ஆகையால் மேற்கு திசையை நோக்கி உள்ள வாசலும் சிறந்தது தான். வருண பகவான் மேற்கு திசையில் வாசம் செய்கின்றார். வடக்கு சூரியன் உதிக்கும் திசையை பார்த்து நாம் நிற்கும் பொழுது நமக்கு இடப்புறம் உள்ள திசை வடக்கு ஆகும். குபேர பகவான் வடக்கு திசையில் வாசம் செய்கின்றார். வாஸ்து சாஸ்திரப்படி வடக்கு திசை மிகவும் சிறந்தது. இந்தத் திசையில் நம் வீட்டின் வாசல் அமைந்தால் செல்வ வளம் பெருகும். வடக்கு திசையில் ஒரு போதும் தலை வைத்து தூங்கக் கூடாது.

தெற்கு சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்து நாம் நிற்கும் பொழுது வலப்புறம் உள்ள திசை தெற்கு ஆகும். தெற்கு திசையில் வாசம் செய்பவர் "எமன்" ஆவார். தெற்கு பக்கம் நோக்கி வாசல்

வைத்துள்ள வீடு என்றாலே நமக்கு ஒருவிதமான பயம் வந்துவிடும். காரணம் இந்த திசையில் எமன் வாசம் செய்கிறார் அல்லவா? ஆனால் வாஸ்து சாஸ்திர முறைப்படி தெற்கு திசையை நோக்கி கட்டப்பட்ட பல வீடுகள் பல தொழிலதிபர்களுக்கு சொந்தமாக உள்ளது என்பது பலரும் அறியப்படாத உண்மை.

## வடகிழக்கு:

வடக்கும் கிழக்கும் சேரக்கூடிய மூலைதான் வடகிழக்கு மூலை என்கின்றோம். வடகிழக்கு மூலை ஈசனுக்கு உரியது. வடகிழக்கு மூலையைத்தான் ஈசான மூலை என்கின்றோம். ஒரு வீட்டின் ஈசான மூலை சரியான முறையில் அமைந்துவிட்டால் அந்த வீட்டிற்கு எல்லாவிதமான செல்வங்களும் வந்து சேரும்.

## தென்கிழக்கு:

தெற்கும் கிழக்கும் சேரும் மூலைதான் தென்கிழக்கு மூலை என்கின்றோம். தென்கிழக்கு மூலை அக்னிக்கு உரியது. இதனை அக்னி மூலை என்கின்றோம். ஒரு வீட்டின் தென்கிழக்கு மூலை சரியான விதத்தில் அமைய வேண்டும். இல்லை என்றால் பெண்களின் நலன், வம்பு, வழக்கு, தேவையில்லாத சண்டைகள் இவைகள் அனைத்தும் அடிக்கடி வர வாய்ப்பு உண்டு.

## வட மேற்கு:

வடக்கு மேற்கு சேரும் மூலையை தான் வடமேற்கு மூலை என்கின்றோம். இதில் வாயு பகவான் வாசம் செய்கின்றார். இதனை வாயுமூலை என்று கூறுவார்கள். நம் திருமண வாழ்க்கை, நம் வீட்டின் நிம்மதி, செல்வம், புகழ், அரசியல் செல்வாக்கு இவைகளெல்லாம் வடமேற்கு மூலையை வைத்தே அமைகின்றது.

## தென்மேற்கு:

தெற்கும் மேற்கும் சேரும் மூலையை தான் தென்மேற்கு மூலை என்கின்றோம். இதில் நைருதி வாசம் செய்கின்றாள். இதனை “நைருதி மூலை” என்று கூறுவார்கள். ஈசான்ய மூலைக்கு நேரெதிர் மூலையை நைருதி மூலையாக கருதப்படுகிறது. ஈசான மூலையை போன்று இதுவும் முக்கியமான ஒன்று. இதனை “கன்னி மூலை” என்றும் அழைப்பர். நம் முன்னோர்கள் வாஸ்து சாஸ்திரத்தில் கூறியுள்ள விதிமுறைகளை நம்பிக்கையுடன் பின்பற்றி நாம்

விரும்பியவாறு நம் இல்லத்தை அமைத்துக் கொண்டால் அனைத்து செல்வங்களையும் பெற்று, மன நிம்மதியுடன் சந்தோஷமாக வாழலாம்.

## காலி மனை வாங்கும்போது கவனிக்க வேண்டிய முக்கியக் குறிப்புகள்:

காலி மனையானது நான்கு செங்குத்தான (90கு) மூலைகளைக் கொண்டதாக மட்டும் இருக்கவேண்டும். அதாவது காலி மனையானது சதுரமாகவோ அல்லது செவ்வகமாகவோ மட்டும் இருக்கவேண்டும்.

காலி மனையானது சரியான திசைகளை (திசைகாட்டும் கருவியில் 10மு பாகைகளுக்கு மிகாமல்) கொண்டதாக இருக்க வேண்டும்.

காலி மனையானது கட்டாயமாக தவறான தெருக்குத்து களினால் பாதிக்கப்பட்டு இருக்க கூடாது.

காலி மனையானது தெற்கிலும், மேற்கிலும் உயர்ந்த மலைகள், பழைய கோவில் கோபுரங்கள் கொண்டதாகவும், வடக்கிலும், கிழக்கிலும் ஆறு, குளம், ஏரிகள் கொண்டதாகவும் இருப்பது சிறப்பு. இதற்க்கு எதிர்மாறாக இருக்ககூடாது.

காலி மனையானது தெற்கிலும், மேற்கிலும் சற்று மேடாகவும் வடக்கிலும், கிழக்கிலும் சற்று பள்ளமாகவும் இருப்பது சிறப்பு.

காலி மனையானது கட்டாயமாக நல்ல சாலை வசதி கொண்டதாக இருக்க வேண்டும்.

காலி மனையை முதலில் சுத்தம் செய்ய வேண்டும். மரங்கள், முட்செடிகள், கற்கள் ஆகியவைகளை வேருடன் நீக்கி சுத்தம் செய்ய வேண்டும். மேலும் காலி மனையை தெற்கிலிருந்து வடக்காகவும் மற்றும் மேற்கிலிருந்து கிழக்காகவும் சரிவாக இருக்கும்படியும் அமைத்துக்கொள்ளுதல் சிறப்பைத்தரும்.

காலி மனையினை சுற்றி வேலிகள் அமைத்து, உச்ச ஸ்தானத்தில் நுழைவு வாயில்களை அமைத்துக் கொள்ளுதல் மிகவும் சிறப்பைத் தரும்.

வீடு மற்றும் கட்டிடங்கள் கட்டும்போது கவனிக்கவேண்டய முக்கியக்குறிப்புகள்

கட்டப்படும் கட்டிடம் நான்கு செங்குத்தான (90கு) வெளி மூலைகளைக் கொண்டதாக மட்டும் இருக்கவேண்டும். அதாவது கட்டப்படும் கட்டிடம் சதுரமாகவோ அல்லது செவ்வகமாகவோ மட்டும் இருக்கவேண்டும்.

கட்டப்படும் கட்டிடத்திற்கு கிழக்கிலும், வடக்கிலும் கட்டாயமாக காலியிடம் விட்டுக்கட்டவேண்டும் அது மேற்கைவிடவும், தெற்கை விடவும் அதிகமாயிருப்பது சிறப்பு.

கிழக்கிலும், வடக்கிலும் அதிகமான காலியிடம் விட்டுக்கட்டிடம் கட்டும்போது காலி மனையின் மத்தியபகுதியில் வீட்டின் வரவேற்பறையாக வருவதுபோன்று வரைபடம் தயார்செய்வது அவசியம். அதாவது காலி மனையின் பிரம்மஸ்தானத்தில் வீட்டின் வரவேற்பறையாக வருவதுபோன்று வரைபடம் தயார்செய்வது அவசியம்.

கட்டப்படும் கட்டிடத்திற்கு தலைவாசல் காலி மனைக்கு உச்ச ஸ்தானத்தில் வருவதுபோல் வரைபடம் தயார் செய்ய வேண்டும்.

கிழக்கிலும், வடக்கிலும் அதிகமான காலியிடம் விட்டுக்கட்டிடம் கட்டும்போது, கட்டிடம் காலி மனையின் அனைத்துப்பகுதி நடுக் கோட்டினையும் கட்டாயமாக ஆக்கிரமிக்கும்படியாக வரைபடம் தயார்செய்வது அவசியம், அவ்வாறு அமைக்காதபச்சத்தில் தலைவாசலை உச்சஸ்தானத்தில் அமைக்கமுடியாது.

வீட்டினில் ஒரேயொரு படுக்கையறை மட்டும் அமைப்பதானால் அது கட்டாயமாக தென்மேற்குமூலையில்தான் இருக்கவேண்டும்.

வீட்டினில் ஒன்றுக்கு மேற்ப்பட்ட படுக்கையறைகளை அமைப்பதானால் முதலில் தென்மேற்குமூலை படுக்கையறை, இரண்டாவதாக தெற்கு மற்றும் மேற்கு மத்தியப்பகுதிகளில் படுக்கையறைகள், மூன்றாவதாக வடமேற்குமூலை படுக்கையறை, நான்காவதாக வடக்கு மத்தியப்பகுதி மற்றும் கிழக்கு மத்தியப்பகுதி படுக்கையறையென்று திட்டமிடுதல் வேண்டும். மற்றப்பகுதிகளில் படுக்கையறைகள் அமைப்பதை தவிர்த்துவிடுதல் நன்று.

வீட்டின் சமையலறையை தென்கிழக்கு அக்னி மூலையில் சமைப்பவர் கிழக்கு நோக்கி சமைப்பதுபோன்று அமைப்பது சிறப்பு. அவ்வாறு அமைக்கமுடியாதபச்சத்தில் வடமேற்கு வாயு மூலையில் சமைப்பவர் கிழக்கு நோக்கியோ அல்லது வடக்கு நோக்கியோ சமைப்பதுபோன்று அமைக்கலாம்.

வீட்டின் பூஜையறை வடகிழக்கு மூலையில் எட்டு அடிக் குறையாமல் வடக்கிலும், கிழக்கிலும் பெரிய ஜன்னல்களுடனும் பூஜையறையின் கதவுகள் உச்சஸ்தானத்தில் காற்று வந்து செல்வதற்கு ஏதுவாக மணிகள் பொருத்தப்பட்ட துளைகளை யுடையதாக இருப்பது மிகுந்த சிறப்பைத்தரும். அவ்வாறு அமைக்க முடியாதபச்சத்தில் வடக்கு மத்தியப்பகுதில் அமைக்கலாம்.

கழிவறைகள் கட்டிடத்தினுள் வடமேற்கு மூலையிலும், மேற்கு தாய்சுவரின் மத்தியபகுதியிலும் மட்டும்தான் அமைக்கவேண்டும். அவ்வாறு அமைக்கமுடியாதபச்சத்தில் தெற்கு தாய்சுவரின் மத்தியபகுதியில் அமைக்கலாம்.

கிணறு மற்றும் ஆழ்துளைக்கிணறுகள் வடகிழக்கு கிழக்கு அல்லது வடகிழக்கு வடக்கு உச்சப்பகுதிகளில் மட்டும்தான் தோண்ட வேண்டும். கீழ்நிலைத் தண்ணீர்தொட்டி வடகிழக்கு கிழக்கு அல்லது வடகிழக்கு வடக்கு உச்சப்பகுதிகளில் மட்டும் தான் அமைக்க வேண்டும். மேல்நிலைத் தண்ணீர்தொட்டி கட்டிடத்தின் மேல் தென்மேற்கு பகுதியில் நீச்சபகுதிகளில் மட்டும்தான் அமைக்க வேண்டும்.

கழிவுநீர்த்தொட்டி(செப்டிக்டேங்க்) கட்டிடத்தின் வடமேற்கு வடக்கு பகுதிகளில் தாய் மற்றும் தந்தை சுவர்களை தொடாதவாறு அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்க முடியாதபட்சத்தில் வடக்கு மற்றும் கிழக்கு முன்பக்க மத்திய பகுதியில் அமைக்கலாம்.

கட்டப்படும் கட்டிடம் தென்மேற்கு பகுதிகளில் உயரமான தாகவும் வடகிழக்கு பகுதிகளில் உயரம் குறைவாக இருப்பதைப் போன்று திட்டமிடுதல் மிகுந்த சிறப்பைத்தரும்.

போர்டிகோ அமைப்பதாகயிருந்தால் அதன் அகலம் பத்து அடிக்கு மிகாமல் கிழக்கு முன்பகுதி முழுவதுமாக அல்லது வடக்கு முன்பகுதி முழுவதுமாக அல்லது கிழக்கு மற்றும் வடக்கு முன்பகுதியில் முழுவதுமாக அமைக்கலாம். மற்ற பகுதிகளில் போர்டிகோ அமைப்பதைத் தவிர்ப்பது நன்று. மேலும் எந்தத்திசையிலும் தாய் சுவர்களை துண்டிக்காது போர்டிகோ அமைக்கவேண்டும்.

கட்டிடத்தின் வெளிப்பக்க மாடிப்படிக்கட்டுகள் வடமேற்கு வடக்கு மற்றும் தென்கிழக்கு கிழக்கு பகுதிகளில் மட்டும்தான் அமைக்க வேண்டும். மேலும் அதன் கீழ்ப்பகுதிகளில் அடைப்பை

ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு அறைகளையும் அமைக்கக் கூடாது. தூண்களின் துணைகொண்டு மாடிப்படிக்கட்டுகள் அமைக்கலாம் அதனால் எந்தவொரு வாஸ்து குறைபாடும் ஏற்படாது.

கட்டிடத்தின் உள்பக்க மாடிப் படிக்கட்டுகள் தெற்கு தாய் சுவரின் மத்திய பகுதியிலும் மேற்கு தாய்சுவரின் மத்திய பகுதியிலும் மட்டும்தான் அமைக்க வேண்டும். எந்தவொரு உள் மூலைகளிலும் மாடிப்படிக்கட்டுகளை அமைக்கக்கூடாது. உள்பக்க மாடிப் படிக்கட்டுகளின் கீழ்ப்பகுதிகளில் பூஜையறை, படுக்கையறை மற்றும் சாப்பாட்டறை தவிர்த்து கழிவறை பொருள்கள் சேமிக்குமறைகள் அமைக்கலாம். மழைநீர் சேகரிக்கும் தொட்டியினை வடகிழக்கு கிழக்கு அல்லது வடகிழக்கு வடக்கு பகுதிகளில் அமைத்துக்கொள்ளுதல் சிறப்பைத்தரும்.

வாகனங்கள் நிறுத்தும் கொட்டகையை வீட்டின் வடமேற்கு வடக்கு மற்றும் தென்கிழக்கு கிழக்கு பகுதிகளில் தாய் மற்றும் தந்தை சுவர்களை தொடாதவாறு நீச்சபகுதிகளில் மட்டும்தான் அமைக்கவேண்டும். ஆனால் அதற்காக அமைக்கப்படும் வா யிலானது உச்சப்பகுதிகளில் மட்டும்தான் அமைக்கவேண்டும்.

வீட்டிற்கான மின் இணைப்பு பெட்டிகள் வீட்டின் வடமேற்கு வடக்கு மற்றும் தென்கிழக்கு கிழக்கு பகுதிகளில் அமைக்க வேண்டும் மற்றப்பகுதிகளில் மின் இணைப்பு பெட்டிகள் அமைப்பதை தவிர்த்துவிடுதல் நன்று.

தெற்கிலும், மேற்கிலும் கட்டப்படும் மதில்சுவர்கள் உயரமாக வும் தடிமானதாகவும் இருப்பது சிறப்பைத் தரும். வடக்கிலும், கிழக்கிலும் கட்டப்படும் மதில்சுவர்கள் உயரம் குறைவாக இருக்கும்படி மதில் சுவர்களை கட்ட வேண்டும்.

கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளில் ஜன்னல்கள் கட்டாயமாக இருக்க வேண்டும். மேலும் அவைகள் உச்சஸ்தானத்தில் இருக்க வேண்டும். மற்றும் எண்ணிக்கையில் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளின் ஜன்னல்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்க வேண்டும். விருந்தினர் அறைகள் மற்றும் கழிவறைகளை கட்டிடத்தின் வெளிப்பகுதிகளில் அமைப்பதாக இருந்தால் வடமேற்கு வடக்கு பகுதிகளில் தாய் மற்றும் தந்தை சுவர்களை தொடாதவாறு அமைக்கவேண்டும்.

சமையலறையை கட்டிடத்தின் வெளிப்பகுதிகளில் அமைப்ப தாக இருந்தால் தென்கிழக்கு கிழக்கு பகுதிகளில் தாய் மற்றும் தந்தை சுவர்களை தொடாதவாறு அமைக்கவேண்டும்.

வாஸ்து முறையுடன் அமைந்த வீட்டில் அமைதியும், அன்பும், செல்வமும் பொங்கி வழியும். இங்கு முக்கியமான மூலைகளான ஈசான மூலை, அக்னி மூலை, குபேர மூலை, நிருதி ஆகிய மூலைகளில் இருக்கவேண்டிய, இருக்கக்கூடாத பொருட்களைப் பற்றிப் பார்ப்போம்.

ஈசான மூலை (வடகிழக்கு) வழியேயே சகலசௌபாக்கியங் களும் வீட்டிற்குள் வருகின்றது, எனவே இம்மூலையை சுத்தமாக வைக்க வேண்டும்.

ஈசான மூலையில் பூஜையறை, குழந்தைகள் படிப்பறை, படுக்கையறை, வயது முதிர்ந்தவர்களின் படுக்கையறைகளை அமைக்கலாம். ஈசான மூலையை அடைப்பது போல் நிலைப்பேழை வைக்கக் கூடாது. அம்மி, ஆட்டுக்கல், விறகு சுமை, தேவையற்ற பழைய பொருட்களையும் அடைத்து வைக்கலாகாது.

வீட்டின் பிரதான ஈசான மூலையில் கழிப்பறை, குளியலறை, செப்டிக்டேங்க், துணிதுவைக்கும் கல் போன்றவைகள் இருக்கக் கூடாது. பரணில் ஈசான மூலையில் பொருட்களை வைக்கக் கூடாது.

வீட்டின் ஈசான மூலை கீழ்நிலைத் தொட்டி, கிணறு போன்றவை அமைக்க வேண்டிய இடம், ஈசான மூலையில் நீரோட்டம் இல்லாத போது, தென்மேற்கு, தென்கிழக்கு தவிர்த்து கிணறு தோண்டவும், பிறகு ஈசான மூலையில் கீழ்நிலைத் தொட்டி அமைக்கவும்.

அக்னி மூலை தென்கிழக்கு மூலை. இங்கு சமையற்கூடம் இருக்க வேண்டும். பெண்களின் மன, உடல் நலத்தின்மீது ஆதிக்கம் செலுத்தும் மூலை ஆதலால் பழுதில்லாமல் அமைக்க வேண்டும்.

வீட்டின் பிரதான அக்னி மூலையில் சமையற்கூடம் அமைக்க இயலா விடினும் சமையற்கட்டின் அக்னி மூலையில் அடுப்பு இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும். விதிவிலக்காக வாயு (வடமேற்கு) மூலையில் சமையற்கூடமும், அடுப்பும் அமைக்கலாம்.

# காமாட்சி விளக்கு

பெரும்பாலும் முன்னோர்கள் காமாட்சி விளக்கை தான் அதிகளவில் பயன்படுத்தி வந்தார்கள்.

தினந்தோறும் காலை, மாலை என்று இரு நேரங்களில் காமாட்சி விளக்கு ஏற்றி வைத்து இறைவழிபாடு மேற்கொண்டனர்.

அந்த விளக்கை வீட்டில் ஏற்றி வைப்பதால் என்ன நன்மை ஏற்படும்? என்பது குறித்து தெரிந்து கொள்வோம்..

விளக்குகளில் வட்ட முகம், இரட்டை முகம் முதல் 5 முகம் என்று பல விதங்களில் காணப்படுகின்றன. உலக மக்களின் நன்மைக்காக தவம் மேற்கொண்டவர் காமாட்சி அம்மன். அவர், அப்படி தவமிருந்த வேளையில் சகல தெய்வங்களும் காமாட்சி அம்மனுக்குள் அடங்கியது. இதனால், காமாட்சி அம்மனை வழிபட்டால் அனைத்து தெய்வங்களையும் வழிபட்டதற்கான பலன் கிடைக்கும்.

அனைத்து தெய்வங்களும் காமாட்சி அம்மனுக்குள் அடங்கும் என்பதால், ஒவ்வொருவரும் தங்களது குல தெய்வங்களை நினைத்து கொண்டு காமாட்சி விளக்கை ஏற்றி வைத்து வழிபாடு செய்வது ஐதீகம். அப்படி வழிபாடு செய்வதன் மூலம் வீட்டிலுள்ளவர்களுக்கு காமாட்சி அம்மனின் அருளும் குல தெய்வத்தின் ஆசியும் கிடைக்கும்.

ஒரு சிலருக்கு தங்களது குல தெய்வம் எது என்று தெரியாமல் இருக்கும். அப்படி குல தெய்வம் எது என்று தெரியாதவர்கள் காமாட்சி அம்மனை தங்களது குல தெய்வமாக நினைத்து கூட வழிபாடு செய்யலாம். அனைத்து தெய்வங்களின் அருளும் ஒன்றாக கிடைப்பதற்கு திருமணத்தின் போது மணமகள் கையில் காமாட்சி விளக்கை ஏந்திக்கொண்டு வலம் வரச் சொல்கிறார்கள்.

திருமணமாகி கணவன் வீட்டிற்கு செல்லும் மணப்பெண், முதலில் காமாட்சி விளக்கை ஏற்றுவதற்கு இதுதான் காரணம் என்றும் சொல்லப்படுகிறது. அதோடு, காமாட்சி விளக்கில் குல தெய்வமும் இருந்து அருள்புரிவதால் முதன் முதலில் அந்த விளக்கை ஏற்றுவதன் மூலமாக குல தெய்வம் தெரியாதவர்களுக்கு குல தெய்வத்தின் அருள் கிடைக்கும். மேலும், குலம் தழைக்கும் என்பது நம்பிக்கை. மிகவும் புனிதமானது காமாட்சி விளக்கு.

இந்த காமாட்சி விளக்கில் கஜலட்சுமியின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். இது எல்லா வீடுகளிலும் இருக்க வேண்டிய புனிதமான விளக்கு.

பொதுவாக திருமணமான பெண்ணுக்கு சீர்வரிசை கொடுக்கும் போது காமாட்சி விளக்கும், இரு குத்து விளக்குகளும் கொடுப்பார்கள்.

இருளை நீக்கி அருள் என்ற ஒளியை அனைவருக்கும் அருளும் விளக்கு தான் காமாட்சி அம்மன் விளக்கு.

## நைவேத்யம், நிவேதனக் கருத்துகள்

வழிபாடு செய்யும் போது பலர் திருமூர்த்தத்தின் முன்னிலையில் பழம், பட்ய்ணம் பொங்கல், புளியோதரை போன்றவற்றை படைத்து நிவேதனம் செய்கிறார்கள். நாம் உண்பவைகளையும், அணிபவைகளையும், மற்றும் அனுபவிக்கும் எல்லாவற்றையும் நமக்கு ஈந்த அந்தப் பரம் பொருளுக்கு அர்ப்பணித்து அனுபவிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் பொருட்டாகத்தான். மாறாக இறைவனின் பசியாற்ற நிவேதனம் செய்வது என்று நாம் கருதலாகாது.

‘‘உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி’’ என்று அப்பர் பெருமான் தேவாரத்தில் கூறியது போன்று எல்லையற்ற பரம் பொருளுக்கு ஏது உறக்கம்? ஏது பசி? ஏது தாகம்? விசாரமற்ற நிலையிலுள்ள அவருக்கு எந்த வித தேவையுமில்லை.

ஆனால் பிரசாதம் படைத்து வினியோகம் செய்யும் போது வருங்காலத்து தூண்கள், எதிர்காலப் பெரியோர் என் நாம் பாராட்டி வளர்க்கும் சிறார்கள். பிரசாதம் பெறும் பொருட்டு, வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் வழிபாட்டில் கலந்து கொள்கிறார்கள், நாளடைவில் அந்த விளையாட்டுப் போக்கு மாறி தீவிரமான நாட்டம் ஏற்பட வழிவகை செய்கிறது. எனவே இது ஒரு சிறந்த உபாயமாகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனுக்குப் படைக்கும் பொருட்கள் மிகத் தூய்மையாக இருக்க வேண்டுமென தூய்மை

யான பொருட்களையே படைப்போம். எனவே தூய்மையைப் போற்றும் பண்பு நம்மிடம் மேலாக மிளிர்கிறது.

கடவுளின் அருட்பிரசாதமாக நைவேத்திய பொருட்கள் வழங்கப் படும் பொழுது சமத்துவ உணர்வுடன், உயர்வு, தாழ்வு, கருதா மல் நட்பு, பகை என்ற உணர்வு பாராட்டாமல், பொதுவுடைமைக் கொள்கையை பாராட்டுவது போன்று அனைவரும் வாங்கிக் கொள்கின்றனர். அந்த பிரசாதத்தில் இறைவனுடைய அருளாற்றல் நிரம்பி இருப்பதால் அதை உண்ணும்போது நமது உடலும், ஆத்மாவும் மேம்படுகிறது.

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந்தலை.*

என்ற தமிழ் வேதமாம் குறளின் போதனையை, நைவேத்தியச் சடங்கு வேறு ஒரு பங்கில் நடை முடைப்படுத்துகிறது.

தவிரவும் நைவேத்யம் வைப்பதன் நோக்கம், அவைகளுடனாக வைக்கின்ற தீர்த்தம். திருநீறு, குங்குமம், சந்தனம் முதலிய பொருட்கள் மீது பக்தர்களின் தவக்கனல் ஆரோபிதமாகி, அவை கடவுளின் அருளும், சக்தியும் விசேடமாய் பெற்று, அவற்றைப் பெற்று அனுபவிக்கும் பக்தர்களின் மன நிலையில் பரம திருப்தியைக் கொடுக்கிறது. தெளிந்த நீரோடை போன்ற அவர்களது மன நிலை காரணமாக செயலாற்றும் திறனும், ஆக்க பூர்வமான பணியும் மென்மேலும் சிறக்கிறது.

எனவே நாம் திருநீறு, குங்குமம் முதலிய பிரசாதங்களை பெறும் போது மேலே காட்டிய கருத்துக்களை உணர்ந்து, பக்தி பரவசத்தோடு பெற்றுக் கொண்டு அவற்றை சிந்தாமல், சிதறாமல் அணிய வேண்டும்.